

DEPUTY DIRECTOR (INFORMATION)
MADRAS-600 009.
HOME (I & PR) DEPARTMENT

# வளமான வாழ்விற்கு....






நாடு நலம் பெற
வீடு வளம் பெற

அரிய பெரிய திட்டங்கள்
அரசு நிதம் தீட்டுகிறது.

திட்டங்களின் இனிய பலன்
எட்டிடவே எல்லோர்க்கும்

அளவான குடும்பம்
அமைவதுதான் சிறப்பாகும்!

**பிறந்ததைக் காப்போம்!**
**பிறப்பதைத் தவிர்ப்போம்!!**

குடும்ப நலத்துறை
தமிழ்நாடு அரசு.





# இருபது அம்சத் திட்டச் சாதனை ஆண்டு விழா!

இருபது அம்சத்திட்டச் சாதனை ஆண்டு விழா, மத்திய, மாநில செய்தித் துறையின் ஒருங்கிணைப்புக் குழுவினரால், கலைவாணர் அரங்கத்தில் 1-7-'76 அன்று மாலை 6 மணியளவில் கொண்டாடப் பெற்றது.

தமிழ்நாடு அரசின் செய்தி, மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு என். கிருஷ்ணமூர்த்தி அவர்கள், விழா நிகழ்ச்சிக்குத் தலைமை ஏற்ற மேதகு ஆளுநர் சுகாதியா அவர்களையும் விழாவில் கலந்து கொண்ட ஏனைய பெருமக்களையும், விழாவுக்கு வந்திருந்த பொதுமக்களையும் வரவேற்றுப் பேசினார்.

அதன் பின்னர், மேதகு ஆளுநர் அவர்கள் தலைமை உரை ஆற்றினார். 'குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தில் தீவிரம் தேவை' என்று வலியுறுத்திய ஆளுநர், தமது உரையில், குறிப்பிட்டதாவது :

''இருபது அம்சத் திட்டத்தின் சாதனைகளைக் கொண்டாடுகின்ற விழாவாக இது அமைந்துள்ளது. திட்டங்கள் அனைத்தும் நல்ல முறையில் செயல்பட, பொது மக்கள் அனைவரும் ஒத்துழைப்புத் தர வேண்டும்.

''20 அம்சத் திட்டத்தால் தேசிய வாழ்வில் புதிய வேகம் ஏற்பட்டுள்ளது. தமிழ்நாட்டு மக்கள் அதன் பயன்களை அனுபவிக்கத் தொடங்கியுள்ளார்கள். மக்களது நல்வாழ்வை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ள இத்திட்டத்தின் பலன்கள் எல்லோருக்கும் கிடைக்க வகை செய்ய வேண்டும்.

''எவ்வளவு திட்டங்கள் வகுத்துச் செயல்பட்டாலும் நாட்டில் கட்டுப்பாடும், கடமை உணர்ச்சியும் இல்லாவிட்டால், வெற்றி பெற முடியாது.

''இருபது அம்சத் திட்டங்களின் முழுப் பயனையும் அடைய வேண்டுமானால், நாட்டின் மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டும்.

''குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைத் தீவிரமாக அமல்படுத்துவதில் அதிகாரிகளும் பொது மக்களும் தங்களது கவனத்தைச் செலுத்த வேண்டும்.

''மக்களை நல்வழிப் படுத்தி அவர்களிடம் 20 அம்சத் திட்டங்களைப் பற்றி எடுத்துச் சொல்ல வட்டாரங்கள் வாரியாகக் குழுக்கள் அமைத்துச் செயல்பட வேண்டும்.

''தேசீய மயமாக்கப்பட்ட வங்கிகள் விவசாய, தொழில் வளர்ச்சிக்கு ஆற்றிவரும் பணிகள் பாராட்டுக்குரியன. அவை சாதாரண மனிதனின் மேம்பாட்டுத் திட்டங்களுக்கு உதவி செய்ய வேண்டும்.

''இந்த நல்ல நாளில், '20 அம்சத் திட்டம் முழு வெற்றியடையச் செய்வோம்' என்ற உறுதி மொழியை நாம் எடுத்துக் கொள்வோம்.''

தமிழ்நாடு அரசும் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியும் இணைந்து தயாரித்துள்ள 20 அம்சத் திட்ட விளக்கத் திரைப்படத்தினை ஆளுநர் அவர்கள் வெளியிட்டார்கள்.

அதன் பின்னர், திருமதி சௌந்தரா கைலாசம் அவர்களும் இந்திய தேசிய தொழிற் சங்க காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு இராமானுஜம் அவர்களும் சிறப்புரை ஆற்றினார்கள்.

திருமதி சௌந்தரா கைலாசம் அவர்கள் குறிப்பிட்டதாவது :

''இருபது அம்சத் திட்டம் — பல முனைகளை — பல பிரிவுகளை — பல வகைகளைப் படைத்துள்ளது. இது இந்தியாவிற்குக்

**தமிழரசு**
அட்டைப் படம்: கொடைக்கானல் ஏரி.
1—7—1976
மலர்-7
இதழ்-1

திருப்பு முனையாக அமைந்துள்ளது.''

தமது உரைக்குப் பின்னர், அம்மையார் அவர்கள் ஆளுநரையும் பொதுமக்களையும் வரவேற்று, அழகுத் தமிழில் பாடிய வரவேற்புக் கவிதை சிறப்பாக இருந்தது.

திரு. இராமானுஜம் , தமது உரையில் குறிப்பிட்டதாவது :

''20 அம்சத் திட்டம் நாடெங்கும் அமலாகி ஓராண்டு ஆகிறது. ஆனால், தமிழகத்தில் 5 மாதங்கள் தான் ஆகின்றன. 5 மாதங்களிலேயே மாபெரும் முன்னேற்றத்தைக் காண முடிகிறது என்றால், சாதனை சாதாரணமானது அல்ல; குறிப்பிடத் தகுந்தது தான்.''

இறுதியில், மத்திய அரசின் தணிக்கை அதிகாரி திரு. வள்ளியப்பன் அவர்கள் நன்றி கூறினார்.

அதன் பின்னர், இருபது அம்சத் திட்டத்தை விளக்கும் வகையில், தமிழக அரசின் செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் அளித்து, திரு. ஏ.வி.எம். ராஜன் குழுவினர் நடித்த 'இமயம்' என்னும் ஓரங்க நாடகம் நடைபெற்றது. நகைச்சுவை விருந்தையும் நல்ல கருத்துக்களையும் இருபது அம்சத் திட்டத்தினால் விளைகின்ற நன்மைகளையும் எடுத்துக் கூறி, காண வந்த மக்களுக்குக் கருத்து விருந்து வழங்கியது.

9 மணியளவில் விழா இனிது நிறைவுற்றது.



20 அம்சத் திட்ட விளக்கத் திரைப்படத்தை மேதகு ஆளுநர் அவர்கள் வெளியிட்டார்.



'இமயம்' நாடகத்தில் ஒரு காட்சி.





# ஆளுநர் சுற்றுப் பயணத்திலே...





1. தமிழ்நாடு ஆளுநர் திரு. மோஹன்லால் சுகாதியா அவர்கள் 28.6.'76-ல் சங்கரன் கோயில் வட்டாரத்தில், நெடுஞ்சாலை மற்றும் கிராமப்புறச் சாலைத் துறையால் மேற்கொள்ளப் படும் சாலை அமைப்புப் பணிகளைப் பார்வை யிட்டார்.
2. இராமநாதபுரம் பெரிய கண்மாயில் நடை பெறும் வறட்சி நிவாரணப் பணிகளையும், கூலி விவரத்தையும் தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் 27.6.'76-ல் கேட்டறிந்தார்.
3. திருமங்கலம், ஜவஹர் நகரில் பொதுப்பணித் துறையினரால் அமைக்கப்பட்டுள்ள குழாய்க் கிணறை தமிழ்நாடு ஆளுநர் அவர்கள் 29.6.'76-ல் பார்வையிட்டார்.



# வேளாண்மையில் பெண்களின் பங்கு

டாக்டர் எம். எஸ். சுவாமிநாதன்,
தலைமை இயக்குநர்,
இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம்,
புதுடெல்லி.

வேளாண்மை, பண்டு தொட்டு இந்தியப் பெருங்குடி மக்களின் முக்கியத் தொழிலாக இருந்து வருகிறது. இத்தொழிலில் பெண்கள் ஆற்றும் பங்கு மகத்தானதாகும். வீட்டிலும், வயலிலும் அவர்கள் செய்கின்ற பணிகளை ஆராய்ந்தால், ஆண்களைவிட வேளாண்மைத் தொழிலில் பெண்களின் பங்கே அதிகம் என்று கூடச் சொல்லத் தோன்றும்.

வயலில் நாற்று நடுதல், களையெடுத்தல் முதலான பலவேலைகளைப் பெரும்பாலும் பெண்களே செய்கிறார்கள். வயல்களுக்கு வேண்டிய தழை, சருகு முதலான பசுந்தழை உரங்களைச் சேகரித்துக்கொண்டு வருகிறார்கள். வயலுக்கு நீர் பாய்ச்சும் வேலையில், ஆண்களுக்குத் துணையாக நின்று தண்ணீர் இறைக்க உதவி புரிகிறார்கள். பாத்திகளில் தண்ணீரைச் செலுத்துவது மற்றும் பல வேலைகளிலும் பெண்கள் துணை புரிகிறார்கள்.

பயிர் வளரும் காலத்தில் பறவை முதலானவைகளை விரட்டிப் பயிரைக் காக்கிறார்கள். அறுவடை சமயத்தில் கதிர் அறுத்தல், தானியங்களைத் தூற்றுதல், போரடித்துப் பிரித்தெடுத்தல் மற்றும் பல வேலைகளையும் பெண்களே செய்கிறார்கள்.

வீட்டில் கொண்டு போய்த் தானியங்களைச் சேமித்த பிறகுங்கூட, அவற்றை அடிக்கடி உலர வைத்துக் கெட்டுப் போகாமல் பேணுவதில் பெண்களே அதிகக் கவனம் செலுத்துகிறார்கள். வேளாண்மைக்குத் துணைபுரியும் ஆடு மாடுகளுக்குக் காலத்தில் தீவனம் வைத்துப் பேணிக் காக்கிறார்கள். அவற்றின் எருவையும், கழிவுப் பொருட்களையும் சேகரித்து, சேமித்து, வயலில் கொண்டு போய்க் கொட்டுகிறார்கள்.

காப்பி, தேயிலை, ரப்பர்த் தோட்டங்களில் காப்பிக்கொட்டை சேகரித்தல், தேயிலை கிள்ளுதல், பால் சேகரித்தல் முதலான வேலைகளைப் பெண்கள் செய்கிறார்கள். ஏலம், மிளகு, முந்திரித் தோட்டங்களில் பெரும்பான்மையான வேலைகளும் பெண்களாலேயே நடைபெறுகின்றன.

மலைப் பிராந்தியங்களில், சிறப்பாக இமயமலைப் பிராந்தியங்களில், வேளாண்மையின் எல்லா முக்கிய நடவடிக்கைகளையும் பெண்களேதான் செய்கிறார்கள். அவர்களுடைய கடின உழைப்பு இல்லாவிடில், மலைப் பிராந்திய வேளாண்மையே இல்லாமல் போய்விடும் என்றுகூடச் சொல்லி விடலாம். மலைப் பிராந்தியங்களில் உழுவது ஒன்று தவிர இதர எல்லாச் சாகுபடி வேலைகளிலும் பெண்கள் பெரும் பங்கு கொள்கிறார்கள். மலைப்பிராந்தியங்களில் வேளாண்மை செய்வது சமவெளிகளில் செய்வதைவிட அதிகக் கடினமானதாகும்.

மலைப்பிராந்திய நிலங்கள் மேடும் பள்ளமுமாகவும், உயரத்திலும் பள்ளத்திலும் ஒரு வித ஒழுங்குமின்றியிருக்கும். அவை சிறு சிறு நிலங்களாக இருக்குமாதலால், டிராக்டர் முதலிய நவீன சாதனங்களை உபயோகிப்பதற்கும் அதிக வாய்ப்புக்களிரா. ஆகவே, அங்கு கையினாலேயே உழுதல் முதலிய எல்லா நடவடிக்கைகளையும் செய்ய வேண்டும். இதில் மலைப்பிராந்தியங்களில் உள்ள பெண்கள் ஆண்களோடு இணையாக நின்றும், தனித்தும் கடினமாக உழைக்கிறார்கள். பலசமயம் ஆண்களின் உதவியில்லாமல்கூட, அவர்கள் பலவித வேளாண்மை வேலைகளையும் செய்து முடித்து விடுகிறார்கள்.

இப்படி இந்திய நாட்டின் முக்கிய தொழிலான வேளாண்மையில் இன்றியமையாத அங்கமாக விளங்கி, பலப்பல பணிகளையும் புரியும் பெண்களில் பெரும்பாலோர் எழுத்தறிவில்லாதவர்களாக இருப்பதால், நவீன வேளாண்மை முறைகளை அவர்கள் அதிகமாக அறிந்திருக்கவில்லை. அவர்களுக்கு நவீன முறைச் சாகுபடியில் பயிற்சி அளிப்பதற்கான முயற்சிகளும் இதுவரை அதிகமாக மேற்கொள்ளப்படவில்லை. அரசு மேற்கொள்ளும் வேளாண்மை விரிவாக்கத் திட்டங்களிலும் அவர்கள் கலந்து கொண்டு நலம் பெறவில்லை. இந்தக் குறையை நீக்கும் வகையிலும், கிராமப்புறப் பெண்களுக்கு நவீன சாகுபடி முறைகளில் அறிவுண்டாக்கும் நோக்கத்தோடும், சில கிருஷி விஞ்ஞான கேந்திரங்களைத் தனிப்பட அமைக்க இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகம் முயற்சி எடுத்துள்ளது.

இந்திய வேளாண்மை உற்பத்திப் பெருக்கத்திற்கு இன்றியமையாத பங்கினை ஆற்றி வரும் பெண்களுக்கு, நவீன சாகுபடி முறைகளில் பயிற்சியும், விஞ்ஞான அறிவும் தரப்பட்டால் அவர்களது துணையால் வேளாண்மைத் துறையில் நாம் இன்னும் பல மகத்தான சாதனைகளை உண்டாக்க முடியும். இதைக் கருத்திற்கொண்டு அரசும், வேளாண்மைப் பல்கலைக் கழகங்களும், இதர நிறுவனங்களும் செயல் புரிய வேண்டும்.

# புற்று நோயைப் போக்குவோம்



டாக்டர் ஆர். சரசாபாரதி, எம்.டி.
பேராசிரியர்,
நரம்பு நோய்க் குறியியல் துறை,
சென்னை மருத்துவக் கல்லூரி.

வலுவான மணற்பரப்பையும் மிக எளிதில் ஆழமாகத் துளைத்து உள்ளே சென்றுவிடும் ஆற்றல் பெற்றுள்ள கடல் நண்டைப் போலவே, புற்றுநோய் என்னும் பயங்கர நோயும் மனிதர்களின் வலுவான உடலில் எளிதில் பற்றிப் பரவிவிடுகிறது.

இந்தக் காரணத்தினால்தான் புற்றுநோயும் கடல்நண்டும் ஆங்கிலத்தில் கேன்சர் (Cancer) என்னும் ஒரே பெயரால் வழங்கப் படுகின்றன என்று அறிகிறோம்.

குணப்படுத்தும் முயற்சியில் ஈடுபடும்போது எளிதில் நீங்காமலும் சிகிச்சைக்குக் கட்டுப்படாமலும் நிலைத்து நிற்கும் தன்மை பெற்றது புற்றுநோய்.

பன்னெடுங்காலமாகவே புற்றுநோய் உலகத்தில் இருந்து வருகிறது. நம்முடைய சிற்ப, சித்திர நூல்களிலும் இந்நோய் பற்றிய குறிப்புகளையும் விவரங்களையும் காணலாம். எகிப்திய அரசர்களுடைய உடல்களை மருந்திட்டுப் பாதுகாத்துவரும் 'மம்மி' களிலிருந்தும் இக்கொடிய நோய் பற்றி அறியலாம். சுசுருதர் இந்நோயைப் பற்றி விவரமாகக் கூறியிருப்பதுடன், இதை அறுவைச் சிகிச்சையின் மூலம் அகற்றும் முறை பற்றியும் வேறு பல சிகிச்சை முறைகளால் குணமாக்குவது பற்றியும் கூறியிருக்கிறார். தகுந்த முறைகளாலும் இந்நோயைக் குணப்படுத்த முடியாதிருப்பது பல நூற்றாண்டுகளாக விஞ்ஞானிகளுக்கு ஒரு சவாலாக இருக்கிறது. பல நூற்றாண்டுகளாகவே இருந்துவரும் வேறு கொடிய நோய்களில் சிலவற்றைப் பூரணமாக குணமாக்க முடிகிறது. ஒருசிலவற்றிற்கு ஓரளவு குணம் அளிக்க முடிகிறது; ஆனால் புற்றுநோய் மட்டும் மனித இனத்துக்கு ஒரு பெரிய சவாலாகவே அமைந்துள்ளது.

சிகிச்சையினால் இந்நோய் அவ்வப்போது தற்காலிகமாகக் குறைவதுபோலக் காணப்படுகிறதேயன்றி முழுதுமாகக் குணம் ஆவதில்லை. உலகத்தின் பல பாகங்களிலும் இந்நோய் உண்டாகும் காரணம் பற்றி ஆராய்ச்சிகள் நடைபெற்றும் இந்நோய் வரக்காரணம் எது என்று தெரியவில்லை.

**பரவியுள்ளமை:** நோய்களிலேயே கொடுமையான இவ்வியாதியை உலகமெங்கும் பரவலாகக் காணலாம். உலகின் சில பாகங்களில் புற்றுநோயில் பல்வேறு வகைகள் அதிக அளவில் இருக்கின்றன. இது ஓர் அளவு உண்மையாக இருப்பினும், இந்நோயைப் பற்றிய புள்ளிவிவரம் ஒரே சீராக இருந்தால்தான் இதைப்பற்றி முழுமையாக அறிவிப்பு அளிக்கப்படும். உதாரணமாக, 'பர்கிட்டிஸ், லிம்போமா' (Burkitts, lymphoma) என்னும் நோய்கள் தென் ஆப்பிரிக்க எல்லைக்குட்பட்டவை என, ஒரு காலத்தில் எண்ணியிருந்தார்கள். பிறகு இந்நோய்கள் உலகின் வேறு பாகங்களிலும் குறிப்பாக, அமெரிக்கா, இங்கிலாந்து, சிங்கப்பூர், இந்தியா ஆகிய நாடுகளிலும் பரவலாக இருக்கின்றன என்பது தெரிய வந்தது.

**வயது:** அநேகமாக எல்லா வயதினருமே இந்நோயால் பீடிக்கப்படுகிறார்கள். ஆயினும் இரு கட்டங்களில் இந்நோயை அதிகமாகக் காணலாம். ஒன்று, சிறு வயது-அதாவது 6 மாதங்களில் இருந்து 2 ஆண்டுகள் வரை; மற்றொன்று, வயது வந்த கட்டம், ஆதாவது 40-லிருந்து 50வயதுக்குள்! மேற்சொன்ன இருவகைப் பிரிவினரிடையே இந்த நோயை அதிகம் காணலாம். சிலவகைப் புற்றுநோய் சில குறிப்பிட்ட வயதினரைத் தாக்குவதும் உண்டு. எனவே இது விஞ்ஞானிகளுக்கு ஒரு சவாலாகவே இருக்கிறது.

**பால் (Sex)** ஆண், பெண் இரு பாலரையும் இது பாதிக்கிறது. பெண்களைவிட இரு மடங்கு ஆண்களைத் தாக்குகிறது. ஆண்களைப் பொறுத்தவரை இனப்பெருக்கு உறுப்புகளைத் தவிர எல்லா உறுப்புகளையும் இந்நோய் தாக்குகிறது. பெண்களைப் பொறுத்த வரையில், இனப்பெருக்கு உறுப்பான கர்ப்பப்பையையும், மார்பகத்தையும் இந்நோய் தாக்குகிறது. இவ்வகை நோயால் பெண்கள் அதிகமாக அவதியுறுகிறார்கள்; ஆண்களின் இனப்பெருக்கு உறுப்புக்களை இந்நோய் அவ்வளவாகப் பாதிப்பதில்லை.

**பாதிக்கப்படும் உறுப்புக்கள்:**

இந்நோயினால் சாதாரணமாகப் பாதிக்கப்படும் உறுப்புக்கள் பின்வருமாறு:

---

## சிறந்த ஊராட்சிக்குப் பரிசு.

தமிழ்நாட்டில் உள்ள கிராம ஊராட்சிகளில் சிறந்த ஊராட்சியாக தருமபுரி மாவட்டம் பாலக்கோடு வட்டம் ஜெர்த்தலா கிராம ஊராட்சி தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறது.

இந்த ஊராட்சிக்கு ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசு வழங்கப்படும்.

2-வது இடத்தை இராமநாதபுரம் மாவட்டம் சிங்கம்புணரி வட்டம் ஏ. காளப்பூர் கிராம ஊராட்சி பெற்றுள்ளது. இந்த ஊராட்சிக்கு 500 ரூபாய் பரிசு தரப்படும்.

---

**பெண்கள் :**

கர்ப்பப்பை
மார்பகம்
கருமுளை
தைராயிடு சுரப்பி
இரைப்பை-குடல்சார்ந்த பரப்பு
எலும்பு
நுரையீரல்
மூளை

**ஆண்கள் :**

நுரையீரல்,
வாய்ப்புண்,
இரைப்பை, குடல்சார்ந்த பரப்பு
எலும்பு,
மூளை
தைராயிடு சுரப்பி
விரைகள் (Testis)

**நோய்க்குறி ஆய்வியல் :**

இவை எந்த உறுப்புக்களை பாதிப்பவை என்று அறிய வேண்டும். உறுப்பு ஆழமாக அமைந்து நோய் பரவுவதற்கு வேண்டிய இடமும் இருந்தால் வெகு நாட்களுக்கு இந்நோய் பற்றியிருப்பது வெளியே தெரியாது. சொல்லொணுத ஊறு விளைக்கும் வரை வெளியே தெரிய வாய்ப்பில்லை. பாதிக்கப்பட்ட உறுப்பு கண்ணுக்குத் தெரிவது போலவும் முக்கியமான இடங்களிலும் (அதாவது தோல், மூளை, கண் போன்றவை) இருந்தால் அது ஆரம்ப நிலையிலேயே எளிதில் கண்டுபிடிக்கப்படும்.

நோய், நுரையீரலைப் பாதித்திருந்தால், நாட்பட்ட இருமலானது சாதாரண சிகிச்சைக்கும் ஆரம்ப நிலையிலும் பயன் தராது. பிற்பட்ட நிலைகளில் இவற்றுடன் மற்ற இயல்பான ஆடையாளங்களான காய்ச்சல், உடல்நிறை குறைதல், குரலில் மாறுதல், சளியும், சளியில் இரத்தமும் கலந்து இருப்பது ஆகியவை தோன்றும். நுரையீரலைக் கடுமையாகப் பாதித்திருந்தால், இதன், பின் விளைவு சுவாசமுறையில் தெரியவரும்.

இரைப்பை-குடல் சார்ந்த பரப்பில் புற்றுநோய் ஏற்பட்டிருந்தால் அவற்றின் அடையாளம் ஆரம்பத்திலேயே தெரியவரும். வயிற்றுப் போக்கிலும், மலம் சரிவரக் கழியாமையிலும், மலத்தில் இரத்தம் கழிவதிலும் இருந்து தெரியவரும். நோய், இரைப்பையைக் கடுமையாகத் தாக்கி இருந்தால் பசியின்மை, உணவின் மீது வெறுப்பு, வாந்தி ஆகியவை ஆரம்பக் கட்டத்திலும், பிந்திய நிலைகளில் வலியும் ஏற்படும். குணமாக்குவதும் எளிதாயிருக்காது. ஏனெனில் நோய் மிகக் கடுமையான நிலையை எய்தி இருக்கும்.

எலும்பைப் பீடித்திருக்கும் புற்றுநோயின் அறிகுறியாவது; ஒரு கால அளவிற்கு, எந்த எலும்பில் நோய் கண்டிருக்கிறதோ அங்கு கட்டியாக ஒன்று இருக்கும், ஆனல் வலி இருக்காது. பிந்திய நிலைகளில் எலும்பில் ஒரு முறிவு ஏற்படும். இதைக் குணப்படுத்துவது மிகக் கடினம். மேலும் சில காலத்திற்குப் பிறகு, கண்டிருக்கும் வலி, தாங்க முடியாததாகிவிடும். இது குணப்படுத்த முடியாததாகி விடும்.

கருப்பையில் கண்டிருக்கும் புற்று நோய், ஆரம்பநிலையில், கருப்பையிலிருந்து ஒரு வெள்ளை நீர்க்கசிவினல் அறியப்படும். பிறகு, இந்நீர்க்கசிவு தொடர்ந்து இருக்கும். இதனுடன் இரத்தமும் கசியும்; ஒருவகை துர்நாற்றமும் வீசும். அடிக்கடி சிறுநீர் கழிப்பதும் கடுமையான வலியும் தோன்றும். இதற்குத் தகுந்த சிகிச்சையை ஆரம்பத்திலேயே அளிக்க வேண்டும்.

**மார்பகங்களில் புற்றுநோய் :**

மார்பகங்களில் மேல் பாகத்தில் வலியில்லாக் கட்டிகளாக ஆரம்பத்தில் ஏற்படும்; பிறகு மார்பகம் முழுதும் பரவும். இவ்வாறு பரவுவதால் நிணநீர் சுரப்பி சுரப்பது தடைப்படும். இதனல் கை முழுவதும் வீங்கிவிடும். சில சமயங்களில், மார்பகக் காம்புகளில் ஏற்படும் புற்றுநோயில், ஆரம்பத்தில் இரத்தம் கசியும், பிறகு கட்டிபோன்று ஏற்பட்டு வலியும் ஏற்படும்.

புற்றுநோய், உதட்டிலும், முகத்திலும், தோலிலும் முதலில் சிறுசிறு கட்டிகளாக ஆரம்பித்துப் பிறகு வேகமாக வளர்ச்சியடைந்து, கடுமையான வலி கொடுக்கும்.



திடீரென்று வளரும் மச்சங்கள் புற்றுநோயின் விளைவாக இருக்கலாம். இவை பிறகு புண்ணுகி இரத்தம் கசிந்து, கடுமையான வலியுடையதாய் மாறிவிடும்.

தோலில் ஏற்படும் புற்றுநோய் பழைய வடுக்களில் இருந்தும், குறிப்பாக தீப்புண்களில் இருந்தும் உண்டாகும்.

இரத்தத்தில் ஏற்படும் புற்றுநோய் ஆரம்பத்தில், பொதுவாக கடுமையான அயர்ச்சியை ஏற்படுத்தும், விரைவில் நிணநீர் கணுக்களை விரிவாக்கும்; ஈரலையும், மண் ஈரலையும் பெரிதாக்கும். பின்னர், ஈறு, மூக்கு, காதுகள் ஆகிய உறுப்புகளில் இருந்து இரத்தம் கசியும். மலத்திலும் இரத்தம் வெளிவரும். இருமலில் அல்லது வாந்தியில் இரத்தக் கக்கல் இருக்கும்.

வேறு உறுப்புக்களில் ஏற்படும் புற்றுநோய் அவ்வுறுப்புக்களின்

## 2,250 செகண்டரி கிரேடு ஆசிரியர்கள்

தமிழ்நாட்டில், செகண்டரி கிரேடு தகுதி பெற்றிருந்தும், ஹையர் கிரேடுகளாகப் பணி புரிந்து வந்த 2,250 துவக்கப் பள்ளி ஆசிரியர்களை செகண்டரி கிரேடு ஆசிரியர்களாகப் பதவி உயர்வு செய்வதற்குத் தமிழ்நாடு அரசு அனுமதி அளித்துள்ளது. ஜூன் முதல் நாள் முதல் இந்நிலை அமல் செய்யப்படுகிறது. இதனல் நடப்பு நிதியாண்டில் மீதமுள்ள 9 மாதங்களுக்கும் ரூ. 8.10 இலட்சம் கூடுதலாகச் செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

செயல்முறைகளுக்கு இடையூறு விளைவித்து நோய்க்குரிய அடையாளங்களை உண்டாக்கும்.

மூளையில் தோன்றும் புற்றுநோய் கடுமையான தலைவலி, இழுப்பு நோய், பார்வை குறைதல், வாந்தியெடுத்தல், கைகால் சுவாதீனமற்றுப் போதல் ஆகியவற்றை ஏற்படுத்தும்.

ப்ராஸ்டேட் (Prostate) சுரப்பியில் ஏற்படும் புற்றுநோயால் அடிக்கடி சிறுநீர் பிரியும்; சிறுநீரகங்களிலும் ஈரலிலும் ஏற்படும் புற்றுநோய் அவ்வுறுப்புக்களின் செயல்முறைகளைக் கெடுக்கும்.

**புற்று நோய் ஏற்படக் காரணம் என்ன ?**

குறிப்பிட்ட காரணம் ஏதும் இதுவரை கண்டுபிடிக்கவில்லை. ஆனால் பல செயல். எதிர்ச் செயல்களினால் (Inter-actions) பல காரணங்கள் தோன்றுகின்றன.

பாரம்பரியமாகப் புற்றுநோய் வரக் காரணம் உண்டு.

மஞ்சள் ரக வெண்ணெய்யில் (Butter Yellow) சேர்க்கப்படும் ஒருவகை இரசாயனப் பொருளைக் கலக்கும் பணியில் தொடர்ந்து ஈடுபட்டு வருபவர்களுக்கு இந்நோய் உண்டாக இடமிருக்கிறது.

ஐரோப்பிய நாட்டின், அருகே, வடக்குக் கடலில் (North Sea) பரவியிருக்கும் 'அல்ட்ரா வயலட்' கதிர் வீச்சில் (Ultra violet light) தொடர்ந்து பணியாற்றி வரும் மாலுமிகளும் இந்நோயினால் தாக்கப்படுகிறார்கள்.

காஷ்மீர மக்களிடையே கணப் புச்சட்டியை வயிற்றுடன் வைத்துக் கட்டிக்கொள்ளும் வழக்கம் உண்டு. இவ்வாறு நீண்ட காலத்திற்குச் செய்வதால் 'கங்கிரி' என்னும் புற்று நோய்க்கு அவர்கள் ஆளாகிறார்கள்.

ஆந்திர மக்கள் புகையிலையைச் சுருட்டிப் பற்ற வைத்து, எரியும் பாகத்தை வாயினுள் வைத்துக் கொள்வார்கள். இது ஒரு வகைப் புற்றுநோயை உண்டாக்குகிறது.

புடவையையோ, வேட்டியையோ நீண்டகாலமாக இறுக்கக் கட்டுவதனால் அவ்விடத்தில் புற்றுநோய் வருவதற்கு ஏதுவுண்டு. வெற்றிலையை எப்பொழுதும் குதப்புவதால் கன்னத்தில் புற்றுநோய் வருவதற்கு இடமுண்டு. எப்பொழுதும் புகை பிடிப்பதால் நுரையீரலில் புற்றுநோய் வரும்.

அடிக்கடி பிரசவித்தல், கருப்பையில் புற்றுநோயை உண்டாக்கும். வயதானவர்களுக்கு ப்ராஸ்டேட்டிலும் இந்நோய் வரும். யூதர்களில் ஆண்களுக்கு (Circum cision) அறுவைச் சிகிச்சை செய்கிறார்கள். ஆண்குறியில் அடிக்கடி ஏற்படும் கசிவினால் தொடர்ந்து எரிச்சல் ஏற்படும். இதனால் புற்றுநோய் வரும். இச்



சிகிச்சை இதைத் தவிர்க்கிறது. யூதர்களில் ஆண்களுக்குப் புற்றுநோய் வருவதில்லை. யூதப் பெண்களில் கருப்பைப் புற்றுநோய் உள்ளவர்களைக் காண்பதரிது.

மிருகங்களின் பலவித புற்றுநோய்களிலிருந்தும் மனிதனின் இரத்தத்தில் உள்ள புற்றுநோயிலிருந்தும் பலவகையான நோய்க் கிருமிகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. நோய்க் கிருமிகளிலிருந்து புற்றுநோய் பரவும் என்பது 1908-ம் ஆண்டே கண்டுபிடிக்கப்பட்டது. ஆயினும் இயல்பான நிலையில் உள்ள ஒரு 'செல்' எவ்வாறு திடீரென்று இயல்பை மீறி எந்த ஒரு வரையுமின்றி வளர்கிறது என்பது இன்னும் புரியாத ஒரு புதிராகவே இருக்கிறது

**வளர்ச்சியும் இயங்கும் முறையும்**

ஒருமுறை புற்றுநோய் வளர ஆரம்பித்தால், பொதுவாக அதன் வளர்ச்சி வேகமாகவும், பல வழிகளிலும் ஆழ்ந்து பரவி, நிணநீர்க் குழாய்களில் அமிழ்ந்

## மாம்பழத்தின் மகிமை

மாம்பழம் உணவுப் பொருள் மட்டுமல்ல, புற்றுநோய் வராமல் தடுக்கும்ஒப்பற்ற சஞ்சீவியாகவும் திகழ்கிறது.

பெருங்குடல் புற்றுநோய் வருவதைத் தடுக்கக் கூடிய ஆற்றல் மாம்பழத்திற்கு இருக்கிறது என்று ஆய்வின் மூலம் தெரிய வருகிறது.

ஹெர்னியா, இரத்தக் குழாய் வெடிப்பது, குடல் வால் நோய், இருதய நோய் போன்றவையும் வராமல் தடுக்கும் சக்தி மாம்பழத்திற்கு உண்டு.

பொதுவாக நார்ச்சத்துநிறைந்த உணவுகள் புற்றுநோய் வராது தடுக்கின்றன என்று ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். மேலை நாடுகளில் சாப்பாட்டில் நார்ச்சத்துள்ள பொருள்கள் கிடையாதாகையால்,அங்கெல்லாம் நுரையீரல் புற்று நோயும், பெருங்குடல் புற்று நோயும் அதிகமாக இருக்கின்றன.

கஞ்சி மாவு, கைக்குத்தல் அரிசிகள், சூரிய காந்தி விதை ஆகியவற்றிலும் கத்திரிக்காய், முட்டைக் கோசு, வெள்ளரிக் காய், தக்காளி, காலி:ஃபிளவர், வாழைக் காய் ஆகிய காய்களிலும் காரட், உருளைக்கிழங்கு ஆகிய கிழங்குகளிலும், ஆப்பிள் பழத்திலும்,வெங்காயத்திலும் நார்ச்சத்து நிறைந்திருக்கிறது இவ்வகை உணவுப் பொருள்களை உண்பதால், புற்று நோய் வராமல் தடுக்க இயலும் என்ற கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தும் உடலின் உள் உறுப்புக்களி லும் பரவி, மனிதனைக் கொல்லு கிறது. பல்வேறு புற்றுநோய் வகைகளின் வளர்ச்சி பல்வேறு விதமாக இருக்கிறது. சிலவற்றில் அதிவேகமாக வளர்ச்சி ஏற்படு கிறது. மூளையில் ஒருவித புற்று நோய் ஏற்பட்டால் அதிகபட்சம் 8 மாதங்களே உயிர் வாழ முடி யும். வேறு சிலவற்றில் மிகத் தாமதம் ஆகும். நிணநீர் ஸார்கோமாவில் (Sarcoma) ஏற்பட்டால், 20-25 ஆண்டுக் காலமாகும். நோயாளி வேறு ஏதேனும் நோயினுல்கூட இறந்து விடக் காரணம் உண்டு.

**சிகிச்சை :**

எந்தவிதப் புற்றுநோயையும் ஆரம்பத்திலேயே கண்டுபிடித்து விட்டால் முழுமையான குண மடைய இடம் உண்டு. இது, அறுவைச் சிகிச்சையினுல் முடியும்; அதாவது புற்றுநோய் ஏற்பட்ட பாகத்தை உடலிலிருந்தே வெட்டி எறிதல்; பிந்திய நிலை களில் கதிரியல் சிகிச்சையினுல் ஓரளவு குணம் காணலாம், இன் னும் சில நோயாளிகளுக்கு இந் நோயைத் தடுக்கும் மருந்துகளி னுல் ஐந்தாண்டுகள் உயிர் வாழ ஏதுவாகிறது. மொத்தத்தில் ஒவ்வொரு வகை நோயையும் தனித்தனியாக அதன் குணம் அறிந்து சிகிச்சை நடத்துவதே நோய் நீக்கச் சிறந்த வழியாகும்.

# எளிதில் பரவும் பயங்கர நோய்

'பால் வினை நோய்' பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கிறோம்.

இதனை ஆங்கிலத்தில் 'வெனரல் டிசீஸ்' ( Venereal Disease ) என்கிறோம்.

இந்நோயால் பாதிக்கப்பட்டவர்கள் பல தொல்லைகளுக்கு ஆளாகின்றனர். இந்நோய் கண்டவர்கள் உடனே தக்க சிகிச்சை செய்து கொள்வார்களேயானுல், இதனை மேலும் பரவாமல் தடுத்துக் கொள்ளமுடியும்.

சென்னை அரசினர் பொது மருத்துவமனையில் (Govt. General Hospital) இதற்கான தனிப்பிரிவு ஒன்று செயல்பட்டு வருகிறது.

மருத்துவமனை வெளியிட்ட அறிக்கையிலிருந்து, பால்வினை நோய் பற்றிய பயங்கரத் தகவல்கள் வெளியாகியுள்ளன:

சென்னை அரசினர் பொது மருத்துவமனையில் உள்ள பால்வினை நோய்ப் பிரிவில் கடந்த 1975-ஆம் ஆண்டு 54,000 பேருக்குச் சிகிச்சை அளிக்கப் பட்டுள்ளது!

இவர்களில் 10 சதவீதம், அதாவது 5 ஆயிரத்து 400 பேர் மாணவர்கள், இவர்களில் சிலர் மாணவிகள்.

1974-ஆம் ஆண்டு சென்னை நகரில் 45 ஆயிரம் பேர்களுக்குப் பால்வினை நோய்க்கான சிகிச்சை அளிக்கப்பட்டது. ஆனுல், இந்த எண்ணிக்கை 75-ஆம் ஆண்டில் 54 ஆயிரமாக அதாவது ஒரே ஆண்டில் 20 சதவீதம் அதிகரித்துள்ளது.

இந்த நோயினுல் பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலோர் 20 வயதிலிருந்து 24 வயதுக்குட்பட்டவர்கள். அடுத்து திருமணமான பெண்களும், திருமணம் ஆகாத ஆண்களும் அதிகமாக பாதிக்கப்பட்டு இருக்கிறுர்கள். அதாவது திருமணமான பெண்களில் 64 சதவீதமும், திருமணம் ஆகாத பெண்களில் 22 சதவீதமும் பால்வினை நோயால் பாதிக் கப்பட்டிருக்கிறுர்கள்.

ஆண்களில் திருமணமானவர்கள் 43 சதவீதமும், திருமணம் ஆகாதவர்கள் 52 சதவிகிதமும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

பால்வினை நோய்க்குச் சிகிச்சை பெற வருபவர்களில் திருமணம் ஆகாத பெண்கள் சிலர் தாங்கள் திருமணம் ஆனவர்கள் என்றும், திருமணமான ஆண்கள் சிலர் தாங்கள் திருமணம் ஆகாதவர்கள் என்றும் கூறிக் கொள்கின்றனராம்.

14 வயதுக்குட்பட்டவர்களும், 55 வயதுக்குமேற்பட்டவர்களும் கூட பால்வினை நோய் கண்டு சிகிச்சைக்கு வருகிறுர்கள் !

அடுத்து இந்த நோய் கண்டவர்களில் 10 பேருக்கு ஒருவர் தான், மருத்துவமனை சென்று சிகிச்சை பெறுகிறுர்கள். இந்தக் கணக்குப்படி பார்த்தால், சென்னை நகரில் மட்டும் 5 இலட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் பால்வினை நோயினுல் பாதிக்கப் பட்டிருக்கிறுர்கள் என்று புள்ளி விவரம் கூறுகிறது.

சென்னை நகர மக்கள்தொகைக் கணக்குப்படி, சென்னையில் 'பால்வினை' நோய் கடுமையாக உள்ளது.

பால்வினை நோய், எளிதில் பரவக்கூடிய கடுமையான ஒரு தொத்துநோய். இந்த நோய் கண்டவர்களைப் பாதிப்பது மட்டுமல்லாமல், அவர்களின் சந்ததியையே இது பாதிக்கும். இந்த நோய் காரணமாக உடல் ஊனம் ஏற்படுவதுடன், பார்வை இழந்து குருடாகவும் நேரிடும். மேலும் இதன் மூலம் மனநோய் (பைத்தியம்), பக்கவாதம், இதயத்திலிருந்து உடலின் எல்லாப் பகுதிகளுக்கும் இரத்தத்தை எடுத்துச் செல்லும் மிகப் பெரிய இரத்தக் குழாயில் (மகாதமனி) வெடிப்பு ஆகியவையும் ஏற்படும்.

கர்ப்பிணிகளுக்கு இந்த நோய் கண்டால், கருச்சிதைவு ஏற்படலாம்; குறிப்பிட்ட காலத்துக்கு முன்பே முழு வளர்ச்சி அடையாத குழந்தை பிறக்கலாம். அல்லது பிறக்கும் குழந்தைக்கும் அந்த நோயின் பாதிப்பு ஏற்படலாம். அதாவது அந்தக் குழந்தையின் தோல், எலும்பு, எலும்புகள் சேரும் இடம் ஆகியவற்றில் பாதிப்பு ஏற்படலாம்.

# சென்னை சிறு தொழில் சேவா நிலையத்தின் சீரிய பணிகள்!

—எஸ். நாகராஜன்,
இயக்குநர்,
சென்னை சிறு தொழில்
சேவா நிலையம்.

நமது பாரதப் பிரதமரின் 20 அம்சத் திட்டங்களுள் வேலையற்றோருக்கு வேலை வாய்ப்புகள் அளிப்பது முக்கியமானதொன்றாகும்.

நாட்டின் வளர்ச்சி குன்றிய பகுதிகளில் தொழில் வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதிலும், அதிகரித்து வரும் மக்கட் தொகைக்கு வேலை வாய்ப்பு அளிப்பதிலும், சிறு தொழில்களின் வளர்ச்சியும், அபிவிருத்தியும் முக்கிய துணை செய்கின்றன.

இதனைக் கருத்தினில் கொண்டே, இந்திய அரசின் தொழில் அமைச்சகம் சிறு தொழில் அபிவிருத்தி ஆணையரின் கீழ், சிறு தொழில் அபிவிருத்தி நிறுவனம் ஒன்றை அமைத்துள்ளது. இது நாடெங்கிலும் உள்ள சிறுதொழில் சேவை நிலையங்கள், விரிவாக்க நிலையங்கள் (Extension centres) மூலம் சிறு தொழில்களின் சீரிய வளர்ச்சிக்குத் தேவையான பல நடவடிக்கைகளை மேற்கொள்ளுகிறது. சென்னையில் சிறுதொழில் சேவை நிலையம் 65/1, தெற்கத்திய நெடுஞ்சாலை, கிண்டி, சென்னை-32 என்ற முகவரியில் அமைந்துள்ளது. இந்நிலையம் தமிழ் நாடு மற்றும் புதுவை மாநிலத் தொழில் வளர்ச்சிக்கான பணியில் ஈடுபட்டு வருகிறது.

சிறு தொழில் அதிபர்களுக்கு இந்நிலையம் பல துறைகளில் ஆலோசனை கூறுகின்றது. பின் வரும் தொழில்களுக்குப் பொதுவான பணி வசதியும், பரிசோதனை வசதியும் அளிக்கின்றது.

1. இயந்திரப் பொறியியல்.
2. மின் முலாம் பூசுதல்.
3. இரசாயன இயல்.
4. பீங்கான் பொருட்கள், செங்கல், ஓடுகள்.

மேலும் பின்வரும் தொழில்களில் தொழிலாளர்களுக்குத் தொழில் நுட்பப்பயிற்சியும் அளிக்கிறது.

இயந்திரம் இயக்குதல்.
இயந்திரப் பட்டறைப் பயிற்சி.
தச்சுத் தொழில்.
அறிவியல் கண்ணாடிக் கருவிகள்.
நியான் ஒளி விளக்குகள்.
பட்டுத் திரை அச்சு.
வரைபடம் பார்த்தறிதல்.
மின் முலாம் பூசுதல் முதலியன.

இந்நிலையம் நான்கு விரிவாக்க நிலையங்களை—மதுரை, கோயம்புத்தூர், பாண்டிச்சேரி, ஈரோடு ஆகிய இடங்களில்—கொண்டுள்ளது.

மதுரை தொழில் பேட்டையில் அமைந்துள்ள விரிவாக்க நிலையம் இயந்திரப் பொறியியல்—மின் முலாம் பூசுதல் போன்ற தொழில்களுக்குப் பரிசோதனை வசதிகளையும், மற்றும் பல தரப்பட்ட தொழில்களுக்கு தொழில் நுட்பப் பயிற்சியும் அளிக்கின்றது.

கோயம்புத்தூர் பட்டேல் ரோட்டில் அமைந்துள்ள விரிவாக்க நிலையம்—வார்ப்படச் சாலை, மணல் மற்றும் உலோகங்களுக்கான பரிசோதனை வசதி அளிக்கின்றது. மேலும், கோயம்புத்தூரில் அமைந்துள்ள ஆய்வுக் கூடத்தில் மின்சார மோட்டர்களுக்கான பரிசோதனை வசதியும் அளிக்கப்படுகின்றது. இவ்வாய்வுக் கூடத்தின் உதவியால் சுமார் 25 சிறு தொழில் நிறுவனங்கள் இந்தியத் தர நிர்ணய நிலையத்தினரின் தர எண்களை (I.S.I. Mark) பெற்றுள்ளன. இவ்வாய்வுக் கூடம் ஆரம்பிப்பதற்கு முன் கல்கத்தாவிலுள்ள (National Test house) ஆய்வுக் கூடத்திற்கு மின்சார மோட்டார்களைப் பரிசோதனைக்காக அனுப்ப வேண்டிய நிலை இருந்ததென்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

ஈரோடு பெரிய அக்கிரகாரத்தில் அமைந்துள்ள தோல்பக்குவப் படுத்தும் விரிவாக்க நிலையம், தோல் பக்குவப்படுத்தும் முறை பற்றியும், சடின, மற்றும் மென்மை பயிற்சி அளிக்கிறது. விரிவாக்க நிலையத்தின் உதவியால் முடிவு செய்யப்பட்டதோல் தயாரிக்கும் தொழில் (Finished Leather Industry) அபிவிருத்தி அடைந்து வருகிறது.

ஈரோடு நகரில் அமைந்துள்ள முடிவுசெய்யப்பட்ட தோல் தயாரிக்கும் நிலையத்தைச் சிறுதொழில் அபிவிருத்தி ஆணையாளர் பார்வையிடுகிறார்.



பாண்டிச்சேரி தொழிற்பேட்டையில் அமைந்துள்ள விரிவாக்க நிலையம், இயந்திரப் பட்டறைப் பயிற்சி மற்றும் பொருத்துதல் (Fitting) பயிற்சி அளிக்கின்றது. இவ்வாறு சென்னையிலுள்ள நிலையத்தின் மூலமும் மற்ற விரிவாக்க நிலையங்கள் மூலமும் பல இடங்களிலுமுள்ள பின்வரும் சிறு தொழில்களுக்கு உதவி அளிக்கப்படுகிறது.

1. இயந்திரப் பொறியியல்.
2. உலோகவியல்.
3. மின் அணுக்களும், மின் இயலும்.
4. இரசாயனவியல்.
5. மின் முலாம் பூசுதல்.
6. தோல் தொழில்.
7. கண்ணாடி மற்றும் பீங்கான் தொழில்கள்.
8. உணவுப் பண்டங்கள்தயார் செய்தலும், அவற்றைப் பாதுகாத்தலும்.



கோயம்புத்தூரில் உள்ள மின்சார மோட்டர் பரிசோதனை நிலையத்தில் ஒரு மின்சார மோட்டர் பரிசோதிக்கப்படுகிறது.

**தொழில்நுட்ப ஆலோசனை :**

தொழில் துவங்க விரும்புகின்றவர்களுக்கு, வளர்ச்சிக்கு வாய்ப்புள்ள தொழில்களைத் தேர்ந்து எடுக்க உதவுவதுடன், அவர்கள் தேர்ந்தெடுத்த தொழில்களுக்கு உரிய மாதிரித் திட்டங்களையும் அளிக்கிறோம். சரியான இயந்திர சாதனங்களைத் தேர்ந்தெடுப்பதிலும், உற்பத்தி முறை பற்றியும், தகுந்த மூலப் பொருள்களைப் பற்றியும் தொழில் நுட்ப ஆலோசனை அளிக்கிறோம்.

நவீன இயந்திரச் சாதனங்களை நன்கு பயன்படுத்தி தொழில் நுட்ப வளர்ச்சிக்குத் தேவையான வடிவ அமைப்பு (Design) ஆராய்ச்சி பற்றிய பணிகளையும் பிற நிருவாகங்களின் துணை கொண்டு செய்து வருகிறோம்.

தொழிற்சாலைகளுக்குரிய தொழில் நுட்ப ஆலோசனைகளைத் தலைமையகத்தில் உள்ள தங்கள் தொழிற் கூடங்கள் மூலமும், முன்பு குறிப்பிட்ட விரிவாக்க நிலையங்கள் மூலமும், கிராமப் பகுதிகளில் நடமாடும் தொழில் ஊர்திகள் மூலமும் அளிக்கிறோம். அரசாங்கம் தனக்குத் தேவையான பொருள்களைச் சிறுதொழிற் சாலைகளிடம் வாங்கும் திட்டத்தில் அதிக அளவில் பங்கு பெற சிறு தொழில்களை ஊக்குவிக்கிறோம். இறக்குமதிப் பொருட்களைத் தவிர்க்கும் நோக்குடன் நம் நாட்டிலேயே கிடைக்கக் கூடிய மூலப் பொருள்களை உபயோகித்து அவற்றை உற்பத்தி செய்ய உதவுகிறோம்.

**துணைத் தொழில் முன்னேற்றம் :**

சிறு தொழில்களின் வளர்ச்சிக்கான வாய்ப்பை அதிகரிக்க துணை தொழில் முன்னேற்றச் சிறப்புத் தகவல் நிலையம் எங்களிடம் உள்ளது. இந்நிலையம் பெரு ரகத் தொழில்களுக்கும், மற்றும் சிறு தொழில்களுக்கும் தேவையான பாகங்களையும், உறுப்புக்களையும் செய்யத் தகுதியுள்ள சிறு தொழில்களுக்கு உதவியளிக்கிறது. பாதுகாப்பு, இரயில்வே போன்ற நிறுவனங்களுக்குத் தேவையான பொருட்களைத் தயாரிப்பதற்கு முக்கியத்துவம் அளிக்கிறது. சிறு தொழில்களின் இயந்திரத் தொழில் நுட்பத் திறன்களை அறிந்து அவற்றைத் துணைத் தொழில் நிறுவனமாகப் பதிவு செய்து கொள்கிறது. ஐக்கிய நாடுகள் வல்லுநர் ஒருவரது துணையுடன் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் நாடு துணை ஒப்பந்த தொடர்பகம் என்ற சிறப்புத் தகவல் நிலையம் எங்களிடம் உள்ளது. இந்நிலையம் சிறு தொழில்களின் உற்பத்தித் திறன்களைப் பதிவு செய்து கொள்கிறது. பெரு ரகத் தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான இயந்திர பாகங்கள், உறுப்புக்கள் பற்றிய தகவல்களை அவற்றிடமிருந்து பெற்று, அவற்றைத் தயாரிப்பதற்குத் தகுந்த இயந்திரத் திறன் அமையப் பெற்ற சிறுதொழில் நிறுவனங்கள் மூலம் தயாரிக்க வழி வகுக்கிறது.

**பொருளாதாரத் தகவல் பணி :**

குறிப்பிட்ட பகுதிகளில் தொழில்களுக்குள்ள வாய்ப்புக்களைக் கண்டறியும் பொருட்டு ஆய்வுகளை மேற் கொள்ளுதல், தொழிற் பேட்டைகளை அமைக்க தொழில் நுட்ப—பொருளாதார ஆய்வுகளை நடத்துதல், சிறு தொழில்களைப் பற்றிய அடிப்படைப் புள்ளி விவரங்களைச் சேகரிப்பதற்கென தனிப்பட்ட ஆய்வுகளைச் செய்தல், விற்பனை நிலவரங்களைப் பரிசீலனை செய்து குறிப்பிட்ட பொருள்களின் விற்பனைக்குள்ள வாய்ப்புகள் பற்றி தகவல்வழங்குதல் போன்ற பணிகளையும் செய்கின்றோம். இந்த ஆய்வுகளின் மூலமாக நாங்கள் தொழில் துவங்குபவர்களுக்குத் தேவையான சிறந்த தகவல்களை அளிக்கிறோம்.

**தொழில்நிருவாகப் பயிற்சி வசதிகள் :**

சிறு தொழில்களைச் சார்ந்த தொழிலாளர்களுக்கு அளிக்கப் பெறும் பல்வேறு தொழில் நுட்பப் பயிற்சிகளோடு, நாங்கள் தொழில் நிருவாகப் பயிற்சியும் அளிக்கிறோம். தொழில் நுட்பம்

சம்பந்தப்பட்ட தொழில்களுக்கு நிருவாக ஆலோசனை கூறுதல்.

சிறு தொழில் நிருவாகம் பற்றி ஆய்வு நடத்துதல், தொழில் நுட்பம் மற்றும் நிருவாகம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு காணக் கருத்தரங்குகள் நடத்துதல், நலிவுற்ற தொழில்களுக்கான காரணம் அறிந்து அதை நீக்குவதற்குத் தேவையான தீர்வு கூறுதல், இந்நிலையத்தின் மற்றுமொரு சிறப்பு அம்சம் ஆகும். தொழில் கல்வி பெற்று தொழில் துவங்க விரும்பும் இளைஞர்களுக்கு, புதிய தொழில்களை துவங்கி நிருவகிப்பதற்காக 3 மாதப் பயிற்சி—உபகாரச் சம்பளத்துடன்—அளிக்கிறோம். இதுவும், நம் பாரதப் பிரதமரின் 20 அம்சத் திட்டங்களில் ஒன்றாகிய தொழில் திறமை மிக்க இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டத்தைத் திறம்பட நடத்த உதவுகிறது.

**மத்திய பாத அணி பயிற்சி நிலையம் :**

இந்நிலையத்தோடு இணைக்கப்பட்டு கிண்டியிலுள்ள, மத்திய பாத அணிப் பயிற்சி நிலையம் பாத அணிகள் தயாரிப்பதில் பயிற்சி அளிக்கிறது. வெளிநாட்டு மாணவர்களும் இங்கு பயிற்சி பெறுகின்றனர். இப்பயிற்சியின் பயனாய் பாத அணித் தொழில் பெரும் அளவில் வளர வாய்ப்பு உள்ளது.

**ஏற்றுமதி மேம்பாட்டுப் பணி :**

பொருள்களை ஏற்றுமதி செய்வதற்காக கவனிக்க வேண்டிய வழிமுறைகள், ஏற்றுமதியாகும் பொருள்களின் விலையை நிர்ணயித்தல், பொருள்களை ஏற்றுமதி செய்வதற்குரிய பாத்திரங்கள் தயாரித்தல் ஆகிய பணிகளிலும் உதவியளிக்கிறோம்.

ஏற்றுமதிக்கு வாய்ப்புள்ள பொருள்களைக் கண்டறிந்து அவற்றின் தயாரிப்பை மேற்கொள்ளத் தகுதி வாய்ந்த சிறு தொழில் நிறுவனங்களைத் தேர்ந்தெடுத்தல், ஏற்றுமதி வாணிபத்தில் சிறப்புப் பயிற்சி அளித்தல் போன்ற பணிகளையும் மேற்கொள்ளுகிறோம்.

**சிறு தொழில்களை நவீனமயமாக்கும் திட்டம் :**

தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சில தொழில்களைப் படிப்படியாக நவீன மயமாக்கும் திட்டத்தையும், சிறு தொழில் சேவா நிலையம் மேற்கொண்டுள்ளது. இத்திட்டத்தின் முன்னோடியாகப் பின்வரும் 10 தொழில்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன :

1. ஊர்திகளின் பாகங்கள் மற்றும் துணைப் பொருள்கள்.
2. இயந்திரக் கருவிகள்.
3. வார்ப்பு மற்றும்ஊது உலைப் பொருட்கள்.
4. வீடுகளுக்குரிய மின்சார சாதனங்கள்.
5. பின்னல் உள் ஆடைகள்.
6. சைக்கிள் மற்றும் சைக்கிள் பாகங்கள்.
7. கைக் கருவிகள்.
8. தோல் மற்றும் தோல் பொருட்கள்.
9. அறிவியற் கருவிகள்.
10. சேமிக்கும் மின் கலம் மற்றும் பாகங்கள்.

சிறு தொழில்களின் உற்பத்தியை முன்னேற்றுவதும், உற்பத்தி செலவைக் குறைப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். போட்டி சக்தியை வளர்த்து அதன் மூலம் உள் நாட்டிலும், வெளிநாட்டுச் சந்தையிலும் பொருட்களின் விற்பனைக்குச் சிறந்த சாதக நிலையை உருவாக்குவதும் இத்திட்டத்தில் அடங்கும். நவீன மயமாக்குதல் என்பது பொருள்களின் நவீன மயமாக்கும் திட்டத்தை உட்படுத்தியதாகும். அவை பின்வருமாறு :

1. வடிவ அமைப்பு, பொருள்களின் தரநிர்ணயம்.
2. சிக்கனம், திறமை, தரம் உட்பட்ட தொழில் நுணுக்கத்தை உயர்த்தல்.
3. இயந்திரங்களையும், கருவிகளையும் நவீன மயமாக்குதல்
4. நிருவாகத் திறமையை நவீன மயமாக்குதல்.

இத்திட்டத்தின் கீழே தேர்ந்தெடுக்கப்பட்ட சிறு தொழில் நிறுவனங்களுக்கு ஒட்டு மொத்தமான உதவிகளை அளிக்கக் கருதப்படுகிறது. நேரடித் தொழில் நுணுக்க ஆராய்வு, தொழில் வாரியான தொழில் கூடங்கள், தொழில் 'கிளினிக்', கருத்தரங்குக் கூடங்கள், ஆழ்ந்த தொழில் நிருவாக உதவி, சிறு தொழில்களுக்குத் தேவையான கிடைத்தற்கரிய மூலப் பொருட்களை வழங்குதல், இறக்குமதி செய்யப்பட்ட, மற்றும் உள் நாட்டில் தயாரான இயந்திரங்களும், இயந்திரக் கருவிகளும் வழங்குதல், கடன் உதவி வழங்குதல் ஆகியவையும் இத்திட்டத்தில் அடங்கும்.

கோயம்புத்தூரில் அமைந்துள்ள சிறுதொழில் விரிவாக்க நிலையம் வார்ப்படச்சாலை மணல் மற்றும் உலோகங்களுக்கான பரிசோதனை வசதி அளிக்கிறது.







# தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியின் "சிறுமலர்கள் சேமிப்பு திட்டம்."

## மாணவர்களும், சிறு வியாபாரிகளும் எளிதாக சேமிக்க, தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியின் ஒரு புதிய திட்டம்.

உங்கள் சக்திக்கு ஏற்ப, சிரமமின்றி சேமிப்பது நலம். எங்கள் "சிறு மலர்கள் சேமிப்பு திட்டம்" அதற்கு உதவுகிறது. உண்டியல் சேமிப்பு திட்டத்தின் மூலம் மாணவர்களும், சிறு வியாபாரிகளும் தங்கள் சேமிப்பை எங்கள் தலைமை அலுவலகம் அல்லது சென்னையில் உள்ள 23 கிளைகளில் சேமிப்பு கணக்கில் முதலீடு செய்யலாம்.

ரூ. 5/- செலுத்தி புதிய சேமிப்பு கணக்கு ஆரம்பிக்கும் ஒவ்வொரு நபருக்கும் அழகான ஒரு உண்டியல் வழங்கப்படும்.

TNSC BANK

உண்டியலில் அவ்வப்பொழுது சேரும் சில்லறை காசுகளை சேர்த்து மாதம் ஒரு முறையாகிலும் அல்லது உண்டியல் நிறைந்தவுடனும் எங்கள் வங்கியில் செலுத்தி உங்கள் சேமிப்பு கணக்கில் வரவுவைத்துக் கொள்ளலாம்.

உங்கள் சேமிப்பு கணக்கில் உள்ள முதலீட்டின் பேரில் 5.75% வட்டி வழங்கப்படுகிறது. மேலும் உங்கள் சேமிப்பு கணக்கில் உள்ள பணத்தை லாபகரமாக முதலீடு செய்ய வழிவகைகளை எங்கள் கிளை மேனேஜர் தெரிவிப்பார். இத் திட்டத்தின் மூலம் சிறுக சேர்த்து உங்கள் எதிர்கால தேவைக்கு முதலீடு செய்யுங்கள்.

## தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி லிமிடெட்

379, நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் சாலை, சென்னை-600 001.

தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி உங்கள் சேமிப்பை அதிகரிக்கவும், நாட்டின் விவசாய மற்றும் பொருளாதார வளர்ச்சிகளுக்கும் உதவுகிறது.

TNSCB: 112,

பின்வரும் தொழில்களைப் பற்றிய ஆய்வுகள் இந்நிலையத்தால் ஏற்கனவே செய்யப்பட்டுவிட்டன.

1. ஊர்திகளின் பாகங்கள் மற்றும் துணைப் பொருட்கள்.
2. வார்ப்பு மற்றும் ஊதுஉலைப் பொருட்கள்.
3. சேமிக்கும் மின்கலம்.
4. தோல் மற்றும் தோல் பொருட்கள்.

இதன் விளைவால் வார்ப்படங்களுக்கான இந்தியத் தரநிர்ணய நிலையத்தின் ஐ. எஸ். 210 என்ற தர எண்ணை இந்தியாவிலேயே முதல் முறையாகச் சிறு தொழில் பகுதியில் கோயம்புத்தூரிலுள்ள உள்ள ஒரு சிறு தொழில் நிறுவனம் பெற்றுள்ளது என்பது பெருமைக்குரியதாகும்.

**ஆராய்ச்சி, முன்னேற்ற, வடிவ அமைப்பு ஆலோசனைக் குழு :**

சிறு தொழில்களுக்கான ஆராய்ச்சி, முன்னேற்றம், வடிவு அமைப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான பணிகளை மேற்கொள்ளும் பொருட்டு மாநில அளவில் 'ஆர். டி. டி.' (R.D.&D.) குழுக்கள் நாடெங்கிலும் அமைக்கப்பட்டுள்ளன. தமிழ் நாடு, பாண்டிச்சேரியில் உள்ள சிறு தொழில்களுக்கு மாநில அளவில் 'ஆர்.டி.டி.' குழு ஒன்று சென்னையில் செயல்பட்டு வருகின்றது.

தேசீய ஆராய்ச்சி ஆய்வகம், தொழில் நுணுக்க நிலையம், பொறியியல் கல்லூரிகள், தொழில் மற்றும் வாணிப நிறுவனம், சிறு தொழில்கள் குழு மற்றும் சிறு தொழில் சேவா நிலையம் ஆகிய நிறுவனங்கள் இவ்வாலோசனைக் குழுவின் உறுப்பினர்களாகச் செயல்படுகின்றன. இக் குழுவின் பணிகளை முன்நின்று நடத்துபவர் (CONVENOR) சிறு தொழில்கள் சேவை நிலைய இயக்குநர் ஆவார். சிறு தொழில்களுக்குத் தேவையான ஆராய்ச்சி, முன்னேற்ற, வடிவ அமைப்பு பற்றிய பிரச்சினைகளைக் கண்டு அறிந்து அவற்றைத் தொழில் நுணுக்க ஆராய்ச்சிக் கூடங்களின் மூலம் தீர்த்து வைப்பதே இக்குழுவின் முக்கிய நோக்கமாகும். மாநில அளவு குழுவோடு, பிரதேச அளவு குழுக்களும் உள்ளன. இக்கிளைக் குழுக்கள் திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், மதுரை, பாண்டிச்சேரியில் அமையப்பெற்று, மாநில அளவுக் குழுவின் கீழ்ச் செயல்படுகின்றன. தன்னுடைய ஒப்பந்த காலத்திற்குள் (கடந்த இரண்டு ஆண்டுகளில்) சிறு தொழில்களின் பல பிரச்சினைகள் தொழில் நுணுக்க ஆராய்ச்சி நிலையங்களால் தீர்வு காணப்பட்டுள்ளன.

மாநில அளவுக் குழு, "**தமிழ் நாட்டில் பரிசோதனை வசதிக்கான வழிகாட்டி**" என்ற தலைப்பில் ஒரு சிறிய வெளியீட்டைக் கொண்டு வந்துள்ளது. இந்த வெளியீடு தமிழ் நாட்டில் கிடைக்கும் பரிசோதனை வசதிகளை அறிய உதவுகிறது. தமிழ் நாடு—பாண்டிச்சேரி பகுதியில், ஆராய்ச்சி— முன்னேற்ற — திட்டங்களால் கிடைக்கும் உதவிகளை பற்றிய முழுக் கூறுகளை மற்றுமொரு பதிப்பில் இக்குழு வெளியிட இருக்கிறது. சிறு தொழில்களின் நலனுக்காக, இந்த வெளியீட்டை விரைவில் கொண்டு வர இக்குழு எதிர்பார்க்கிறது.

இவ்வாறு எங்கள்நிலையமானது சிறு தொழில்களுக்கு அவசியமான தொழில் நுட்பம், பொருளாதாரம் போன்ற பல வேறுபட்ட தேவைகளைப் பூர்த்தி செய்கிறது.

**இராமம் மற்றும் பின் தங்கிய பகுதிகள் முன்னேற்றம் :**

பின் தங்கிய பகுதிகளில் சிறு தொழில் வளர்ச்சிக்கு மிக முக்கிய கவனம் செலுத்தப்படுகிறது. இப் பகுதிகளில் தொழில் வளர்ச்சிக்காக மிக நெருக்கமான உறவு வைத்துக் கொள்ளப்படுகின்றது. சிறு தொழில் முன்னேற்றத்திற்காக, தீவிரத் தொழில் வளர்ச்சி இயக்கங்கள் எல்லா மாவட்டங்களிலும் குறிப்பாகப் பின்தங்கிய மாவட்டங்களில் நடத்துகிறோம். இத் தீவிரத் தொழில் வளர்ச்சி இயக்கங்களில் வணிகத் துறை இயக்குநர், தமிழ்நாடு தொழில் மற்றும் காப்பு (மூலதனம்) நிறுவனம், தேசீய சிறு தொழில்கள் நிறுவனம், இந்திய மாநில வங்கி, தேசீய மயமாக்கப்பட்ட வங்கிகள், மற்றும் நிதி வழங்கு துறை நிறுவனங்கள் பங்கு கொள்கின்றன.

இம்மாதிரி தீவிர இயக்கங்களின் மூலம் சிறு தொழில் அதிபர்களுக்கு வேண்டிய எல்லா வசதிகளும் உடனடியாக ஒரு குடையின் கீழ் கிடைக்க வசதிகள்—வழி வகைகள்-செய்யப்படுகின்றன. அண்மையில் தருமபுரி மாவட்டத்தில் துவங்கப்பட்ட இம்மாதிரி இயக்கத்தின் மூலம் நல்ல பயன் ஏற்பட்டு பல தொழில்கள் அம்மாவட்டத்தில் துவங்கப்பட்டுள்ளன.

தொழில் வளர்ச்சியடையாத பின்தங்கிய கிராமப் புறப் பகுதிகளிலும், சிறு நகரப் பகுதிகளிலும், பரவலாகத் தொழில்கள் துவங்க உதவுவதே எங்களின் தற்போதைய முக்கியப் பணிகளுள் ஒன்றாகும். இவ்வாறு கிராமப் புறங்களிலும், சிறு நகரங்களிலும் சிறு தொழில்கள் பரவலாக இயங்குமாயின் இப்பகுதிகள் வளமடைவதுடன், மக்களின் வேலை இல்லாத் திண்டாட்டம் நீங்கவும் வழி பிறக்கும். நம் பிரதமரின் 20 அம்சத் திட்டம் வெற்றிகரமாகச் செயல்படவும் இது துணை செய்யும்.

## கோவை மாவட்டத் தொழில் நிறுவனங்களில் தொழிலாளர்களின் பங்கு

பிரதமரின் இருபது அம்சப் பொருளாதாரத் திட்டத்தின் கீழ் "தொழில் நிருவாகத்தில் தொழிலாளர்கள் மேலும் சிறந்த முறையில் பங்கு கொள்வதற்குப் புதிய திட்டங்கள்" பல செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இவ்வகையில் தொழில் நிறுவனங்கள் பலவற்றில் கூட்டுக் குழுக்கள், பட்டறை மட்ட அளவில் அமைக்கப்பட்டு, அவை செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தினை முனைந்து செயல்படுத்தும் வகையில் கோயம்புத்தூர் மாவட்டம் பெரிதும் பாடுபட்டு வருகின்றது.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் 500-ம் அதற்கு மேற்பட்ட தொழிலாளர்களும் பணியாற்றுகின்ற தொழில் நிறுவனங்கள் 59 உள்ளன. இத்திட்டத்தின் கீழ் இதுவரை பட்டறை மட்ட அளவில் 57 தொழில் நிறுவனங்களில் இக்குழுக்கள் அமைக்கப்பட்டுவிட்டன. இன்னும் இரண்டு நிறுவனங்களில் மட்டும் இவை அமைக்கப்படாமல் உள்ளன.



# தேசியக் கல்மரப் பூங்கா

இவ்வுலகில் உயிர் வாழ்ந்த பண்டைக் கால விலங்கினங்கள் மற்றும் தாவரங்களின் அடையாளங்களாகத் திகழும் கல்லினுள் பதிந்த படி ங்களில் (Fossils) இருந்து முந்நூறு கோடி ஆண்டுகளுக்கும் முற்பட்ட காலத்தில் வாழ்ந்த உயிரினங்களின் வரலாற்றை நாம் கண்டறிய முடிகிறது. இவைகளின் உதவியால் உயிரினங்களின் ஆரம்பத் தோற்றம் முதல் மனிதத் தோற்றம் வரையிலான வளர்ச்சியைக் கண்டறியலாம். குறிப்பிடப்பட்ட புவியியல் காலங்களில் சில வகை உயிரினங்கள்தான் மிகுந்த அளவில் வாழ்ந்தன என்றும் அறிய முடிகிறது. எனவே இந்தப் படிமங்கள் மூலம் வண்டல் பாறைகளின் வயதைத்தெரிந்துகொள்ள இயலுகிறது. இப் படிமங்களைப் பற்றிய ஆராய்ச்சி மூலம் பூமியின் மேற்பரப்பிலுள்ள வண்டல் மண் பாறைத் தொகுப்புகளின் வரலாற்றையும் அறிய முடிகிறது. பிராணிகளின் உடல் பகுதிகள் மட்டுமல்லாமல் அவைகளின் அடிச் சுவடுகள், பற்குறிகள், கழிவுப் பொருள்களும் படிமங்களாகப் பாதுகாக்கப்பட்டுள்ளன.

இந்தியாவின் பல இடங்களில், வரலாற்றுக்கு முற்பட்ட காலங்களில் வாழ்ந்த உயிரினங்கள் சிறந்த அளவில் பாதுகாக்கப்பட்டு கல்லினுள் பதிந்த படிமங்களாகக் கிடைக்கின்றன. தமிழ் நாட்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள சாத்தனூர் என்னுமிடத்திலும், தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள திருவக்கரை என்னுமிடத்திலும் கல்லினுள் பதிந்த பல அரிய கல் மரங்கள் சுமார் 2 கோடி வயதுள்ள வண்டல் பாறைகளில் எல்லாரும் ஆச்சரியப்படுகின்றஉருவ அமைப்பில் காணப்படுகின்றன. இந்தியப் புவியியல் ஆய்வுத் துறை இவ்விரு இடங்களிலும் இக் கல் மரங்களை வருங்காலச் சந்ததியார்களுக்கென பாதுகாத்து வருவதற்கும், பொது மக்களுக்கு இவைகளின் முக்கியத்துவத்தைத் தெரியப்படுத்துவதற்கும், தேசியக் கல்மரப் பூங்காக்களை 1951-ஆம் ஆண்டில் உருவாக்கியது.

திருவக்கரை தேசியக் கலமரப் பூங்கா சென்னைக்குத் தென்மேற்கே ஏறத்தாழ 155 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. இப் பூங்கா 8 சதுர கி.மீ. பரப்புள்ளது. திருவக்கரை,கடகம்பட்டு ஆகிய கிராம எல்லைக்குள் அமைந்துள்ளது. 225-க்கும் மேலான கல்மரங்கள் இங்கே உள்ளன. இவைகள் 3 மீட்டர் முதல் 15 மீட்டர் வரை நீளம் கொண்டவையாகும். இங்குள்ள கல்மரங்கள் 2 கோடி ஆண்டுகளுக்கு முந்திய காலத்தில் கடலூர் மணற் பாறைகளில் படுக்க வாட்டமாய் புதைந்துள்ளன. இவ்வகையான கடலூர் மணற்பாறைகள் சோழ மண்டலக் கடற்கரையோரமாக, தமிழ் நாட்டிலுள்ள தூத்துக்குடியிலிருந்து ஆந்திரப் பிரதேசத்திலுள்ள விசாகப்பட்டினம் வரை நீண்டுள்ளது. நீரோடைகளினால் அரிக்கப்பட்ட இடங்களிலும் சிறு குன்றுகளிலும் இக் கல்மரங்கள் வெளித் தெரியக் கிடக்கின்றன. இவைகள் சிதறிய மரத் துண்டுகளாகவும், குறுக்கு இணைப்புகளில் விரிசல் காரணமாக மரத் தொட்டிகளில் அறுத்த மரத் துண்டுகளைப் போல சிறுசிறு கல்மரத் துண்டுகளாகவும் சிதறிக் காணப்படுகின்றன.

திருவக்கரையில் கல்மரங்கள் கிடைப்பது பல காலங்களாகத் தெரிய வந்திருக்கிறது. இவை ஊசியிலை மரங்கள் மற்றும் கிளையில்லா மரங்களின் ஓர் அரிய இனத்தைச் சார்ந்தவையாகும். படுக்க வாட்டில் கிடைக்கப்பெற்றுள்ள கிளைகளும் வேர்களும் அற்ற இக் கல்மரங்கள் வெகு தொலைவிலிருந்த மலைப்பாங்கான இடங்களிலிருந்து ஆறுகளினால் இழுத்துச் செல்லப்பட்டு உள்நாட்டுக் கடல் நிலங்களில் புதையுண்டவை என்பதைத் தெளிவுறுத்துகின்றன. இவ்வகையான ஊசியிலை மர இனங்கள் கடல் மட்டத்திலிருந்து ஏறத்தாழ 2,500 அடி உயரத்தில் வளர்பவைகளாகும். இவைகள் இப்போது சமவெளியில் கிடைப்பதனால் மலைப்பாங்கான இடங்களிலிருந்து ஆறுகளினால் இழுத்து வரப்பெற்றன என அறியலாம். இவ்வாறு இழுத்து வரப்பெற்ற மரங்கள் கல்லாக மாற்றம் பெற்று கல்மரங்களாக ஆகியுள்ளன. புதையுண்ட மரங்களி



**உதகமண்டலம் அரசினர் தாவரப் பூங்காவில் கல்மரம் ஒன்றினை மைய அரசின் எஃகு மற்றும் சுரங்கத்துறை அமைச்சர் திரு. சந்திரஜித் யாதவ் அவர்கள் திறந்து வைத்தார்.**

உள்ள நீர், மேலேயுள்ள வண்டல் படிவங்களில் அழுத்தத்தினால் வெளியேற்றப்பட்டு மரத்தின் இடத்தை மணல் ( Silica ) அடைந்து கல்மரமாகக் காலப் போக்கில் மாறின. மரத்தின் மிக நுண்ணிய அமைப்புகள், வட்டங்கள், முடிச்சுகள் முதலியன இக் கல்மரங்களில் அதிசயிக்கத் தக்க வகையில் பாதுகாக்கப்பட்டிருக்கின்றன.

உலகில் சில இடங்களில் கல்லாக மாற்றம் பெற்ற மரங்கள் பல்வேறுபட்ட கால அளவுகளையுடைய பாறைகளில் கிடைக்கின்றன. மரம் கல்லாக மாறுவதற்குத் தேவையான மணல் ( Silica ), எரிமலைக் குழம்பு சாம்பலாகச் சிதையும்போதோ அல்லது திரவமாக உள்ள நில நீரிலோ உண்டாகிறது. எண்ணிலடங்கா அடி மரங்கள் வளர்ந்த இடங்களிலே, நின்ற நிலையிலேயே எரிமலைச்சாம்பல்களினால் புதையுண்ட பின் கல்லாக மாற்றப்பட்டுள்ளதை அமெரிக்க ஐக்கிய நாடுகளிலுள்ள 'மஞ்சள் பாறை' தேசியப் பூங்காவின் கற்காடுகளில் நாம் காணலாம். ஒன்றின் மேல் ஒன்றாக அடுக்கப்பட்ட 15 காடுகள் எரிமலைச் சாம்பல் படிவத்தால் பிரிக்கப்பட்ட நிலையில் மஞ்சள் பாறை தேசியப் பூங்காவில் உள்ள 'அமிதிஸ்ட்' மலையில் காணலாம். அமெரிக்க ஐக்கிய நாடுகளிலுள்ள அரிசோனாவிலும் 20 கோடி ஆண்டு வயதுடைய கல்மரக் காடுகளில் மரத் துண்டுகள் நமது திருவக்கரையில் உள்ளது போல வெகு தொலைவிலிருந்து ஆறுகளால் இழுத்துச் செல்லப்பட்டு இப்போதுள்ள இடங்களில்-வண்பாறைகளில் கல்லாக மாற்றப்பட்டுள்ளன.

திருவக்கரை தேசிய கல்மரப் பூங்கா ஈடு இணையற்றதாகும். இங்கு மரங்கள் முழுமையான அளவில் கல்லாக மாற்றம் பெற்று உள்ளன. இத்தகைய செயல் மிக அரிதானதாகும். இப் பூங்கா நமது வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட தாவரங்களின் வாழ்க்கையை அறிவதற்கு ஒரு கண்ணோட்டமாக அமைந்துள்ளது.

திருவக்கரையிலுள்ள கல்லாக மாற்றப் பெற்ற காடுகளைப் பற்றி மக்கள் நன்கு அறிவதற்காக இந்தியப் புவியியல் ஆய்வுத் துறை, நாட்டின் முக்கியமான பூங்காக்களில் இக்கல்மரங்களைக் காட்சிப் பொருளாக அமைத்துக் கொண்டிருக்கிறது. இவ்வாறாக இக் கல்மரங்கள் சென்னையிலுள்ள கிண்டி குழந்தைகள் பூங்கா, கேரளாவிலுள்ள தேசீய வரலாற்றுப் பொருட்காட்சி, ஐதராபாத்தில் உள்ள நேரு வன விலங்குப் பூங்கா, பெங்களூரிலுள்ள கப்பன் பூங்கா, புது டெல்லியிலுள்ள தேசீயப் பொருட்காட்சி ஆகிய இடங்களில் வைக்கப்பட்டு, மக்களுக்குக் கல்வி அறிவைப் புகட்டும் வகையில் சிறப்புப் பெற்று உள்ளன. இப் புவியின் உயிரின வளர்ச்சி பற்றி அறிவதற்கான ஒரு ஊக்கத்தையும், வாய்ப்பினையும் இக் கல் மரங்கள் வழங்குகின்றன.

இத்தகைய வகையில் இரண்டு கோடி ஆண்டுகளுக்கு முற்பட்ட திருவக்கரை கல் மரம் ஒன்று உதகமண்டலம் அரசினர் தாவரப் பூங்காவில் பொது மக்களின் காட்சிக்காகவைக்கப்பட்டுள்ளது. இந்தியப் புவியியல் துறையின் 125-ஆம் ஆண்டு விழாவினையொட்டி 23—5—1976 - ஆம் நாளன்று காட்சிக்காக வைக்கப்பட்டுள்ள இக்கல் மரத்தினை மைய அரசின் எஃகு மற்றும் சுரங்கத் துறை அமைச்சர் திரு. சந்திரஜித் யாதவ் அவர்கள் திறந்து வைத்து, இதன் சிறப்புகள் பற்றிக் கூறினார்கள். தமிழக ஆளுநரின் ஆலோசகர் திரு. பி. கே. தவே அவர்களும் இவ்விழாவில் கலந்து கொண்டார்.

# உங்கள் நிலத்தில் உரச் செலவைக் குறைத்து பயிர் விளைச்சலை 15% அல்லது அதற்கும் மேலாக அதிகப்படுத்துவதற்கு உபயோகியுங்கள்

# ஏரீஸ் எக்ரோ-ஏஸோ மற்றும் ஏரீஸ் எக்ரோ-ரைஸோ

நைட்ராஜன் அளிக்கும் கிருமிகள்

**எப்படி?**
ஏரீஸ் எக்ரோ-ஏஸோ மற்றும் எக்ரோ-ரைஸோ நைட்ரஜன் அளிக்கும் கிருமிகள். பாக்டீரியாக்கள் வளிமண்டலத்திலிருக்கும் நைட்ரஜனை எடுத்து ஆர்கானிக் நைட்ரஜனாக மாற்றி, செடிகள் கிரகித்துக் கொள்ளும்படியாகச் செய்கின்றன. எனவே உங்களுக்கு நைட்ரஜன் அடிப்படையில் அமைந்த ரசாயன உரங்கள் 25% மிச்சமாகின்றன. இந்த மிச்சம் மட்டுமே ஏரீஸ் எக்ரோ-ஏஸோ அல்லது எக்ரோ-ரைஸோவின் விலையை விட அதிகமாக இருக்கிறது.




**ஆராய்ச்சித் தயாரிப்புகள்:**
நைட்ரஜனை ஏற்று இணைக்கும் பாக்டீரியாக்கள் இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் நடத்தப்பட்ட பரந்த ஆராய்ச்சியின் பயனாக விளைந்தவையாகும். ஏரீஸ் எக்ரோ-ஏஸோ மற்றும் எக்ரோ-ரைஸோ, ஏரீஸ் விஞ்ஞானிகள் கடுமையான ஆராய்ச்சிகளின் பயனாக உருவாக்கியுள்ள உன்னதமான தயாரிப்புகளாகும்.

**உங்கள் பயிர் விளைச்சல் 15% அல்லது அதற்கும் மேலாக அதிகமாக வழி செய்வது:**
• விதைகள் சிறப்பாக முளைவிடுதல் • நாற்றங்கால்களின் விரைவான வளர்ச்சி • மேம்பட்ட செடி வளர்ச்சி • வேர்களின் சிறந்த வளர்ச்சிக்கு மேம்பட்ட மண் அமைப்பு மற்றும் சூழ்நிலைகள் • விளைமண்ணில், வளிமண்டல நைட்ரஜனின் அதிகமான சேர்க்கை • உயிர்ப் பொருட்களின் சிதைவு போன்ற சாதாரண மண் மாற்றச் செயற்பாடுகள் துரிதப்படுதல் • மண் வழியாகப் பரவும் நோய்களுக்கு எதிர்ப்பு • மண்ணில் உள்ளார்ந்த நுண்ம உயிர்ப் பொருட்களின் எண்ணிக்கை அதிகமாதல்.

**உபயோகிப்பது கலபம்:**
அ) விதைப் பதனம் ஆ) தோய்த்தெடுக்கும் முறை இ) மண் பதனம்.

**இந்தப் பயிர்களுக்கு:**
பயற்றினத்தைச் சாராத பயிர்களுக்கு எக்ரோ-ஏஸோ,
தானியங்கள், பருத்தி, கரும்பு, புகையிலை மிளகாய், எள், குசும்பு, சூரியகாந்தி, பழங்கள், காய்கறிகள் முதலியன.
பயற்றினங்களுக்கு மட்டும் எக்ரோ-ரைஸோ,
நிலக்கடலை, சோயாபீன், பட்டாணி மற்றும் அவரையினம், பருப்பு வகைகள், லூஸர்ன், தைன்சா, பிரெஞ்சு பீன்ஸ் முதலியன.



**விசேஷ அம்சங்கள்:**
- அதிகமான பாக்டீரியா எண்ணிக்கைக்கென (பிரதி கிராமிற்கு - 100 முதல் 1000 கோடி) கூடுதலான நியூட்ரியன்டுகள் (ஊட்டச் சத்துக்கள்)
- சேமிப்பில் நீண்டகாலம் கெடாமலிருப்பதற்கென பிரத்யேகமான தெர்மோகோல் பாதுகாப்புப் பேக்கிங்
- பிரேரிக்கப்பட்டுள்ள ஐஎஸ்ஐ தரத்தின் தீவிரமான கடைப்பிடிப்பு

இவர்களுடைய ஆராய்ச்சித் தயாரிப்புகள்:
ஏரீஸ் எக்ரோ-வெட் இண்டஸ்ட்ரீஸ் பிரை. லிட்.,
த.பெ. எண் 9417, பம்பாய் 400 093.

Grant.18 TM



# கேளுங்கள் கொடுக்கப்படும்!

**வினா :** 16-2-1976 தேதிய ''தமிழரசு'' இதழில், இருதயத்தைச் சோதனை செய்வதுபோல் புகைப்படம் வெளியிடப்பட்டிருந்தது. நான் இருதய நோய்க்குப் பல இடம் சென்றும் பலன் இல்லாமல் போய்விட்டது. ஆகவே, இருதய நோய்க்கு முழுமையாக எங்கெங்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது என்பதைத் தெரிவிக்கவும். நீங்கள் அளிக்கும் பதில் என் போன்ற இருதய நோயாளிகள் பலருக்குப் பயன்படுமாதலின் தயவு செய்து கண்டிப்பாகப் பதில் அளிக்கவும்.

—பி. முருகையன்,
வாய்மேடு,
மேலக்காடு அஞ்சல்,
(வழி) தகட்டூர்,
திருத்துறைப்பூண்டி வட்டம்
தஞ்சை மாவட்டம்.

**விடை :** சென்னையில் உள்ள பொது மருத்துவமனை (General Hospital), ஸ்டான்லி மருத்துவமனை, இராயப்பேட்டை மருத்துவமனை ஆகியவற்றில் இருதய நோய்க்குத் தீவிர சிகிச்சை அளிக்கும் பிரிவு (Intensive Coronary Care Unit) உள்ளது. அப்பிரிவுகளில் இருதய நோய்க்கு முழுமையான சிகிச்சை அளிக்கப்படுகிறது. எனவே, சென்னைக்கு வந்து மேற்கூறிய ஏதேனும் ஒரு மருத்துவ மனையில் சேர்ந்து, உங்கள் இருதய நோய்க்குச் சிகிச்சை பெறுவதே சிறந்தது.

**வினா :** என் வீட்டில் 5 வருட காலமாக கத்தரி சாகுபடி செய்து வருகின்றோம். நோயின் காரணமாகச் செடிகள் காலப்போக்கில் அழிந்து விடுகின்றன. காய்க்கும் பருவத்தில் மண்ணிற்குக் கீழேயுள்ள பகுதிகள் உலர்ந்து விடுகின்றன. இதன் காரணமாக இளங்குருத்து முதலிலும், மற்றைய பகுதிகள் காலப் போக்கிலும் அழிந்து விடுகின்றன. நாங்களும் என்னென்னவோ செய்து பார்த்தோம். இந்நோய் ஒழிந்த பாடில்லை! ஆகவே, இது என்ன நோய் என்றும், எந்த மருந்து தெளிந்தால் சரியாகும் என்றும், அம்மருந்தை எங்கு வாங்கலாம் என்றும் தெரியப்படுத்தும்படிக் கேட்டுக் கொள்கின்றேன்.

—சூரிய மூர்த்தி,
ஆத்திக்கோட்டை.

**விடை :** தங்கள் வீட்டுத் தோட்டத்தில் உள்ள கத்தரிச் செடி வாடல் நோயினால் (Wilt) தாக்கப்படுகிறது என்று நம்புகின்றோம். இது பூஞ்சாளத்தால் (Fungus) ஏற்படும் நோயாகும். இப்பூஞ்சாளம் கத்தரிச் செடியின் வேர்களைத் தாக்கி அழுகச் செய்து விடும். இதனால் மண்ணிற்குக் கீழே உள்ள, கத்தரிச் செடியின் வேர்ப் பாகம் உலர்ந்து விடும். அதன் பின் செடிகள் தானாக வாடி இறந்துவிடும். இந்நோயினைத் தடுக்கப் பின்கண்ட முறைகளை மேற்கொள்ளுங்கள்.

1. இந் நோயினால் தாக்கப்பட்ட கத்தரிச் செடிகளை உடனுக்குடன் அப்புறப்படுத்தி விட வேண்டும்.

2. அவ்வாறு செடிகளை அகற்றிய இடத்தில் கரையும் 0.1 சத செரசான் மருந்தைத் (ஒரு கிலோ செரசான் மருந்தை 100 லிட்டர் தண்ணீரில் கலந்து) தெளித்து, மண்ணை நனைக்கவும்.

3. அடுத்த பருவத்தில் கத்தரி பயிரிடாமல், வேறு காய்கறிச் செடிகளைப் பயிரிட முயற்சி செய்வதும் சிறந்தது.



மேற்கூறிய மூன்று முறைகளையும் தவறாது மேற்கொண்டால், உங்கள் கத்தரிச் செடிகளை வாடல் நோயிலிருந்து காப்பாற்ற முடியும்.

கரையும் செரசான் மருந்து, உங்கள் ஊராட்சி ஒன்றிய வேளாண்மைக் கிடங்கில் கிடைக்கக்கூடும். அவ்வாறு கிடைக்காவிட்டால், உங்கள் ஊராட்சி ஒன்றியத் துணை வேளாண்மை அலுவலர் (வளர்ச்சி) அவர்களிடம் கூறி, கரையும் செரசான் மருந்தைத் தருவித்துக் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளலாம்.

**வினா :** என்னுடைய ஊர் பந்தல்குடி. நான் ஒரு இளம் அறிவியல் பட்டதாரி. நான் கோழிப் பண்ணை வைத்து நடத்துவதற்கு ஆசைப்படுகிறேன். தமிழ் நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்தின் மூலமாகப் பயிற்சி பெற்று, அதன் உதவியுடன் கோழிப் பண்ணை நிறுவ ஆசைப்படுகிறேன். ஆதலால் தமிழ் நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்தின் முகவரியைத் தயவு செய்து தெரிவிக்கும்படி வேண்டுகின்றேன்.

—எஸ். சோமசுந்தரம்,
பி.எஸ்சி.,
பந்தல்குடி.

**விடை :** உங்களுடைய ஊர் பந்தல்குடி என்பதை மட்டும் தெரிவித்து விட்டு, அஞ்சலக முகவரியைத் தெரிவிக்காமல், கையெழுத்தை மட்டும் போட்டு உள்ளீர்கள். உங்கள் முகவரியைத் தெரிவிக்க வேண்டாமா?

கோழிப் பண்ணை அமைப்பதற்கான பயிற்சியும், உதவியும் பெற பின்கண்ட முகவரிக்குத்தொடர்பு கொள்ளுங்கள்.

நிருவாக இயக்குநர்,
தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனம்,
98, லாயிட்ஸ் சாலை,
சென்னை—600 08 6

**வினா** : நான் சிறு தொழில் செய்ய விரும்புகிறேன். உதாரணம் : செங்கல் தயாரிப்பு. இத்தொழில் செய்ய அரசாங்க வங்கிகள் கடனாகப் பணம்தருமா? தரும் என்றால் எந்த வங்கியுடன் அல்லது அதிகாரியோடுதொடர்பு கொள்ள வேண்டும் என்பதைத் தெரிவிக்கவும்.

—மு. குழந்தை கவுண்டர்,
கூத்தாப்பாடி (அஞ்சல்).
(வழி) பெண்ணாகரம்,
தருமபுரி மாவட்டம்.

**விடை** : மிகவும் பின் தங்கிய மாவட்டமாக உள்ள தருமபுரி மாவட்டத்தைத் தொழில்துறையில் முன்னேற்ற வேண்டும் என்பதற்காகத் தமிழ் நாடு அரசு முனைந்து செயலாற்றி வருகிறது.

எனவே, தருமபுரி மாவட்டத்தில் சிறு தொழில் துவங்குவதற்கு **'சிட்கோ'** எனப்படும் 'தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம்' 'டி. ஐ. ஐ. சி.' எனப்படும் 'தமிழ் நாடு தொழில் முதலீட்டுக் கழகம்' ஆகியவற்றின் உதவியும், நாட்டுடமையாக்கப்பட்ட வங்கிகளின் உதவியும் உங்களுக்குக் கிடைக்கும். 'தருமபுரி மாவட்டத்தில் எவ்வகைச் சிறு தொழிலைத் துவக்குவது இலாபகரமாக இருக்கும்?', 'எப்படி நிதி உதவி பெறுவது?' என்பன போன்ற விவரங்களை அறிய, தருமபுரி மாவட்டத்தில் உள்ள தொழில் வணிகத் துறையின் உதவி இயக்குநர் அவர்களை நீங்கள் கலந்தாலோசிப்பதே சிறந்தது. அவரைச் சந்திக்க இயலாவிட்டால், உங்கள் ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள தொழில் விரிவாக்க அலுவலர் (Extension Officer for Industries) அவர்களையோ அல்லது உங்கள் ஊர்நல உதவியாளர் (Gramasevak) அவர்களையோ கலந்தாலோசிக்கவும். வங்கிகளில் இருந்து கடனுதவி பெற உங்கள் அருகாமையில் உள்ள நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கியையோ அல்லது ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியாவையோ கலந்தாலோசிக்கவும்.

**வினா** : எங்கள் சங்கத்திற்கு 'தமிழரசு' பத்திரிகை வரவழைக்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கு 6 மாத சந்தா எவ்வளவு? ஒரு வருட சந்தா எவ்வளவு என்று தெரியப்படுத்த வேண்டுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

—தலைவர்,
விவசாயிகள் சங்கம்,
கன்னந்தேரி (அஞ்சல்),
(வழி) கொங்கணாபுரம்,
சேலம் மாவட்டம்.

**விடை** : ''தமிழரசு'' இதழ் (தமிழ் பதிப்பிற்கு) பெறபின்கண்டவாறு சந்தா செலுத்தலாம் :

6 மாத சந்தாத் தொகை ரூபாய்—6.00.

1 ஆண்டுச் சந்தாத் தொகை ரூபாய்—12.00

சந்தாத் தொகையை மணியார்டர் மூலமாகப் பின்கண்ட முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

பொது நிருவாக மேலாளர்,
''தமிழரசு'' அலுவலகம்,
அரசினர் தோட்டம்,
சென்னை—600 002.

**வினா** : நான் ஒரு இளம் விவசாயி. என் கேள்விக்குத் தவறாது பதில் அளிக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

பன்றியின் கழிவில் இருக்கும் N,P,K எவ்வளவு? இக்கழிவை எல்லா வகைப் பயிர்களுக்கும் இடலாமா? உயர் விளைச்சல் தரும் நெல் வகை, சோளம் ஆகியவற்றிற்கு எத்தனை கிலோ இட வேண்டும்?

—ஜி. பத்மநாபன்,
குச்சிப்பாளையம்,
ராதாபுரம் அஞ்சல்,
விழுப்புரம் வட்டம்,
தென் ஆர்க்காடு மாவட்டம்

**விடை** : பன்றியின் எருவில் (உலர்ந்த நிலையில்) கீழ்க்கண்ட அளவில் சத்துக்கள் உள்ளன :

தழைச்சத்து (N)—3.7 சதம்.
மணிச்சத்து (P)—3.3 சதம்.
சாம்பல் சத்து(K)—0.4 சதம்.

அதாவது 100 கிலோ பன்றி எருவில், 3.7 கிலோ தழைச்சத்து, 3.3 கிலோ மணிச்சத்து, 0.4 கிலோ சாம்பல் சத்து அடங்கியுள்ளது.

பன்றி எரு, நன்கு மக்குவதற்கு நாளாகும். அவ்வாறு மக்கும் போது (Decomposition) வெப்பம் வெளிப்படும். போதிய தண்ணீர் வசதி இல்லாவிட்டால், இவ்வெப்பம் பயிர்களைத் தாக்கித் தீய்த்துவிடும். எனவேதான், உழவர்கள் பெரும்பாலும் போதிய தண்ணீர் வசதி இல்லாத இடங்களில் பன்றி எருவைப் பயன்படுத்துவதில்லை. ஆனால், மானாவாரிப் பயிர்களுக்கு பன்றி எருவைப் பயன்படுத்துதல் சிறந்ததல்ல.

பொதுவாக உழவர்கள் பன்றி எருவைக் கரும்புக்குப் பயன்படுத்துவது உண்டு. போதிய தண்ணீர் வசதி இருப்பின் நெல்லிற்கும் பன்றி எருவைப் பயன்படுத்தலாம்.

நன்கு மக்கிய பன்றி எருவை உயர் விளைச்சல் நெல் ரகங்களுக்கும் அடியுரமாகப் பயன்படுத்தலாம். சோளத்திற்குப் பயன்படுத்துதல் நல்லதல்ல. ஒரு ஏக்கருக்கு 20 கிலோ தழைச்சத்தை அடியுரமாக இட வேண்டுமென்றால் 540 கிலோ பன்றி எருவை அடியுரமாக இடவேண்டும்.

**வினா** : கோழிப் பண்ணை அமைக்க எனக்கு நல்ல தரமான 100 கோழிக் குஞ்சுகள் தேவைப்படுகின்றன. ஆஸ்ட்ரலாப் வளர்ப்பது நல்லதா? அல்லது வெள்ளை லெக்கார்ன் வளர்ப்பது நல்லதா? அவைகளை எங்கிருந்து பெறலாம்?

—பி. ஆனந்தன்,
மேல மாசி வீதி,
மதுரை.

ஆஸ்டரோலார்ப்



## வெள்ளை லெக்கார்ன்



விடை: 'ஆஸ்ட்ரோலார்ப்' (Austrolorp) வளர்ப்பதைவிட 'வெள்ளை லெக்கார்ன்' (White Leghorn) வளர்ப்பதேசிறந்தது. ஏனெனில், 'ஆஸ்டரோலார்ப்' கோழிகளைவிட 'வெள்ளை லெக்கார்ன்' கோழிகளே அதிக முட்டையிடும் தன்மையுடையவை.

'ஆஸ்டரோலார்ப்' அதிக தீவனம் உட்கொள்ளக் கூடியதாகும். ஆனால் அதற்கேற்ப அதிக எடையுடையதாக இருக்குமே தவிர இலாபகரமாக முட்டையிடக் கூடியதல்ல. 'வெள்ளை லெக்கார்ன்' குறைந்த தீனியே உண்டு, குறைந்த எடையுள்ளதாகவே இருப்பதால், ஆண்டிற்கு *185* முதல் *220* முட்டைகள் இட்டு அதிக இலாபம் தருவதாக உள்ளது. எனவே, 'வெள்ளை லெக்கார்ன்' கோழிக் குஞ்சுகளை வாங்கி வளர்ப்பதே சிறந்ததாகும்.

மதுரை மாவட்டத்தில் கப்பலூர் என்ற இடத்தில் தமிழ்நாடு கோழி வளர்ப்பு நிறுவனத்தின் கோழிப் பண்ணை மற்றும் கோழிக் குஞ்சு பொரிப்பு நிலையம் உள்ளது. அங்கு சென்று உங்களுக்குத் தேவையான கோழிக் குஞ்சுகளைப் பணம் கட்டிப் பெற்றுக் கொள்ளலாம்.

**வினா :** *1—4—76* தேதிய ''தமிழரசு'' இதழில் *37-ஆம்* பக்கத்தில் வேலை வாய்ப்புக் குறித்துத் தகவல் அளிக்கும் வார ஏடு 'பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதை எப்படிப் பெறுவது என்பதைத் தெரிவிக்கவும்.

—இரா. முத்தையா,
காரைக்குடி,
ராமநாதபுரம் மாவட்டம்.

(குறிப்பு : இதே கேள்வியைப் பலர் கேட்டுள்ளனர்).

விடை : வேலைவாய்ப்புப் பற்றி தகவல் அளிப்பதற்காக ''எம்ப்ளாய்மெண்ட் நியூஸ்'' (Employment News) என்ற பெயரில் ஒரு வார ஏடு வெளிவருகிறது. இதன் விலை 25 காசுகள்தான். நியூஸ் ஏஜெண்டுகள் மூலமாகவே இவ்வார ஏடு விற்பனை ஆகிறது. சென்னை நகரில் உள்ள பத்திரிகைக் கடைகளில் கிடைக்கிறது. அது போல் காரைக்குடியிலும் கிடைக்கக்கூடும். கிடைக்காவிட்டால் அங்குள்ள நியூஸ் ஏஜெண்டுகளிடம் தெரிவித்தால் வரவழைத்துத் தர அவர்கள் முயற்சிக்கக்கூடும்.

நேரடியாகச் சந்தா செலுத்தினால் இவ்வார ஏடு அனுப்பப்படுமா என்பதை அறிய மடல் எழுதியுள்ளோம். விவரம் தெரிந்ததும் 'கேளுங்கள் கொடுக்கப்படும்' பகுதியில் தெரிவிக்கப்படும். எனவே, இதுபற்றி கேள்வி அனுப்பியவர்கள் அடுத்த இதழ் வரை பொறுத்துக்கொள்ளவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கின்றோம்.

—ஆர். மாணிக்கம்.

## குடும்ப நல அறுவைச் சிகிச்சை... சில புள்ளி விவரங்கள்!

சர்வதேச பெண்கள் ஆண்டான 1975-ல் இந்தியாவில் பத்து மாநிலங்களில் ஆண்களைவிட அதிகமான பெண்கள் குடும்பக்கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை செய்து கொண்டிருக்கிறார்கள்.

பத்து மாநிலங்களில் ஆந்திரப் பிரதேசம் முதலிடம் பெற்றுள்ளது. 1975-76ல் அந்த மாநிலத்தில் 87,995 பெண்கள் அறுவைச் சிகிச்சை செய்துகொண்டிருக்கிறார்கள். அறுவைச் சிகிச்சை செய்துகொண்ட ஆண்களின் எண்ணிக்கை 21,067 ஆகும். இரண்டாவது இடம் பெற்றுள்ள கர்நாடகத்தில் 69,521 பெண்கள் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டுள்ளனர். அறுவைச் சிகிச்சை செய்து கொண்ட ஆண்கள் எண்ணிக்கை 6,974 தான்.

மற்ற மாநிலங்களில் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்களில் பெண்களை விட ஆண்கள் எண்ணிக்கை தான் அதிகம். இதில் மகாராஷ்டிரம் முதலிடமும், தமிழ்நாடு இரண்டாவது இடமும் வகிக்கின்றன. விவரம் பின்வருமாறு:

மகாராஷ்டிரம் :

| | |
|---|---|
| ஆண்கள் : | 1,76,974 |
| பெண்கள் : | 1,65,145 |

தமிழ்நாடு :

| | |
|---|---|
| ஆண்கள் : | 1,61,884 |
| பெண்கள் : | 74,135 |

அஸ்ஸாம் :

| | |
|---|---|
| ஆண்கள் : | 1,12,065 |
| பெண்கள் : | 12,147 |

ஒரிஸ்ஸா :

| | |
|---|---|
| ஆண்கள் : | 53,727 |
| பெண்கள் : | 24,066 |

புத்துணர்வு பெற்ற

புதுமை மிகு நாடு—1975-76

# கிராம வாழ்வில் புத்தொளி

- $6\frac{1}{2}$ மில்லியனுக்கு மேலும் இலவச வீட்டுமனைகள் கொடுக்கப்பட்டுள்ளன. 3,68,000 வீட்டுமனைகள் அபிவிருத்தி செய்யப்பட்டவை; 2,46,000 கட்டி முடிக்கப்பட்டவை.

- கொத்தடிமை விலங்கொடிக்கப்பட்டு, 47,000 பேர் விடுதலை பெற்றனர். நில உச்ச வரம்புச் சட்டம் மூலம் 16;67,000 ஏக்கர் உபரி நிலம் கிடைத்தது. அதில் 4,24,000 ஏக்கர், நிலமில்லாதோருக்கு வழங்கப்பட்டன. பயனடைந்தோர் 1,80,000.

- 19 கிராமிய வங்கிகள் அமைக்கப்பட்டன; 1976-77ல் மேலும் 50 வங்கிகள் நிறுவத் திட்டமிடப்பட்டுள்ளது. கூட்டுறவுக் கடன் நிறுவனங்கள் பலப்படுத்தப்படுகின்றன.

davp 76/88

மாணவர் அரங்கம்

# பொது அறிவு என்னும் கூரிய பார்வை!



நாளையத் தலைமுறைகளான இன்றைய மாணவ, மாணவியர் எல்லா நற்பண்புகளிலும் நனி சிறந்து விளங்கிட வேண்டும். இதற்குப் பெற்ருேர்கள் பெருந்துணை புரிந்திட வேண்டும். தங்கள் பிள்ளைகள் கல்வி, அறிவு, ஒழுக்கங்களில் தடம் மாறிப் போகாமல் கவனித்துக் கொள்ள வேண்டும்.

மாணவர்கள் தம் அறிவு வளர்ச்சியில் கண்ணும் கருத்தாய் இருத்தல் வேண்டும். அதற்கு நல்ல நூல்களைப் படிக்கும் ஆர்வம் மிகுந்திட வேண்டும். நல்ல தரமான பத்திரிகைகளையும், இதழ்களையும் படித்துத் தம் அறிவை அவர்கள் வளர்த்துக் கொள்ளலாம்.

சென்னையில் நூலகங்களுக்குக் குறைவில்லை. கன்னிமாரா நூலகம், சென்னைப் பல்கலைக் கழக நூலகம், சென்னை மாவட்ட மத்திய நூலகம், கிளை நூலகங்கள் முதலியன உள்ளன. இவை தவிர தனியார் நூலகங்களும் ஆங்காங்கே உள்ளன. இவற்றை மாணவ மணிகள் பெருமளவில் பயன்படுத்திக் கொள்ள முன்வர வேண்டும்.

ஓய்வு நேரங்களிலும், விடுமுறை நாட்களிலும் பொழுதை வீணே கழிக்காமல் நூலகங்களுக்குச் செல்லலாம்.

பள்ளி, கல்லூரிகள் நமக்குக் கல்வி என்னும் கண்ணைத் தருகிறதென்ருல், நூலகமும் பத்திரிகைகளும் பொது அறிவு என்னும் கூரிய பார்வையைத் தருகின்றன.

உலகில் எத்தனையோ நிகழ்ச்சிகள் அன்ருடம் நடக்கின்றன. அவற்றுள் முக்கியத்துவம் பெறும் நிகழ்ச்சிகள் சிலவே.

குறிப்பாக இந்தியாவில் நடந்த நிகழ்ச்சிகள் அதிலும் முதன் முதலில் நடந்த நிகழ்ச்சிகளுக்கான சில வினுக்களும், பொதுவான விஷயங்கள் குறித்த வினுக்களும் கீழே தரப்பட்டிருக்கின்றன :

தேர்வின் போது வினுக்களுக்கு விடைகள் எழுதுகிறீர்கள். இதோ, உங்களுக்காக ஒரு பொது அறிவுத் தேர்வு! அதற்கான வினுக்கள் சில கீழே தரப்பட்டுள்ளன. அவற்றுக்கு விடை காண முடிகிறதா, பாருங்கள்.

**வினுக்கள் :**

1. (அ) விடுதலை பெற்ற இந்தியாவின் முதல் தளபதி யார்?

   (ஆ) முதல் இந்திய கவர்னர் ஜெனரல் யார்?

   (இ) விடுதலை பெற்ற இந்தியாவின் முதல் பெண் கவர்னர் யார்?

   (ஈ) இந்தியாவில் முதன் முதலில் அஞ்சல் தலை எப்போது வெளியிடப்பட்டது?

2. 'உங்டாட் மாநாடு' என்ருல் என்ன? (அண்மையில் இது நைரோபியில் நடந்தது)

3. ஊட்டி, கொடைக்கானல், ஏர்க்காடு ஆகியவை கோடைக்கால வாழுமிடங்கள் என்பது நமக்குத் தெரியும். பின்வரும் இந்த இடங்கள் எங்கெங்கு உள்ளன?

   (அ) டல்ஹௌசி, (ஆ) குல்மார்க், (இ) காலிம்பாங் ( Kalimpong ), (ஈ) மஹாபலேஷ்வர்.

4. தலைமைச் செயலகம், மாநிலக் கல்லூரிக் கட்டடங்கள் எப்போது கட்டப்பட்டன?

5. சென்னை மாநகராட்சியின் வயது என்ன?

6. 'பேப்பர்' ( Paper ) என்ற சொல் எப்படி வந்தது?

7. இந்தியாவின் தற்போதைய மக்கள் தொகை எவ்வளவு?

8. 'பிரதாப முதலியார் சரித்திரம்' யாரால் எழுதப்பெற்றது?

9. இந்திய தேசியப் பாடல் முதலில் எங்கே எப்போது பாடப்பட்டது?

10. இந்தியச் செய்தி நிறுவனத்தின் பெயர் 'சமாசார்'. அதேபோல அமெரிக்க, ரஷ்ய நாட்டுச் செய்தி நிறுவனங்களின் பெயர்கள் யாவை?

(விடைகள்: பக்கம் 48 பார்க்க)

# வேலூரில் 20 அம்சத் திட்டத்தை விளக்கும் இனிய திருவிழா

உலக உத்தமர் காந்தி யடிகள் 'Unto the last' என்ற அருமையான நூலைப் படித்து முடித்ததும் அவர் உள்ளத்தில் உருவானதே 'கடையனுக்கும் கடைத்தேற்றம்' அளிக்கும் 'சர்வோதயம்'. 'சர்வோதய சமுதாய அமைப்பில், , ஏழையென்றும், அடிமையென்றும் யாருமிருக்க மாட்டார்கள். 'உழைக்கப்பிறந்த வர்கள்'—'உண்டு கொழுக்கப் பிறந்தவர்கள்' என்கிற இரு வேறு பிரிவினர் இருக்கமாட்டார்கள். 'இல்லாரும் உடையாரும்' என்றிருக்கமாட்டார்கள், சர்வோதய அமைப்பில், எல்லார்க்கும் எல்லாம் என்றிருக்கும்—'எல்லார்க்கும் எல்லாம்' இருக்கும். இத்தகையதொரு சமுதாயத்தை உருவாக்கவே, இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள், 1-7-75-ல் '20 அம்சத் திட்டத்தினைப் பிரகடனப் படுத்தினுர்கள். வாழ்வுக்கு வழி காட்டியாக - முன்னேற்றத்தின் முன்னேடியாக விளங்கும் அந்த '20 அம்சத் திட்டம்'-தமிழகத்தினைப் பொறுத்தவரை சற்று காலந்தாழ்த்தியே நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது. எனினும் மிகத் தீவிரமாக நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகள் எல்லாக் கட்டங்களிலும் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

20 அம்சத் திட்டத்தின் அடிப் படையில் தமிழகத்தில் கடந்த நான்கு மாதங்களில் நிகழ்ந்துள்ள மகத்தான சாதனைகளை விளக்கும் வகையில் மாவட்டந்தோறும் '20 அம்சத் திட்டப்பலமுனை விளக்க விழா'க்கள் சிறப்பான முறையிலும், மக்களுக்கான இந்த மக்கள் திட்டத்தை மக்களே உணர்ந்து நடைமுறைப் படுத்துவதில் தீவிரமான முனைப்பும் ஆர்வமும் கொள்ளத்தக்க வகையிலும் நடத்தப்பட்டு வருகின்றன.

புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், சேலம் ஆகிய நான்கு மாவட்டங்களில் ஏற்கெனவே இந்த 20 அம்சத் திட்டப் பலமுனை விளக்க விழாக்கள் நடைபெற்றுள்ளன. அண்மையில் வட ஆர்க்காடு மாவட்டத்தில் இவ் விழா 9-6-76-ல் தொடங்கி 12-6-76-ல் நிறைவெய்தியது.

வரலாற்றுப் புகழ்மிக்க வேலூர் கோட்டை மைதானத்தில் அமைக்கப்பட்ட அலங்காரக் கண்காட்சிக் கலையரங்கில், தமிழக அரசின் செய்தி-மக்கள் தொடர்பு துறையும் இந்திய அரசின் செய்தி ஒலிபரப்புத் துறையின் அனைத்து விளம்பரப் பிரிவுகளும் ஒருங்கிணைந்து இந்த விளக்க விழாவை சிறப்பான முறையில் ஏற்பாடு செய்திருந்தனர்.

வட ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு மு. பரமசிவம் ஐ. ஏ. எஸ். அவர்கள், விழாவிற்குத் தலைமை வகித்தார். அவர் தம் தலைமையுரையில்,

''இந்தியப் பிரதமர் அவர்களின் 'சிந்தனையில் பிறந்த திட்டம்' என்று 20 அம்சத் திட்டத்தை வருணித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், ''சமுதாய அடித்தளத்தில் வாழும் ஏழை எளிய மக்களுக்கு எல்லா நலன்களும், சிந்தாமல் சிதறாமல் போய்ச்சேர உதவும் இத்திட்டம், 73-74-க்குப் பிறகு ஏறியுள்ள விலைவாசி ஏற்றத்தைக் கட்டுப்படுத்தி ஒருநிலைக்குக் கொண்டு வந்துள்ளது'' என்றும் குறிப்பிட்டார்.

விழாவைத் துவக்கி வைத்த அனைத்திந்திய வானொலியின் சென்னை நிலைய இயக்குநர் திரு எம். எஸ். கோபால் அவர்கள்,

''அரசு கொண்டு வருகிற திட்டம் எதுவும் வெற்றிகரமாக நிறைவேற வேண்டுமானுல், அதற்கு மக்கள் ஒத்துழைப்பு அவசியம்; இந்த அடிப்படையில் தான், பிரதமரின் 20 அம்சத் திட்டத்திற்கும் மக்களின் ஒத்துழைப்பு வேண்டப்படுகிறது. நமது நாட்டைப் பொறுத்த வரை எழுத்தறிவு இல்லாதவர்களே அதிகமாக இருக்கிருர்கள். எனவே, அவர்களிடத்தில் அரசுத் திட்டங்களை-அவற்ருல் அவர்கள் பெறுகிற நன்மைகளை எடுத்துச் சொல்லக் கண்காட்சி, கலை நிகழ்ச்சி, நாடகங்கள் முதலிய சாதனங்களைப் பயன்படுத்தி வருகிறேம்.

''ஏழை எளிய மக்களின் வாழ்வுக்காகவே 20 அம்சத் திட்டம் கொண்டு வரப்பட்டுள்ளது. அதை நிறைவேற்றுவதற்கு மக்கள் முழு ஒத்துழைப்பையும் தரவேண்டும்'' என்ருர்.

அடுத்து, மத்திய அரசின் மண்டல களவிளம்பர அலுவலர் திரு டி. ஆஞ்சநேயலு அவர்கள் கண்காட்சியைத் திறந்து வைத்து உரையாற்றினுர்.

பின்னர், ''பிறந்தது புதுயுகம் மலர்ந்தன முகங்கள்'' என்னும் தலைப்பில் மாவட்ட மக்கள் தொடர்பு அலுவலகம் வெளியிட்ட 20 அம்சத் திட்டத்தின் 100 நாள் சாதனைகள் அடங்கிய அழகிய சின்னஞ்சிறு தொகுப்பை தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்புத் துறைத் துணை இயக்குநர் திரு சி. என். கிருஷ்ண பாரதி அவர்கள் வெளியிட்டு, அதன் முதல் பிரதியை மேலவை உறுப்பினர் திரு பலராமன் அவர்களிடம் வழங்கினுர்.

திரு கிருஷ்ணபாரதி அவர்கள் பேசுகையில், ''இந்த நாட்டின் சுதந்திரத்திற்காக எத்தனையோ ஆயிரம் பேர் பல்வேறு தியாகங்கள் செய்துள்ளனர். அவர்களெல்லாம் தாமிரப்பட்டயம் கிடைக்குமென்ருே, தியாகி மானியம் கிடைக்குமென்ருே தியாகம் செய்யவில்லை. வருங்காலத்தில், தங்கள் எதிர்காலச் சந்ததியினர் நல்வாழ்வு வாழ வேண்டும் என்பதற்காகத்தான்-நல்வாழ்வு வாழ்வார்கள் என்ற நம்பிக்கையில் தான்.

# அளவான குடும்பம் அளவற்ற இன்பம்

இந்திய மக்கள் தொகை, 1976 மார்ச் முதல் தேதி யன்று 60 கோடியே 62 இலட்சமாக ஆகியுள்ளது. அதாவது ஆண்டுக்கு 2 சத விகிதம் என்ற கணக்கில் மக்கள் தொகை அதிகரித்து வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் நமது மக்கள் தொகையில் ஒரு கோடியே 20 இலட்சம் அதிகரித்திருக் கிறது!

பரிசீலனை ஆண்டில் பிறந் தவர்களின் எண்ணிக்கையி லிருந்து இறந்தவர்களின் எண்ணிக்கையைக் கழித்து இந்தத் தகவல் தரப்பட்டுள் ளது. இதோ, சில புள்ளி விவ ரங்கள்:

ஒவ்வொரு ஆண்டும் 2 கோடியே 10 இலட்சம் குழந்தைகள் பிறக்கின்றன. 90 இலட்சம் பேர் இறக்கின் றனர். அதாவது நமது மக்கள் தொகையில் ஒரு கோடியே 20 இலட்சம் எண்ணிக்கை கூடுகிறது. இதே அடிப்படை யில் கணக்கில் மாதத்திற்கு $17\frac{1}{2}$ இலட்சம் குழந்தைகள் பிறக்கின்றன. தினசரி 60 ஆயிரம் குழந்தைகள் பிறக் கின்றன. மணிக் கணக்கில் பார்த்தால் சுமார் 2,500 குழந்தைகள் பிறக்கின்றன. ஒவ்வொரு $1\frac{1}{2}$ நொடிக்கும் ஒரு குழந்தை பிறக்கிறது!

ஓர் ஆண்டில் இந்தியாவில் அதிகரிக்கும் மக்கள் தொகை, ஆஸ்திரேலியாவின் மொத்த மக்கள் தொகைக்குச் சம மாகும்.

''கடந்த 29 ஆண்டுகளில் - சுதந்திரப் போராட்டம் என்ற முதற்கட்டத்தைத் தாண்டி, பொருளாதார விஞ்ஞானத் திட் டங்களை உருவாக்குதல் என்ற இரண்டாவது கட்டத்தில்-பல் வேறு திட்டங்களை உருவாக்கி நிறைவேற்றியிருக்கிறோம். இதன் பயனாக, உலகில் தொழில்நுட்ப வளர்ச்சியில் நாம் 6-வது இடத் தில் இருக்கிறோம். இதற்காக நாம் பெருமைப்பட வேண்டும்.

''மூன்றாவதாக, சமுதாய நீதியை நிலைநாட்ட வேண்டிய கட்டத்தில் நாம் இருக்கிறோம்.

'கஞ்சி குடிப்பதற்கில்லார்-
அதன்
காரணம் இவை என்னும் அறிவு
மிலார்''

என்றார் பாரதியார். அவ்வாறு கஞ்சியின்றிச் சமுதாயத்தின் கடைக்கோடியில் கிடக்கும் ஏழை எளிய மக்களுக்கெல்லாம் கஞ்சி ஊற்றுகிற மாபெரும் திருவிழா தான் இந்தத் திருவிழா.

''இங்கு மக்களிடத்தில் ஒரு புதுச் சிந்தனையை உருவாக்க வேண்டும்; அவர்களுக்குள்ள பொறுப்பை அவர்களுக்கு உணர்த் தியாக வேண்டும். அடித்தளத் தில் வாழும் எல்லா மக்களுக்கும் எல்லா நன்மைகளும் கிடைக்கச் செய்தாக வேண்டும். இதற்குத் தான், பிரதமர் இந்திராகாந்தி அவர்கள் 20 அம்சத் திட்டத்தை உருவாக்கினார்கள் இந்த 20 அம்சத்திட்டம், அரசின் திட்ட மல்ல - உத்தியோகஸ்தர்களின் திட்டமுமல்ல-மக்களின் திட்டம்- மக்களுக்கான திட்டம். இந்த உண்மையை மக்கள் நன்கு உணர்ந்து செயல்பட்டால், நாம் 'சமுதாய நீதியை நிலைநாட்டுவது' என்ற மூன்றாவது கட்டத்திலும் வெற்றி பெற்றவர்களாவோம்!'' என்றார்.

விழாத் தொடக்கத்தில் மாவட்ட மக்கள் தொடர்பு அலு வலர் திரு டி.பி.எஸ். சுந்தர நாதன் அனைவரையும் வரவேற் றார்.

தொடர்ந்து, 20 அம்சத் திட் டத்தினை விளக்கும் 'ஒரே மந்தி ரம்' என்ற நாடகம் நடைபெற் றது!

பொதுவாக 20 அம்சத் திட்ட பலமுனை விளக்கவிழா, ''மக்களி டையே ஒரு புதிய சிந்தனையை யும் புதிய எழுச்சியையும் உரு வாக்கும் இன்பத் திருவிழா வாகவே விளங்கியது!

—சாமி பழனியப்பன்

# கடன் முன்பணம் பற்றிய கையேடு விற்பனையாகிறது!

''கடன், முன்பணம் பற்றிய கையேடு'' (Manual of Loans and Advances) முதல்பதிப்பு (First edition) தமிழ்நாடு அரசின் நிதித்துறையால் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இந்தக் கையேட்டில், பொதுமக்களுக்கும் அரசுப் பணியாளர்களுக்கும், பொதுத்துறை நிறுவனங்களுக் கும் அரசிடமிருந்து கிடைக்கும் பல்வேறு வகையான கடன் வசதிகள் அனைத்தையும் தொகுத் தளிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு கடன் திட்டம் பற்றியும், சுருக்க மாகவும் தெளிவாகவும் விளக்கப் பட்டுள்ளது. இந்நூல் பொது மக்களுக்கு மிகவும் பயனுடைய தாக அமைந்துள்ளது.

வருவாய் வாரியம், வேளாண் மைத்துறை, பால்வளத்துறை, தொழிலாளர்துறை, பிற்பட் டோர்நலத்துறை, கல்லூரிக் கல்வித்துறை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை, மீனளத் துறை, கைத்தறித்துறை, அரிசன நலத்துறை, தொழில் வணிகத் துறை, மருத்துவக் கல்வித்துறை, பொது நூலகத் துறை, மறு வாழ்வுத் துறை, சர்க்கரைத் துறை, தொழில் நுட்பக் கல்வித் துறை, கால்நடை மருத்துவக் கல்வித்துறை, சிறைக்கூடத்துறை, கூட்டுறவுத்துறை, துறைமுகத் துறை, கிராமப்புற வீட்டுவசதி மையம் ஆகிய 20 துறைகளின் மூலம் பொதுமக்களுக்குக் கிடைக் கக்கூடிய கடன் வசதிகளைப்பற்றி யும், உள்ளாட்சி நிறுவனங்களுக் குக் கிடைக்கும் கடன்வசதி களைப் பற்றியும், அரசுப் பணி யாளர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் பல்வேறு கடன் வசதிகளைப் பற்றியும், பொதுத்துறை நிறு வனங்களுக்கு வழங்கப்படும் கடன்களைப் பற்றியும் இந்நூலில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது.

338 பக்கங்கள் அடங்கிய இந் நூலின் விலை ரூபாய் 10-00 தான். இந்நூலை, அரசினர் வெளியீடுகள் விற்பனை நிலையத்திலிருந்து பெற் றுக் கொள்ளலாம்.



சென்னை தேனும்பேட்டை அண்ணா சாலையில் அமைந்துள்ள தமிழ்நாடு பீங்கான் தொழில் (சிராமிக்) நிறுவனத்தின் நவீன காட்சி அறையைத் தமிழ்நாடு அரசின் தொழில் துறைச் சிறப்புச் செயலாளர் திரு டி. என். சேஷன் அவர்கள் 18-6-'76-ல் திறந்து வைத்தார்.

அனைத்து இந்திய வானொலியின் சென்னை நிலையத்தால் தயாரிக்கப்பட்ட இருபது அம்சப் பொருளாதாரத் திட்டம் பற்றிய 'சலங்கைக் கதிர்' (Spots and Jingles) என்ற நிகழ்ச்சியைத் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு வி. கார்த்திகேயன் அவர்கள் 20-6-'76 அன்று துவக்கி வைத்தார்.





திருச்சிக்கு அருகே காவிரியாற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள புதிய பாலத்தை மத்திய உள்துறை அமைச்சர் திரு கே. பிரம்மானந்த ரெட்டி அவர்கள் 19-6-'76-ல் திறந்து வைத்தார். அவ்விழாவிற்கு ஆளுநர் ஆலோசகர் திரு ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் தலைமை வகித்தார்.

# படமும் செய்தியும்







மத்திய அரசின் பாதுகாப்பு உற்பத்தித் துறை அமைச்சர் திரு வி. என். காட்கில் அவர்கள் 27-6-'76-ல் ஆவடியில் உள்ள படைவீரர் உடை தயாரிக்கும் தொழிற்கூடத்தின் சிற்றுண்டிச் சாலையைத் திறந்து வைத்தார்.



இருபது அம்சப் பொருளாதாரத் திட்டத்தின் ஓராண்டு விழாவையொட்டி, மத்திய, மாநில செய்தி விளம்பரத் துறைகள் ஒருங்கிணைப்புக் குழுவினர் சென்னை கலைவாணர் அரங்கத்தில் அமைத்திருந்த 'வளர்ச்சியும் வளமும்' என்ற பொருட்காட்சியைத் தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திரு வி. கார்த்திகேயன் அவர்கள் 26-6-'76 அன்று திறந்து வைத்தார். அப்பொருட்காட்சியைத் தலைமைச் செயலாளர் அவர்களும், திரு ஆர். வெங்கட்ராமன் அவர்களும் பார்வையிடுவதைப் படத்தில் காணலாம்.





செங்கற்பட்டு மாவட்டத்தில் 20 அம்சப் பொருளாதாரத் திட்டத்தின் கீழ் ஏற்பட்டுள்ள சாதனைகளை விளக்கும் வகையில் காஞ்சிபுரத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த 'பலமுனை விளக்க விழா'வினைத் தமிழ் நாடு ஆளுநரின் ஆலோசகர் திரு ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு டி. கே. ஏ. திவான் முகம்மது அவர்கள் தலைமையில் 27-6-'76-ல் துவக்கி வைத்தார்.

அவ்விழாவினை முன்னிட்டு நடைபெற்ற சிறப்பு ஊர்வலத்தில் ஒருபகுதி.

**செங்கற்பட்டு மாவட்டத்தில் 20 அம்சப் பொருளாதாரத் திட்டப் பலமுனை விளக்க விழா.**



அவ்விழாவில் தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர் திரு ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்களை வழங்கினார்.



அவ்விழாவில் தமிழ்நாடு ஆளுநரின் ஆலோசகர் திரு ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் ஏழைகளுக்கு நிலப்பட்டா வழங்கினார்.




உடல் ஊனமுற்றவர்களுக்கு மூன்று சக்கர வண்டிகள் வழங்கினார்.

தமிழ்நாடு அரசு

பிற்பட்டோர் நலத் துறை, சென்னை—600 006

# 1976—77ஆம் ஆண்டில் வழங்கப்படும் மாநில அரசு உதவித் தொகை அறிவிப்பு

1. பிற்பட்டோர் நலத் துறையினரால் மாநில அரசு உதவித் தொகை திட்டத்தின் கீழ் பல்வேறு துறைகளில் கல்வி பயிலும் தமிழ் நாடு முழுவதிலுமுள்ள பிற்பட்ட வகுப்பினர், மிக பிற்பட்ட வகுப்பினர் மற்றும் விமுக்த சாதியினர் (Denotified Tribes) ஆகிய வகுப்பினைச் சேர்ந்த மாணவ, மாணவியருக்கு 1976—77-ஆம் ஆண்டுக்கு உதவித் தொகைகள் சென்னையிலுள்ள பிற்பட்டோர் நல இயக்குநர், சென்னை நகரம் உட்பட எல்லா மாவட்டங்களிலுமுள்ள மாவட்ட பிற்பட்ட வகுப்பு நல அலுவலர்கள் மற்றும் மதுரையிலுள்ள கள்ளர் சீரமைப்புத் தனித் துணை ஆட்சியர் ஆகியோரால் வழங்கப்படும். **பெற்றோர்/பாதுகாவலர்/கணவன்/மனைவி ஆகியோரின் ஆண்டு வருமானம் ரூ. 2500/-க்குட்பட்டுள்ள, பிற்பட்ட, மிக பிற்பட்ட மற்றும் விமுக்த சாதியைச் சேர்ந்த மாணவ மாணவியர்கள் மட்டுமே மேற்கண்ட உதவித் தொகை பெறத் தகுதி வாய்ந்தவர்கள். பெற்றோர்/பாதுகாவலர்/கணவன்/மனைவி ஆகியோரின் ஆண்டு வருமானம் ரூ. 2500/-க்கு மேற்பட்ட மாணவர்கள் உதவித் தொகை கோரி விண்ணப்பிக்க வேண்டாம்.**

2. உதவித் தொகைக்கான விண்ணப்ப மனுக்கள் மாவட்டங்களில் பிற்பட்ட வகுப்பு நல அலுவலர்கள் அலுவலங்கள் மூலமும், மதுரையிலுள்ள கள்ளர் சிரமைப்புத் தனித் துணை ஆட்சியர் அலுவலகம் மூலமும் நேரிடையாக கல்வி நிறுவனங்களுக்கு விநியோகிக்கப்படும். சென்னை மாநகரத்தில் பள்ளிப் படிப்பு உதவித் தொகை மனுக்கள் மட்டும் சென்னை மாவட்ட பிற்பட்டோர் நல அலுவலரின் அலுவலகம் மூலம் விநியோகிக்கப்படும். கல்லூரி மற்றும் தொழிற் பயிற்சி நிறுவனங்களுக்கு பிற்பட்டோர் நலத் துறை இயக்குநர் அலுவலகத்திலிருந்து நேரிடையாக விநியோகிக்கப்பட்டுள்ளன.

3. உதவித் தொகை பெற தகுதியுள்ள மாணவர்கள் மனுக்களைச் சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனங்களில் பெற்றுச் சரியான முறையில் பூர்த்தி செய்து தக்க சாதி, வருமானம் மற்றும் முந்திய ஆண்டின் இறுதித் தேர்வில் பெற்ற மதிப்பெண்களையும் தக்க சான்றுகளுடன் சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனத் தலைவர்கள் மூலம் பிற்பட்டோர் நலத் துறை இயக்குநர் அலுவலகம், சென்னை-6, மாவட்ட பிற்பட்டோர் நலத்துறை அலுவலர்களின் அலுவலகங்கள் மற்றும் மதுரையிலுள்ள கள்ளர் சிரமைப்புத் தனித் துணை ஆட்சியர் அலுவலகத்திற்கும் அனுப்ப வேண்டிய கடைசி நாட்கள் கீழ் வருமாறு:

| | | |
|---|---|---|
| பள்ளிப் படிப்பு | பள்ளி திறந்த 10 தினங்களில் | 15-7-76 அல்லது பள்ளி திறந்த 15 தினங்களில் |
| கல்வி நிலையங்கள் : | | |
| புகுமுக வகுப்பு | ... ... | 15-8-76 |
| இளங்கலை மற்றும் தொழிற் பயிற்சி கல்விகள் : | | |
| ஜூன் 76-ல் திறப்பன | 31-7-76 | 15-8-76 |
| ஜூலை 76-ல் திறப்பன | 31-7-76 | 31-8-76 |
| முதுகலை, மருத்துவம், பொறியியல் கல்விகள் : | 30-9-76 | 30-9-76 |

குறிப்பு : நடப்பு (1976—77) ஆண்டிலிருந்து புதுப்பித்தல் உதவித் தொகைகளையும் பிற்பட்டோர் நலத் துறை அலுவலர்களாலேயே வழங்கப்படும்.

4. சாதி, ஆண்டு, ஊதியம் பற்றிப் பொய்ச் சான்றிதழ் வழங்கினால் உதவித் தொகை திரும்பப் பெறப்படுவதோடு, மற்ற நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும்.

5. குறிப்பிடப்பட்ட தேதிகளுக்குப் பின்னர் வரும் உதவித் தொகை மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

6. தகுதி அட்டைகள் (Entitlement Cards) இந்தத் துறையிலிருந்து வழங்கப்பட மாட்டாது.

இயக்குநர்,
பிற்பட்டோர் நலத் துறை,
சென்னை-6.

advt.

# இனிக்கும் பதநீர்! இயற்கைச் சுவை நீர்!!



உழுது, விதை நட்டுப் பாத்தி கட்டி, நீர் பாய்ச்சிப், பாதுகாக்காமலும் பராமரிக்காமலும் இயற்கையாகவே தரிசு நிலங்களில் வளர்ந்து பயன் தரும் இனிய செல்வம் பனைச் செல்வம். நாலு கோடிப் பனை மரங்கள் தமிழகத்தின் இயற்கைச் செல்வமாக விளங்குகின்றன.

பனை தரும் பல்வேறு செல்வங்களுள் குறிப்பிடத் தக்கது பதநீர். இது, உடலுக்குத் தேவையான பல்வேறு ஊட்டச் சத்துக்களையும் தன்பாற் கொண்டு விளங்கும் இனிய இயற்கைச் சுவை நீர்.

''சாக்கரின்' கலவாத இந்த இன்சுவைப் பதநீரைப்பற்றித்தேசத்தந்தைகாந்தியடிகள்,

''புத்தம் புதிய பதநீர், போதை தரக் கூடியதன்று—இந்துஸ்தானியில் இது நீரா எனப்படும்.

''பதநீர் பருகியதால் ஏராளமானவர்கள் மலச்சிக்கலிலிருந்து விடுதலை பெற்றிருக்கின்றனர். நாள்தோறும் காலையில் தேநீர் பருகுவதற்குப் பதிலாக ஒரு குவளைப் பதநீர் அருந்தினால் காலை உணவாக வேறெதுவும் தேவைப்படாது''

என்று பாராட்டியிருக்கிறார்.

விஞ்ஞான முறைப்படிப் பலர் பதநீரை ஆராய்ந்திருக்கிறார்கள். உடலை நன்கு வளர்த்து உறுதிப்படுத்தக் கூடியதும், எலும்பையும், கண் பார்வையையும் பாதுகாக்கக் கூடியதுமான சத்துப் பொருள்கள் பதநீரில் நிறைந்திருப்பதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

மராட்டிய மாநிலத்தைச் சேர்ந்த டாக்டர் வி. பான்ஸ்லே என்பவர், பதநீரில் உள்ள ஊட்டச் சத்துக்கள் எவ்வாறு உடலுக்குப் பயன்படுகின்றன என்பதை மெய்ப்பிக்கப் பள்ளி மாணவர்களுக்குப் பதநீர் கொடுத்து அதன் பெருமையை நிலைநிறுத்தியிருக்கிறார். இதற்காக, மராட்டியப் பல்கலைக் கழகம், இவருக்கு 'டாக்டர்' பட்டமே வழங்கியிருக்கிறது.

மராட்டிய மாநிலத்தைச் சேர்ந்த அரசாங்க சத்துப் பொருள் நிபுணர் டாக்டர் எம். வி. இராதாகிருஷ்ண ராவ் என்பவர், பதநீரை ஆராய்ந்து அதில் கீழ்க்கண்டவாறு சத்துப் பொருள்கள் அடங்கியிருப்பதாக அறிவித்திருக்கிறார்.

திடத்தன்மை—1.07 கிராம்.

காரத்தன்மை—6.7—6.9 கிராம்.

வெடியுப்பு (100 க.செ. மீட்டரில்)—
0.056 கிராம்.

புரதம் — 0.35 கிராம்

மொத்த சீனி — 10.93 கிராம்.
குளுக்கோஸ் வகைச் சீனி — 0.96 கிராம்

உலோகச் சாம்பல் — 0.54 கிராம்

சுண்ணாம்பு — சிறிதளவு

பாஸ்பரஸ் — 0.14 கிராம்

இரும்புச் சத்து — 0.4 கிராம்

வைட்டமின் சி — 13.25 மி.கிராம்.

வைட்டமின் பி1 — 3.9

(International Units)

தமிழ்நாடு கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் இயங்கும் சென்னை மாநிலப் பனை வெல்லக் கூட்டுறவுச் சம்மேளனம் இத்தகைய ஊட்டச் சத்து நிறைந்த பதநீரைக் குளிர்வித்து, பாட்டலில் அடைத்து, சென்னை நகரில் சிறப்பான முறையில் விற்று வருகிறது. அது, இவ்வாண்டு பிப்ரவரி, மார்ச், ஏப்ரல், மே ஆகிய 4 மாதங்களில் சென்னை நகரில் 3.6 இலட்சம் ரூபாய்க்குப் பதநீர் விற்பனை செய்திருக்கிறது. சுமார் 15 இலட்சம் பேர் இனிக்கும் பதநீர் பருகிப்பயனடைந்து மகிழ்ந்திருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

—சாமி பழனியப்பன்.



# பசுக்களும் எருமைகளும் சினைக்கு வந்திருப்பதை அறியும் முறைகள்

—டாக்டர் ஐ. எம். ராட்ரிக்ஸ்
ஆராய்ச்சி அலுவலர்,
கால்நடை மருத்துவக் கல்லூரி,
சென்னை-7.

**கா**ல்நடை உற்பத்தியின் முன்னேற்றம் திறமையான செயற்கை முறை இனவிருத்தி முறையையே பெரிதும் சார்ந்து இருக்கின்றது. அதன் மூன்று படிகளாவன:

1. உயர் இனக் காளைகளிலிருந்து தரமான விந்துவைச் சேகரித்தல்.

2. நவீன விஞ்ஞான முறைகளைக் கையாண்டு அவற்றைப் பதப்படுத்தி, சேமித்து வைத்தல்.

3. பசுக்களையும், எருமைகளையும் சரியான நேரத்தில் செயற்கை முறையில் இனவிருத்தி செய்தல்.

இம்மூன்றும் சிறந்த முறையில் செயல்படுத்தப்பட வேண்டும். முதல் இரண்டு படிகளும் செயற்கைமுறை இனவிருத்தி ஆய்வகத்தில் செவ்வனே பூர்த்தி செய்யப்பட்டு விடுகின்றன. மூன்றாவது படியின் வெற்றி கால்நடை வளர்ப்போர், அவை சினைக்கு வந்திருப்பதை உடன் அறிந்து, கால்நடை மருத்துவருக்குத் தெரிவிப்பதன் மூலம் சாத்தியமாகின்றது. கால்நடை வளர்ப்போர் அவை சினைக்கு வரும் காலத்தில் வெளிப்படுத்துகின்ற குறிகளையும், நடத்தையையும் அறிந்துகொள்ள வேண்டுவது அவசியமாகின்றது.

**'சினைத் தருணம்' என்றால் என்ன?**

கால்நடைகள் பருவம் எய்தும்போது 'ஓவரி' எனப்படுகின்ற சினை முட்டை உற்பத்தி செய்யும் உறுப்புக்கள் செயல்பட ஆரம்பித்து, பருவ காலத்தில் உண்டாகும் மாற்றங்களை ஏற்படுத்துவதோடு, அவற்றைச் சினைக்கும் வரச்செய்கின்றன. இந்தச் சினைத் தருணம் என்பது 18 முதல் 19 மணி நேரம் வரை இருக்கும். இப்பருவச் சுற்றுக்காலம் 19 முதல் 20 நாட்களாகும். கிடாரிகளில் சினைத் தருணம் 15 மணி நேரம் வரைதான் நீண்டிருக்கும்.

எருமைகளில் சினைத்தருணம் சாதாரணமாகப் பசுக்களைவிட நீண்டு, 24 மணி நேரம் வரை இருக்கும். பருவச் சுற்றுக்காலம் 21 நாட்களாகவும் உள்ளது.

**பசுக்கள் சினைக்கு வந்திருக்கும்போது காணும் அறிகுறிகள்:**

சினைத் தருண அறிகுறிகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம் அவை—

1. சினைத் தருணத்திற்கு (heat) முன் காணும் அறிகுறிகள்.

2. சினைத் தருண அறிகுறிகள்

3. சினைத் தருணத்தின் பின் அறிகுறிகள்.

சினைத் தருணத்திற்கு முன் காணும் அறிகுறிகள்:

சினைத் தருணத்திற்கு 6 மணி முதல் 10 மணி நேரம் முன்னிருந்து கீழ்க்காணும் அறிகுறிகள் காணப்படும்.

1. மற்ற பசுக்களை முகரும்.

2. மற்ற பசுக்களின் மேல் தாண்டும்.

3. பெண் உறுப்பின் வெளிப்பகுதி ஈரமாகவும், சிறிது வீங்கியும் காணப்படும்.

இக்காலத்தில் பசுக்களை இனவிருத்தி செய்தல் பயன் தராது.

**'சினைத் தருண' அறிகுறிகள்:**

இது சினைத்தருணம் (heat) ஆரம்பித்து, 18 மணி முதல் 19 மணி நேரம் வரை இருக்கும். இக்காலத்தில்—

1. மாடுகள் அடிக்கடி கத்தும்.

2. காலையில் நேரத்திலேயே விழித்துக் கொள்ளும்.

3. மற்ற பசுக்களின் மேல் தாண்டும்.

4. மற்ற பசுக்களைத் தன்மேல் ஏற அனுமதிக்கும்.

5. துடிப்புடன் உணர்ச்சி வசப்பட்டிருக்கும்.

6. தீனி உட்கொள்ளாதிருக்கும்.

7. பால் உற்பத்தி கணிசமான அளவு குறைந்திருக்கும்.

8. அடிக்கடி சிறுநீர் கழிக்கும்.

9. வாலைச் சற்றுத் தூக்கிக் கொண்டிருக்கும்.

10. பெண் உறுப்பின் வெளிப்புறம் ஈரமாயும், வீங்கியும் சிவந்தும் காணப்படும்.

11. வழவழப்பான கண்ணாடி போன்ற திரவம் பெண் உறுப்பிலிருந்து வடியும்.

12. கண்மணிகள் கறுத்திருக்கும்.

**சினைத்தருண பின் அறிகுறிகள்:**

சினைத்தருணம் கடந்தபின், பசுக்களை மற்ற மாடுகள் தாண்டும்போது பசு நிற்காது. சிறிதளவு வழவழப்பான திரவ ஒழுக்கு, சினைத்தருணம் முடிந்து 10 மணி நேரம் வரையும் காணப்படும்.

**சினை ஏற்படுத்தச் சரியான நேரம்:**

பரிசோதனைகளின் மூலம் சினை சேர்க்கச் சரியான நேரம் சினைத் தருணம் ஆரம்பித்து 9 முதல் 24 மணி நேரமே என்று கருதப்படுகிறது.

**எருமைகளில் சினைக்கு வந்திருக்கும் அறிகுறிகள்:**

பொதுவாக எருமைகளில் பசுக்களைபோலச் சினை அறிகுறிகள் காணப் படுவதில்லையாதலால், இவற்றைச் சரியாக, உன்னிப்பாக கவனிக்காவிடில் சினைத் தருணத்தை நாம் தவறவிட நேரிடலாம்.

**பொதுவாக எருமைகளில் காணப்படும் அறிகுறிகள்:**

1. அமைதியற்றிருக்கும்.

2. பசுக்களைப்போல் கத்துதல் காணப்படாவிடினும், நீண்ட உறுமல் போன்ற ஒலி எழுப்பும்.

3. பால் உற்பத்தி கணிசமாகக் குறைந்திருக்கும்.

4. பெண் உறுப்பு வெளிப்பக்கம் சிவந்திருக்கும். வீங்கியிருத்தல், வழவழப்பான திரவ ஒழுக்கு போன்றவை பசுக்களை விடச் சற்றுக் குறைந்து காணப்படும்.

5. தீனி தின்னாதிருக்கும்.

6. பசுக்களைவிட அதிகமாக அடிக்கடி சிறுநீர் கழிக்கும்.

எருமைகளைச் சினை ஏற்படுத்தச் சரியான நேரம் சினைத்தருணம் ஆரம்பித்த 16 மணி நேரத்திலிருந்து 24 மணி நேரம் வரையிலான நேரமாகும்.

குறைந்த சதவிகித மாடுகள் கருத்தரிப்புக்குக் காரணம், கால்நடை வளர்ப்போரின் தவறான கவனிப்பே ஆகும். அவைகளில் சில—

1. சினைக்கு வந்திருப்பதைக் கவனியாது விட்டுவிடுதல்.

2. சரியான பதிவேடுகள் அல்லது குறிப்புகள் வைத்திருக்காமலிருத்தல்.

3. சினையா, இல்லையா என்பதைச் சோதனை செய்து அறியாதிருத்தல்.

4. சரியான நேரத்தில் கால்நடை மருத்துவரைக் கலந்தாலோசிக்காமலிருத்தல்.

ஆகவே, கால்நடை வளர்ப்பவர்கள் மிக உன்னிப்பாக மேற்சொன்ன அறிகுறிகளைக் கண்டுபிடித்து, சரியான நேரத்தில் மாடுகளைச் செயற்கைமுறைக் கருத்தரிப்பு செய்வதுடன், அவை பற்றிய குறிப்புகளையும் எழுதி வைத்தல் அவசியம்.

---



இந்தக் கண்காட்சியில் வைக்கப்பட்டுள்ள எழில்மிகு பொருள்களில் சிறந்தவையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பொருள்களை உருவாக்கியவர்களுக்கு, ஆளுநர் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் அவர்களின் துணைவியார் திருமதி மீனா சுப்பிரமணியன் அவர்கள் பரிசுகளை வழங்கினர்.

# பீங்கான் பொருள்கள் கண்காட்சி காண வாரீர்!

தமிழ்நாடு அரசின் பீங்கான் பொருள்கள் தயாரிப்பு நிறுவனம் (தமிழ்நாடு சிராமிக்ஸ் லிமிடெட்) உற்பத்தி செய்துள்ள 200-க்கும் மேற்பட்ட கலைப்பொருள்களின் கண்காட்சியை 3—7—1976 அன்று மாலை, சென்னை அரசினர் தோட்டத்தில் உள்ள சென்னை இராஜாஜி மண்டபத்தில், ஆளுநர் ஆலோசகர் திரு. ஆர். வி. சுப்பிரமணியன் அவர்கள் துவக்கி வைத்தார். இவ்விழாவிற்கு தமிழ்நாடு அரசின் தொழில்துறைச் செயலாளர் திரு. டி. என். சேஷன் அவர்கள் தலைமை தாங்கினர்.

பீங்கான் பொருள்களின் கண்காட்சி 18—7—76 வரை தொடர்ந்து நடைபெறும். காலை 10 மணி முதல் இரவு 7 மணி வரை இக்கண்காட்சியைப் பார்வையிடலாம். கலையழகு மிகுந்த, வீட்டு உபயோகத்திற்குரிய பீங்கான் பொருள்களும் இக்கண்காட்சியையொட்டி விற்பனை செய்யப்படுகின்றன. எனவே இக்கண்காட்சியைக் காண வருமாறு பொது மக்களை அழைக்கின்றோம்.

# வாழ்வு சிறக்க
# வளம்பெற
# சேமியுங்கள்

எங்களிடம் போடப்படும் வைப்புத் தொகை (Fixed Deposits) என்றைக்கும் பாதுகாப்பாய் இருக்கும். காரணம் எங்களது நிறுவனம் தமிழக அரசுக்குச் சொந்தமானது.
எங்களிடம் போடப்படும் வைப்புத் தொகை உங்களுக்கு நிறைய வட்டியை ஈட்டித் தருகிறது. அதனல் உங்களின் வருவாய் விரைவில் கூடுகிறது.

| | ஓர் ஆண்டிலிருந்து இரண்டு ஆண்டுக்குள் | இரண்டு ஆண்டிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குள் | மூன்று ஆண்டிலிருந்து நாங்கு ஆண்டுகளுக்குள் | நான்கு ஆண்டும் அதற்கு மேலும் |
|---|---|---|---|---|
| வைப்புத்தொகைக்கு அளிக்கப்படும் வட்டிவிகிதம் | 11½% | 12% | 12½% | 13% |

விபரங்களுக்கு தயவு செய்து அணுகவும்:-

## தமிழ்நாடு போக்குவரத்து வளர்ச்சி நிதி நிறுவனம்

(தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமானது)
5, கிரீம்ஸ் ரோடு, ஆயிரம்விளக்கு, சென்னை-600 006

**சுகவனேஸ்வர், ஐ.ஏ.எஸ்.**
நிர்வாக இயக்குநர்.



# வேலை வாய்ப்பு அலுவலகங்களின் பணி


ஏ. பிச்சை
செயலாளர்
உடல் ஊனமுற்றோர்
மறுவாழ்வு
மாநில வாரியம்


"உலகத்திலேயே மகிழ்ச்சியான மனிதன் நான் தான்" என்றார் பேரறிஞர் பெர்னாட்ஷா. அதைக் கேட்டுக் கொண்டிருந்த நண்பர் திருப்பிக் கேட்டார்; "மற்றவர்களுக்குக் கிடைக்காத மகிழ்ச்சி உங்களுக்கு மட்டும் எப்படிக் கிடைத்தது" என்று. பெர்னாட்ஷா பதில் பேசுகிறார். மனிதனுக்கு மகிழ்ச்சி வேண்டுமென்றால், அவனுக்கு இரண்டு அடிப்படைத் தேவைகள் சரியாகப் பூர்த்தி செய்யப்படவேண்டும். ஒன்று; மனத்துக்குப் பிடித்த மனைவி இருக்கவேண்டும்; இரண்டு; தனது தகுதிக்கும், திறமைக்கும், விருப்பத்திற்கும் ஏற்ற தொழிலும் இருக்க வேண்டும். எனக்கு மனத்துக்குப் பிடித்த மனைவி இருக்கிறாள். எனது விருப்பத்திற்கேற்ற தொழிலும் இருக்கிறது. "ஆகவே தான் மகிழ்ச்சியாக இருக்கிறேன்" என்றார். பெர்னாட்ஷாவின் கருத்திலிருந்து ஒரு உண்மை நமக்குப் புலப்படுகிறது. அதாவது மகிழ்ச்சிக்கு மனத்துக்குப்பிடித்தமனைவி; தகுதிக்குஏற்ற தொழில் என்பதாகும். மனத்துக்குப் பிடித்த மனைவியைத் தேடுவது தனிப்பட்டவர்களின் பொறுப்பாகும். ஆனால் ஒவ்வொருவருக்கும் அவருடைய தகுதிக்கு ஏற்ற தொழிலை அளிப்பது ஒரு சேம நல அரசின் கடமையாக அமைகிறது. இக்கடமையின் அடிப்படையாகத் தான் அரசு வேலைவாய்ப்பு அலுவலகங்களின் மூலமும், அரசு அலுவலர் தேர்வு ஆணைக் கழகங்கள் மூலமும், முடிந்த அளவு தகுதிக்குத் தகுந்தாற்போல் வேலைகள் அளிக்கப்படுகின்றன.

"என் கடன் பணி செய்து கிடப்பதே"—என்பது ஆன்றோர் வாக்காகும். ஆனால் வேலை வாய்ப்பு அலுவலகங்களின் குறிக்கோள் "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்பதாகும். அரசின் சில துறைகளில் சில பணிகளைச் செய்வதற்கு அரசின் விருப்பப்படி கட்டணம் வசூலிக்கிறார்கள். ஆனால் வேலை வாய்ப்புத் துறையின் பணி இலவசமானது; பாரபட்சம் அற்றதும் ஆகும். "சரியான வேலைகளுக்கு சரியான நபர்களைப் பரிந்துரை செய்வதே" வேலை வாய்ப்புத் துறையின் இலட்சியம் ஆகும்.

வேலைவாய்ப்பு அலுவலகங்களில் ஏழு விதமான பணிகள் ஆற்றப்படுகின்றன. அப்பணிகளின் தன்மையையும் விவரங்களையும் இனி ஒவ்வொன்றாக விளக்கிச் சொல்ல விரும்புகிறேன்.

முதலாவதாக வேலை அளிக்கும் பணியின் கீழ் படித்தவர்கள், படியாதவர்கள், பட்டதாரிகள், ஆண்கள், பெண்கள், அனுபவமுள்ளவர், அனுபவமற்றவர்—ஆகிய வேலை வேண்டுவோரும், தாங்கள் ஏற்கெனவே பார்க்கும் பணியை விடச் சிறந்த பணி வேண்டுவோரும், வேலைவாய்ப்பு அலுவலகத்தில் சில விதிமுறைகளுக்கு உட்பட்டுப் பதிவு செய்யப்படுகிறார்கள். பதிவு செய்யப்பட்டவர்கள், அரசு விதிமுறைகளின்படியும், வரிசைப்படியும் வேலைக்குக் காலி இடங்கள் அறிவிக்கப்படுகின்ற பொழுது, பரிந்துரைக்கப்படுகிறார்கள். தற்காலிகப் பணிகள், நிரந்தரப் பணிகள், மத்திய அரசுப் பணிகள், மாநில அரசுப் பணிகள், தனியார் நிறுவனங்கள் சில அறிவிக்கும் பணிகள்-ஆகிய அனைத்திற்கும் காலியிடங்கள் அறிவிக்கப்படும்போது, தகுதியுடையவர்கள் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு பரிந்துரை செய்யப்படுகிறார்கள். பரிந்துரை செய்வதோடு வேலை வாய்ப்பு அலுவலகங்களின் பணி முடிகிறது. ஆட்களைத் தேர்ந்தெடுத்து நியமனம் செய்யும் முழுப் பொறுப்பும் சம்பந்தப்பட்ட நிறுவனத்தையே முழுமையாகச் சாரும்.

இவ்வாறு வேலை தேடுவோரின் பெயரைப் பதிவு செய்வதும், காலி இடங்களுக்குப் பரிந்துரைப்பதுமாகிய பணியை வேலை வாய்ப்பு அலுவலகங்கள் செய்கின்றன. இப்பணியை ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் உள்ள ஒரு மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகம் ஆற்றுகிறது. சில பெரிய மாவட்டங்களில், அவசியத்தையும் தேவையையும் உணர்ந்து அம்மாவட்டங்களில் குறிப்பிட்ட சில பகுதிகளுக்கென்று ஒரு துணை வேலைவாய்ப்பு அலுவலகமும் இயங்குகிறது. இத்தகைய துணை வேலைவாய்ப்பு அலுவலகங்கள் காஞ்சிபுரம், அம்பத்தூர், ஈரோடு, திண்டுக்கல், நாகப்பட்டினம், தூத்துக்குடி, மண்டபம், கஞ்சமலை ஆகிய இடங்களில் இயங்குகின்றன.

ஆனால் சென்னையில் மட்டும் இந்த அமைப்பு மாறுபட்டு இயங்குகிறது. அதாவது மற்ற மாவட்டங்களில் மாவட்டத்திற்கு ஒரு வேலைவாய்ப்பு அலுவலகம் என்றால், சென்னையில் மட்டும் ஐந்து வேலைவாய்ப்பு அலுவலகங்கள் இயங்குகின்றன. அவை:

1. பள்ளி இறுதி வகுப்புக்குக் குறைவாகப் படித்தோருக்கென்று ஒரு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் வட சென்னையில் இயங்குகிறது.

2. பள்ளி இறுதி வகுப்புத் தேறியோருக்கும், புகுமுக வகுப்புத் தேறியோர், பட்டதாரிகள், தட்டச்சர் சுருக்கெழுத்தர் போன்றோருக்கென்று ஒரு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் நந்தனத்தில் இயங்குகிறது.

3. 'எம். ஏ., எம். எஸ். சி., எம். காம்., போன்ற முதுநிலைப் பட்டதாரிகளுக்கென்றும், பொறியியல்; மருத்துவப் பட்டதாரிகளுக்கென்றும் ஒரு சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம் நந்தனத்தில் இயங்குகிறது.

4. தொழில் நுட்பக் கல்வி பயின்று அதில் சான்றிதழ் அல்லது டிப்ளமா பெற்றவர்கள், கைவினைஞர்கள் ஆகியோருக்கென்று ஒரு மாவட்ட வேலை வாய்ப்பு

அலுவலகம் (தொழில் பயின்றோர்) நந்தனத்தில் செயல்படுகிறது.

5. உடல் ஊனமுற்றோருக்கென்று ஒரு சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகம் நந்தனத்தில் இயங்கி வருகிறது.

தமிழக அரசின் வேலைவாய்ப்புத் துறை ஆண்டுதோறும் சுமார் 35,000 பேர்களை வேலையில் அமர்த்துகிறது.

இவை தவிர, சென்னை, மதுரை, அண்ணாமலைப் பல்கலைக் கழகங்களில் பயிலும் மாணவர்களுக்குத் தொழில் முறை வழிகாட்டவும், வேலைவாய்ப்பு அளிக்கவும் 'பல்கலைக் கழக வேலைவாய்ப்பு, தகவல் மற்றும் வழிகாட்டும் நிலையங்கள்'' இயங்கி வருகின்றன.

## தொழில் முறை வழிகாட்டும் பணி

'எண்ணித் துணிக கருமம்' என்பது பழங்காலத் தமிழ்மொழி. ஆனால் இது எக்காலத்திற்கும் பயன்படும் பழமொழி ஆகும். எச்செயலைச் செய்தாலும், நன்கு ஆராய்ந்து, சிந்தித்துச் செயல்பட ஆரம்பிக்க வேண்டும். அதே போல் வேலை தேடும் பிரச்சினையிலும், முன்னதாகச் சிந்தித்து, திட்டமிட்டு முடிவெடுக்க வேண்டும். இன்றைய இளைஞர்கள் வேலை தேடும் பிரச்சினையில் முன்னதாகத் திட்டமிட்டு முயற்சிக்க வேண்டும். அப்படி முயன்றால் பிரச்சினை சுலபமாகத் தீர வாய்ப்புண்டு. இளைஞர்கள் வேலை தேடுப் பிரச்சினையில் முன்னதாகத் திட்டமிடுவதற்கு அவர்கள் சரியான முறையில் வழிகாட்டப்பட வேண்டும். அதற்கு இன்றைய பொருளாதாரச் சூழ்நிலை, வேலை நிலவரம், தேவையுள்ள வேலைகள், பணி பயிற்சி பற்றிய தகவல்கள் ஆகியவை பற்றிய விவரங்கள் இளைஞர்களுக்கு வழங்கப்பட்டு, அவர்களது ஈடுபாட்டிற்கு ஏற்ற தொழிலைத் தேர்ந்தெடுக்க அவர்கள் சரியாக வழிகாட்டப்பட வேண்டும்.

இவ்வாறு வழிகாட்டுவதற்காகவும், வேலைபற்றிய விவரங்களை வழங்குவதற்காகவும் ஒவ்வொரு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்திலும், தொழில் முறை வழிகாட்டும் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் நியமிக்கப்பட்டு, பணி புரிந்து வருகிறார். இந்த அலுவலர் வேலை வேண்டி அலுவலகம் வருவோரைக் கூட்டமாகச் சந்தித்து அறிவுரை வழங்குகிறார். வேண்டுவோருக்குத் தனித்தனியாக பணி, பயிற்சி பற்றிய விவரங்களைத் தருகிறார். அவர் ஒருவருடைய விருப்பு, வெறுப்பு, ஈடுபாடு, திறமை, பொருளாதாரச் சூழ்நிலை ஆகியவற்றை ஆராய்ந்து அவருக்குப் பொருத்தமான துறை, பணி, பயிற்சி ஆகியவற்றைத் தேர்ந்தெடுக்க ஆலோசனை வழங்குகிறார். பள்ளி, கல்லூரிகளுக்குச் சென்று, மாணவர்களைச் சந்தித்து மாணவர்கள், தொழிலைத் தேர்ந்தெடுக்க வேண்டிய பிரச்சினையை அணுகும் முறையையும், வழியையும் விளக்குகிறார். கருத்தரங்கு, பொருட்காட்சி, மாணவர்—வேலையளிப்போர் சந்திப்பு, பெற்றோர்—ஆசிரியர் கழகக் கூட்டங்கள் ஆகியவற்றின் மூலம் மாணவர்களுக்குப்பலவிதப் பணிகள், பயிற்சிகள் பற்றிய விவரங்கள் தந்து விளக்குகிறார்; வழிகாட்டுகிறார். அதன் மூலம் தங்கள் வருங்கால வேலைப் பிரச்சினையைச் சுலபமாகத் தீர்க்க உதவுகிறார். இன்றைய இளைஞர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் அனைவரும் தொழில் முறை வழிகாட்டும் வேலைவாய்ப்பு அலுவலரை அணுகி, தொழில் பற்றிய விவரங்களைத் தெரிந்து, அதன்பின் வேலைக்கு முயற்சிக்குமாறு நான் அன்போடு வேண்டுகிறேன்.

## வேலை நிலவரத் தகவல் பணி

வேலை நிலவரத் தகவல் திட்டத்தின்படி தமிழகத்தில் உள்ள வேலை அளிப்போரிடமிருந்து மூன்று மாதத்திற்கு ஒரு முறை வேலை நிலவரத் தகவல்கள் சேகரிக்கப்படுகின்றன. பொதுத் துறையின் எல்லா நிறுவனங்களும், குறைந்த அளவு 10 பேர்களையாவது வேலைக்கு அமர்த்தியுள்ள தனியார் நிறுவனங்களும் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன.



தமிழகத்தில் மொத்த வேலை அளவு வளர்ந்துள்ளதா, குறைந்துள்ளதா, தேங்கியுள்ளதா என்பதை அறியவும், எழுந்த காலி இடங்களின் எண்ணிக்கை, அவை நிரப்பப்பட்ட விதம், மனிதசக்தி, பற்றாக்குறை போன்ற விவரங்களும் சேகரிக்கப்படுகின்றன. சேகரிக்கப்பட்ட தகவல்கள் பகுக்கப்பட்டு, ஆராயப்பட்டு பல பயனுள்ள முடிவுகள் எடுக்க அரசினரால் பயன்படுத்தப்படுகின்றன.

## தொழில்கள் பற்றி ஆராய்வதும் பகுத்து ஆய்தலுமான பணி

பலவிதத் தொழில்கள் மற்றும் பணிகள் பற்றிய விவரங்கள் இத்துறையின் ஒரு பிரிவால் சேகரிக்கப்பட்டு, பகுத்து ஆராயப்படுகின்றன. அவ்விவரங்கள் படிப்போருக்கும், வேலை தேடுவோருக்கும் பயன் அளிக்கும் வகையில் சிறு கையேடுகளாகத் தயாரிக்கப்பட்டு, இலவசமாகவும் வழங்கப்படுகின்றன. இதனால் மாணவர்களும், வேலை தேடுவோரும், இளைஞர்களும் பயனடைகின்றனர். இப்பிரிவால் வெளியிடப்படும் நூல்களும் கையேடுகளும் வேலை தேடுவோருக்கு வேலை தேடும் முயற்சியில் ஒரு வழிகாட்டியாக அமைகின்றது.



## உடல் ஊனமுற்றோருக்கு வேலை மற்றும் பயிற்சி அளிக்கும் பணி

உடல் ஊனமுற்றோருக்குப் பயிற்சி அளித்து அல்லது வேலை அளித்து அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பது வேலை வாய்ப்பு அலுவலகங்களின் முக்கியப் பணிகளின் ஒன்றாகும். சென்னையில் உள்ள உடல் ஊனமுற்றோருக்கான சிறப்பு வேலைவாய்ப்பு அலுவலகமும், மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகங்களும் உடல் ஊனமுற்றோருக்கு வேலை அளித்து, அவர்களது இருண்ட வாழ்வை ஒளிமயமானதாக ஆக்கப் பாடுபட்டு வருகின்றன. இத்துறை ஆண்டுதோறும் சுமார் 400 உடல் ஊனமுற்றவர்களைப் பணியில் அமர்த்தி வருகிறது. உடல் ஊனமுற்றோரின் நலனைப் பாதுகாக்க

வும், அவர்களுக்கு அளிக்கப்படும் மறுவாழ்வுப் பணியை விரைவுப் படுத்தவும் ''உடல் ஊனமுற்ற ோர் மறுவாழ்வு மாநில வாரியம்'' ஆரம்பிக்கப்பட்டு பணி புரிந்து வருகிறது.

**இலங்கையிலிருந்தும், பர்மாவிலிருந்தும் தாயகம் திரும்பியோருக்கு மறுவாழ்வு அளிக்கும் பணி**

இலங்கையிலிருந்தும், பர்மாவிலிருந்தும் தாயகம் திரும்பியோருக்கு மறுவாழ்வு அளிக்கும் பணியைத் தமிழக அரசின் மறுவாழ்வுத் துறையோடு சேர்ந்து வேலைவாய்ப்பு அலுவலகங்கள் வெற்றிகரமாகச் சமாளித்து வருகின்றன. அவர்களின் மறுவாழ்வுக்காகப் பல திட்டங்கள் தீட்டி, அவர்கள் நேரடியாக வேலையில் சேர்வதற்கும், பயிற்சி அளித்து அதன் பின் வேலையில் அமர்த்துவதற்கும் ஆகிய பணியினை இத்துறை ஆற்றி வருகிறது. இலங்கையிலிருந்தும், பர்மாவிலிருந்தும் தாயகம் திரும்பியவர்களில் சுமார் 800 பேருக்கு ஆண்டுதோறும் வேலைவாய்ப்பு வழங்கி வருகிறது.

**தமிழ்நாடு சிறப்பு வேலை பழகுநர் பயிற்சித் திட்டம்**

தொழில் கல்வி பயின்ற பட்டதாரிகள், டிப்ளமோ பெற்றவர்கள், கைவினைஞர்கள் - ஆகியோருக்கு, பணியில் முன் அனுபவம் இல்லாததால் வேலை கிடைப்பது கடினமாகிறது. அவர்களுக்குத் தகுந்த வேலைப் பயிற்சி அளிப்பதன் மூலம் அனுபவத்தைப் பெறுகிறார்கள். அந்த அனுபவம் அவர்களுக்கு வேலை கிடைக்க உதவுகிறது. இத்தகைய பயிற்சி அளித்து அதன் மூலம் பொறியியல் கல்வி பயின்றவர்களின் வேலைவாய்ப்பைப் பெருக்கும் நோக்கத்துடன், ''தமிழக அரசு சிறப்பு வேலை பழகுநர் பயிற்சித் திட்டத்தை'' இத்துறை செயல்படுத்தி வருகிறது. இதுவும் வேலைவாய்ப்பு அலுவலகங்களின் பணிகளில் ஒன்றாகும்.

''எல்லாருக்கும் வேலை; வேலை இல்லை என்போரே இல்லை'' என்ற நிலை ஏற்பட வேண்டும் என்பதே எல்லாரின் குறிக்கோளும் ஆகும். ஆனால் அக்குறிக்கோளை வேலைவாய்ப்பு அலுவலகங்களால் மட்டுமே அடைந்து விட முடியாது. அதற்கு வேலை வாய்ப்புகள் புதிதாக நிறைய உருவாக்கப்பட வேண்டும். அது நாட்டின் பொருளாதாரச் சூழ்நிலை, தீட்டப்படும் திட்டங்கள், திறக்கப்படும் தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றைப் பொறுத்தது ஆகும். இவை எல்லாம் வேலை வாய்ப்பு அலுவலகங்களின் எல்லைக்குள் வருவதில்லை.

உண்மையில் வேலை அளிக்கும் பிரச்சினை என்பது மலை போன்றது. அதில் வேலைவாய்ப்பு அலுவலகங்கள்ஆற்றி வரும் பணி கடுகளவு போன்றதுதான். ''நீ செய்கின்ற செயல் எது என்பது கேள்வியல்ல; செய்யும் செயலை மனத்தூய்மையுடனும், முழுமையாகவும் செய்து முடிப்பது என்பது கடவுளுக்குச் செய்யும் பணிவிடையாகும்'' என்கிறார் மாசற்ற மாணிக்கம், மாற்றுக்குறையாத தங்கம் காந்தி அடிகள். அதே அடிப்படையில் தான் வேலை வாய்ப்பு அலுவலகங்கள் தங்களின் சிறிய பணியைக் கடமை உணர்வோடு ஆற்றி வருகின்றன. அப்பணியை இன்றைய இளைஞர்களும், மாணவர்களும், வேலை தேடுவோரும் நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்! அது அவர்களுக்கும் நன்மை! நாட்டுக்கும் நன்மை பயக்கும்! !

**(நன்றி: சென்னை வானொலி நிலையம்.)**

# குண்டாறு நீர்த்தேக்கத் திட்டத்துக்கு திட்டக் குழுவின் அனுமதி

தமிழ்நாட்டின் குண்டாறு நீர்த்தேக்கத் திட்டத்துக்கு திட்டக் குழு அனுமதி வழங்கியுள்ளது. சாத்தனூர் நீர்த்தேக்க அணைக்கட்டுத் திட்டத்தின்கீழ் வலதுபுறக் கால்வாய் வெட்டுவதற்கும் அது அனுமதி அளித்துள்ளது.

குண்டாறு நீர்த்தேக்கத்திட்டத்தின்படி, குண்டாறு நதிக்குக் குறுக்கே 351.50 மீட்டர் நீளமும், 14.12 மீட்டர் உயரமும் கொண்ட ஓர் அணை கட்டப்படும். குண்டாறு தமிழ்நாட்டில் திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்டத்திலுள்ள சிற்றாறின் உபநதியாகும். சிற்றாறு, தாமிரபரணி ஆற்றின் உபநதியாக உள்ளது. மழைக்காலத்தில் வீணாகச் செல்லும் வெள்ளத்தை தேக்கி, நீர்ப்பாசனத்துக்குப் பயன்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இதனால், தற்போதுள்ள 454.40 எக்டேர் ஒருபோகச் சாகுபடி ஆயக்கட்டுக்கு உறுதியான பாசனவசதி கிடைக்கும். மொத்தம் 12 ஏரிகள், 6 அணைக்கட்டுகள் ஆகியவற்றிலிருந்து தற்போது நிலையற்ற நீர்ப்பாசன வசதி கிடைக்கிறது. மேலும் 39.69 எக்டேர் நிலத்தை இருபோகச் சாகுபடிக்கு ஏற்றதாக மாற்றவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்துக்கு 58.3 இலட்சம் ரூபாய் செலவாகும். இதனால் 908 எக்டேர் நிலத்துக்கு ஆண்டுதோறும் நீர்ப்பாசனம் கிடைக்கும். இத்திட்டம் 200 சதவிகித நீர்ப்பாசனத்திறன் கொண்டிருக்கும்.

1957-58-ல் பொன்னியாற்றுக்குக் குறுக்கே சாத்தனூர் அணை கட்டப்பட்டது. அந்த அணையின் இடதுபுறக் கால்வாய் 8,498 எக்டேர் நிலப்பரப்புக்குப் பாசனவசதி அளிக்கிறது. அதற்கும் கீழே, திருக்கோவிலூர் மற்றும் இதர அணைக்கட்டுக்களின் கீழ் 10 ஆயிரம் எக்டேர் பரப்புக்குப் பழைய ஆயக்கட்டு ஒன்றும் உள்ளது.

சாத்தனூர் அணைக்கட்டின் வலதுபுறக் கரையில் 28 கிலோமீட்டர் நீளத்துக்குப் புதிய கால்வாய் ஒன்றை வெட்டுவதற்கு இப்பொழுது உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்தக் கால்வாய், புதிதாக 3,648 எக்டேர் நிலப்பரப்புக்கு பாசனவசதி அளிக்கும்; மேலும் தற்போது 34 ஏரிகளிலிருந்து நிலையற்ற நீர்ப்பாசனம் பெறும் 1,249 எக்டேர் நிலப்பரப்பு உறுதியான பாசன வசதி பெறும். நீர்ப்பாசனம் பெறும் இந்த ஆயக்கட்டுப் பகுதி, தென் ஆர்க்காடு மாவட்டம், கள்ளக்குறிச்சி வட்டத்தில், வறட்சியால் பாதிக்கப்பட்ட, பின்தங்கிய பகுதியில் அமைந்துள்ளது.

வலதுபுறக் கால்வாயை வெட்டுவதற்குச் சுமார் 3 கோடியே 58 இலட்சம் ரூபாய் செலவாகும். 100 சதவிகித நீர்ப்பாசனத் திறன் கொண்ட இத்திட்டம், ஆண்டுதோறும் 4,895 எக்டேர் நிலப்பரப்புக்கு நீர்ப்பாசனம் அளிக்கும்.

# அஞ்சலக வங்கியின்

# மாபெரும் பரிசுத் திட்டம்

ஆண்டுக்கு இருமுறை

குலுக்கல்கள் **ஜனவரியிலும் ஜூலையிலும்** நடைபெறும்

ரூ. 20½ இலட்சத்திற்கு
11,116 பரிசுகள்

ஒவ்வொரு குலுக்கலுக்கும் ரூ. 20½ இலட்சத்திற்குக் கீழ்க்கண்ட
11,116 பரிசுகள் உண்டு.

| | | | |
|---|---|---|---|
| முதல் பரிசு (ஒரு லட்சம்) ஒன்று | ... | ரூ. | 1,00,000 |
| 5 இரண்டாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50,000 |
| 10 மூன்றும் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 20,000 |
| 100 நான்காம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 5,000 |
| 1,000 ஐந்தாம் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 500 |
| 10,000 ஆறும் பரிசுகள் ஒவ்வொன்றும் | ... | ரூ. | 50 |

ஏப்ரல் அல்லது அக்டோபர் முதல் தேதியிலிருந்து ஆறு மாதத்திற்கு உங்களது அஞ்சலக சேமிப்புக் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் இருந்தால உங்கள் எண் பரிசு குலுக்கலில் சேர்த்துக் கொள்ளப்படும். ஆண்டு முழுவதும் உங்கள் கணக்கில் ரூ. 200/-க்குக் குறையாமல் வைத்திருந்தால் இரண்டு குலுக்கல்களிலும் கலந்து கொண்டு பரிசு பெற வாய்ப்புண்டு.

உங்கள் சேமிப்புத் தொகைக்கு 5% வட்டி, பரிசு பெற்றவர்க்கும், பெருதவர்க்கும் அளிக்கப்படும்.

விபரங்களுக்கு அருகிலுள்ள தபால் நிலையத்தோடு உடன் தொடர்பு கொள்ளுங்கள்.

**இயக்குநர்,**
தமிழ்நாடு அரசு சிறுசேமிப்புத்துறை,
சென்னை-600 002.



# கோவை மாவட்டத்தில்

# கூட்டுறவுத் துறையின் பணிகள்

ஏழை எளியோர் ஏற்றம் பெற்றிடவும், நடுத்தர மக்கள் நல்வாழ்வினை எய்திடவும், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் தரமான வாழ்வினைக் கண்டிடவும், மாணவ—மாணவியர் ஒளிமயமான எதிர்காலத்தை அடைந்திடவும் வழி செய்கின்ற வகையில் அமைந்துள்ளது நமது பிரதமர் அவர்களின் இருபது அம்சப் பொருளாதாரத் திட்டம்.

இருபது அம்சப் பொருளாதாரத் திட்டத்தின் அனைத்துப் பலன்களும் எல்லா வகையிலான மக்களுக்கும் எளிதில் கிடைத்திடும் வகையில் அரசினுடைய அனைத்துத் துறைகளும் அயராது பாடுபடுகின்றன — முனைந்தும் செயல்படுத்தி வருகின்றன. இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதில் கூட்டுறவுத் துறை பெரும் பங்கினை மேற்கொண்டு சீரிய முறையில் செயல்பட்டு வருகிறது.

**கூட்டுறவுத் துறையின் பங்கு :**

''இருபது அம்சப் பொருளாதார திட்டங்களைச் சார்ந்த 'இன்றியமையாப் பொருட்களின் விலைகளைக் குறைத்தல்', 'தரமான துணிகளைக் கட்டுப்பாட்டு விலையில் பொது மக்களுக்கு வழங்குதல்', 'மாணவர் விடுதிகளுக்குத் தேவையான இன்றியமையா உணவுப் பொருட்களைச் சலுகை விலையில் விநியோகித்தல்', 'மாணவர்களுக்கு நோட்டுப் புத்தகங்கள் மற்றும் இதரப் பொருட்களைக் கட்டுப்படுத்தப்பட்ட விலையில் வழங்குதல்'' என்பனபோன்ற திட்டங்களை நிறைவேற்றுவதில் கூட்டுறவுத் துறை உயர் நிலையான பங்கினை மேற்கொண்டு வருகின்றது.

இத்துறையின் கீழ் செயல்பட்டு வருகின்ற கூட்டுறவுச் சங்கங்கள் இது வரையில் போதிய அளவில் சாதனைகளைக் கண்டிருந்த போதிலும், தொடர்ந்து இருபது அம்சப் பொருளாதாரத் திட்டத்தில் பெரும் பங்கு கொண்டு செயலாற்றிடத் தகுந்த நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றன. தமிழகத்தில் கோயம்புத்தூர், நீலகிரி மாவட்டங்களில் இதுவரை கூட்டுறவுச் சங்கங்கள் இருபது அம்சப் பொருளாதாரத் திட்டங்களை நிறைவேற்றுவதில் —எடுத்த— எடுத்து வருகின்ற நடவடிக்கைகள், செயல் முறைகள் போன்றவைகளை இங்குக் காண்போம்!

**வேளாண்மைத் தொழிலுக்குக் கடனுதவி :**

வேளாண்மைத் தொழில் வளர்ச்சி பெற்றால்தான் நாடு வளமடையும் என்பதனை நன்கு உணர்ந்து, வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக விவசாயிகளுக்கு குறுகிய காலக் கடன், நடுத்தரக் காலக் கடன் உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. கோவை மாவட்டத்திற்கு 1975—76ஆம் ஆண்டிற்கான மொத்தக் கடனுதவித் தொகை ரூ. 1,020 இலட்சம் ஆகும். இதில் குறுகிய காலக் கடன் தொகை ரூ. 950 இலட்சமும், நடுத்தரக் காலக் கடனுதவி தொகை ரூ. 70 இலட்சமும் ஆகும். 1975—76-ஆம் ஆண்டில் குறுகிய காலக் கடனாக வழங்கப்பட்ட உதவித் தொகை மட்டும் ரூ. 930.37 இலட்சமாகும். இதில் சிறு விவசாயிகள், மிகச் சிறு விவசாயிகள், நிலமற்ற — குத்தகையாகப் பயிர் செய்வோர்களுக்கென வழங்கப்பட்ட குறுகிய காலக் கடன் தொகை ரூ. 142.48 இலட்சமாகும்.

வழங்கப்பட்டு வருகின்ற கடனுதவித் தொகைகளை அதிகரித்து, வேளாண்மைத் தொழிலுக்கு மேலும் ஊக்கம் தர வேண்டும் என்பதற்கென 1976—77—ஆம் ஆண்டில் குறுகிய காலக் கடனாக ரூ. 1,100 இலட்சமும், நடுத்தரக் காலக் கடனாக ரூ. 70 இலட்சமும் வழங்கத்திட்டமிடப்பட்டுள்ளது. இதில் சிறு விவசாயிகள், மிகச் சிறிய விவசாயிகள், நிலமற்ற குத்தகைதாரர்களுக்கென குறுகிய காலக் கடனாக ரூ. 210 இலட்சமும், நடுத்தரக் காலக் கடனாக ரூ. 10 இலட்சமும் வழங்கப்படும்.

**நகை மீதான கடனுதவித் திட்டம் :**

பொருள் உற்பத்தி மற்றும் நுகர் காரணங்களுக்கென மக்களுக்கு நகை மீதான கடனுதவிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. நகராட்சிப் பகுதிகளில் அமைந்துள்ள கூட்டுறவு நகர வங்கிகள், மத்தியக் கூட்டுறவு வங்கியின் கிளைகள், வேளாண்மைக் கடன் வங்கிகள், மற்றும் தெரிந்தெடுக்கப்பட்ட கிராமக் கூட்டுறவுகளுடன் சங்கங்கள் போன்றவைகள் தற்பொழுது நகைகளின் மீதான கடன் உதவிகளைச் செய்து வருகின்றன. இவ்வாறு வழங்கப்பட்டு வருவது இருபது அம்சப் பொருளாதாரத் திட்டத்தின் நேரடி விளைவு எனலாம்.

இவ்வகையில் வழங்கப்படும் கடன் தொகைகள் சீராக வழங்கப்பட வேண்டும் என்பதற்காகக் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர், கடன் வழங்குகின்ற எல்லாக் கூட்டுறவு நிலையங்களுக்கும் நகை மீதான கடன்களைப் பரவலாக வழங்க வேண்டுமென அறிவுறுத்தியுள்ளார். அதிக அளவிலான மக்களுக்கு இத்தகைய கடன் உதவிகளை வழங்க வேண்டுமென்பதற்காகத் தனி நபர் ஒருவர் நகை மீது பெறுகின்ற அதிகபட்சக்கடன் தொகை ரூ. 1,000 எனக் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வகையில் இம்மாவட்டத்தில் ஏறத்தாழ ரூ. 316.60 இலட்சம் ரூபாயினை கூட்டுறவுச் சங்கங்கள் 1975—

76-ஆம் ஆண்டு வழங்கியுள்ளது. மேலும் ரூபாய் 348.30 இலட்சம்.

தொகையினை, 12 கூட்டுறவு நகர் வங்கிகள், 15 கூட்டுறவு வங்கிக் கிளைகள், 3 வேளாண்மைக் கடன் வங்கிகள் மூலம் நகைகள் மீது கடன் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மலைப் பகுதி, பிற்பட்ட பகுதிகளில் வாழ்கின்ற [illegible] நலிவுற்ற சமுதாயத்தினருக்கு இந்த வகைக் கடன்கள் வழங்குவதில் தனிக் கவனம் செலுத்தப்பட்டு வருகின்றது. முழு அளவில் சிறுவிவசாயிகளும், மிகச்சிறு விவசாயிகளும் இத்திட்டத்தில் பங்கு பெறத் தகுந்த வழி வகைகளும் செய்யப்பட்டுள்ளன.





**நுகர்வோர் பயன் பெற்றிட....**

நுகர்வோர் நலன்களைப் பாதுகாத்திடவும், அவர்களுக்குத் தேவையான பொருட்களின் விலைகளை நிலைப்படுத்தி, அவைகளைச் சீராக விநியோகித்திடவும் தேவையான ஏற்பாடுகளை இத்துறை மேற்கொண்டுள்ளது. இப்பணியில் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் இன்றியமையாத பங்கினை ஏற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

நுகர்வோர்கள் தக்க பலன்களைப் பெற்றிடுவதற்கென மோயம்புத்தூர் மாவட்டத்தில் 632 பலதரப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களால் 726 நியாய விலைக் கடைகள் இயங்குகின்றன. இவைகள் அனைத்தும் நியாய விலையில் பொருட்களை நுகர்வோருக்கு வழங்கி வருகின்றன. பிரதமரின் இருபது அம்சப் பொருளாதாரத் திட்டம் அறிவிக்கப்பட்டதிலிருந்து 1976-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் வரை விற்பனையான இன்றியமையாப் பொருட்களின் மதிப்பு ரூ. 8,64,32,262.00 ஆகும்.

கூட்டுறவுச் சங்கங்களால் செயல்படுத்தப்படும் நியாய விலை கடைகளோடு கோவையில் 121 தனியார் உணவுப் பங்கீட்டுக் கடைகளும் செயல்படுகின்றன. இவைகளையும் கோவையிலுள்ள 23 கூட்டுறவுச் சங்கங்களுடன் இணைத்திடுவதற்கான ஏற்பாடுகளும் தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தவிர, நுகர்வோரின் நலனுக்கென நவீன திட்டம் ஒன்றும் வகுக்கப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் நகரின் மக்கட் தொகையினைக் கணக்கில் கொண்டு — அதாவது 2,000 குடும்பங்களுக்கு ஒரு கடை என ஏற்படுத்தி நுகர்வோருக்குத் தேவையான பொருட்களை வழங்கிடுவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன. 1971-ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி கோவை நகரின் மக்கள் தொகை 4 இலட்சமாகும். இந்த வகையில் மொத்தம் 40 கடைகள் அமைக்க வேண்டியுள்ளது. தற்பொழுது 28 சில்லறைக் கடைகள் உள்ளன. இத்துடன் இன்னும் 12 கடைகள் ஏற்படுத்த வேண்டும். ஒவ்வொரு கடைக்கும் ரூபாய் 45,000 வரை நிதி உதவி அளித்திட அனுமதி வழங்குமாறு சென்னைக் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருக்குப் பரிந்துரை ஒன்றும் அனுப்பப்பட்டுள்ளது.

**மாணவர் கூட்டுறவு விற்பனை நிலையம்:**

மாணவச் சமுதாயத்தினருக்குத் தேவையான உதவிகளை நல்கிடுவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் கூட்டுறவுத் துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாணவர்களுக்கென ''மாணவர் கூட்டுறவு விற்பனை நிலையங்களை'' உயர்நிலைப் பள்ளிகள், கல்லூரிகள் ஆகிய அனைத்திலும் அமைத்து அவர்களுக்குத் தேவையான பொருட்களைச் சேமித்து, நியாயமான விலையில் வழங்கிட வகை செய்யப்படுகின்றன.

கோயம்புத்தூர் மாவட்டத்தில் 261 உயர்நிலைப் பள்ளிகளும், 28 கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. தற்பொழுது 41 உயர்நிலைப் பள்ளிகளிலும், 8 கல்லூரிகளிலும் 'மாணவர் கூட்டுறவு விற்பனை நிலையங்கள்' செயல்படுகின்றன. இன்னும் 220 உயர்நிலைப் பள்ளிகளிலும், 20 கல்லூரிகளிலும் இத்தகைய விற்பனை நிலையங்கள் ஏற்படுத்தப்படவிருக்கின்றன.

தேசிய பாட நூல்களை விநியோகிக்கின்ற பொறுப்பினையும் கூட்டுறவுச் சங்கங்களிடம் அரசு ஒப்படைத்துள்ளது. கோவை மாவட்டத்தில் 10 வட்டங்களைச் சார்ந்த கூட்டுறவு மொத்த மற்றும் சில்லறை விற்பனைச் சங்கங்கள் 'மொத்த விற்பனைக் கூடங்களாகச்' செயல்படுகின்றன சிந்தாமணி கூட்டுறவுச் சிறப்பு அங்காடியும் இப்பணியில் ஈடுபட்டுச் சிறப்புற செயலாற்றி வருகின்றது.

தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் குறிப்பிட்டுள்ள விலைகளின் பாடநூல்களை இச்சங்கங்கள் விற்பனை செய்ய வகை செய்யப்பட்டுள்ளது. பாடநூல்களை மட்டும் இச்சங்கங்கள் விநியோகம் செய்யவில்லை; கட்டுப்பாட்டு விலையில் நோட்டுப் புத்தகங்களை விநியோகம் செய்திடவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**அரசுத் தொழில் நிறுவனங்கள் :**

பொதுமக்கள், மாணவர்களுக்கு மட்டும் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டால் போதாது. தொழிலகங்களுக்கும், தொழிலாளர்களுக்கும் உதவிடும் வகையில் அவைகள் செயல்பட வேண்டும் என்பதனை நன்கு உணர்ந்து, அரசு தொழில் நிறுவனங்களிலும் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்திட தீர்மானித்தது. இவ்வகையில் 200,



அதற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் பணியாற்றும் தொழில் நிறுவனங்களில் இவ்வகைச் சங்கங்கள் நிறுவப்படுகின்றன. கோவை மாவட்டத்தில் தற்பொழுது 143 தொழில் நிறுவனங்கள் இயங்கி வருகின்றன. இவைகளில் 87 தொழில் நிறுவனங்களில் நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டு விட்டன. மீதம் உள்ள 56 நிறுவனங்களிலும் இச்சங்கங்கள் நிறுவுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களைப் பல்கலைக் கழகத்திலும், பட்டப் படிப்புக் கல்லூரிகளிலும் வலுவுள்ளதாகவும், வளர்ச்சி பெறுவதாகவும் அமைத்திட, நடவடிக்கைகள் இத்துறையில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பரவலான திட்டங்கள் வாயிலாக திறமையாகவும், முனைப்பாகவும் மாணவர்களுக்கு நுகர்பொருள்களை வழங்கிட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. பல்கலைக் கழகம், பட்டப் படிப்புக் கல்லூரியின் உள்ளேயே கூட்டுறவு மொத்த விற்பனைக் கூடங்கள், மாவட்ட விற்பனை மற்றும் விநியோகச் சங்கங்கள் போன்றவைகளின் கிளைகளை அமைத்திட அரசு உத்தேசித்துள்ளது. இந்தத் திட்டம் ஒரு இலட்சம் மக்கட் தொகைக்கு மேற்பட்ட நகரங்களில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. தற்பொழுது கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு போன்ற நகரங்களில் இவைகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

மாணவர்களுக்குப் பயனளிக்கின்ற வகையில் நுகர்பொருள்கள் சலுகை விலையில் வழங்கப்படுகின்றன. இவைகளில் பெரும்பாலானவை உணவு தானியங்கள், எண்ணெய் வகைகள், சோப்புகள், காய்கறிகள், வாசனைப் பொருட்கள், வீட்டிற்குரிய சாமான்கள், புத்தகங்கள், எழுது பொருள்கள், துணி வகைகள் போன்றவைகளாகும். கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர் ஆகிய கல்லூரி மாணவர்களுக்குச் சிந்தாமணி, திருப்பூர், ஈரோடு கூட்டுறவு மொத்த விற்பனைச் சங்கங்கள் நுகர் பொருட்களை வழங்கி வருகின்றன. இவ்வகையில் ஏறத்தாழ 10,376 மாணவர்கள் பயன் பெற்று வருகின்றனர்.

சிந்தாமணி கூட்டுறவுச் சிறப்பு அங்காடி இப்பணியில் பெரிதும் ஈடுபட்டு சிறப்புற பணியாற்றி வருகின்றது. மாணவர்கள் நலனில் அதிக அக்கறையும், ஆர்வமும் கொண்டு விடுதிகளுக்கு ஒரு மாதத்திற்குத் தேவையான நுகர் பொருட்களையும், உணவுப் பொருட்களையும் வட்டியில்லாமல் கடனுக்கு வழங்குகிறது என்பது குறிப்பிடத் தக்கதாகும். பொருட்கள் விநியோகத்திற்கான போக்குவரத்துச் செலவையும் பெற்றுக் கொள்வதில்லை. காய்கறி போன்றவைகளை மொத்த விற்பனை விலைக்கு வழங்குகின்றது. மாணவர்களுக்கான புத்தகங்களுக்கு 5 முதல் 10 சதவிகிதம் வரை கழிவும் தரப்படுகின்றன.

தமிழ் நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், கோயம்புத்தூர் கூட்டுறவு மற்றும் விற்பனைச் சங்கத்தையும், மற்ற 9 கூட்டுறவுச் சங்கங்களையும் உபரியாக விளைந்துள்ள மாவட்டங்களில் நெல் கொள்முதல் செய்து கொள்வதற்கான அனுமதியையும் வழங்கியுள்ளது. இவ்வகையில் 20,900 டன் நெல் கொள்முதல் செய்து கொள்ளலாம். தற்பொழுது தஞ்சாவூர், தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு போன்ற மாவட்டங்களிலிருந்து ஏறத்தாழ 7,739 மெட்ரிக் டன்கள் வரை நெல் கொள்முதல் செய்யப்பட்டு உள்ளது.

பொதுமக்கள் பயன் பெறுகின்ற வகையில் இச்சங்கங்கள் குறைந்த விலையில் அரிசியை விற்பனை செய்கின்றது. நுகர் பொருள் வாணிபக் கழகச் சில்லறை அங்காடிகளைக் காட்டிலும் குறைந்த விலையில் விநியோகம் செய்கின்றன. நுகர்பொருள்கள் வாணிபக் கழகச் சில்லறை அங்காடிகளில் முதல் ரக அரிசி கிலோ ரூ. 2.00 மோட்டா ரகம் கிலோ ரூ. 1.60 என வழங்கப்படுகின்றன. ஆனால் இச்சங்கங்கள் முதல் ரகம் கிலோ ரூ. 1.65, மோட்டா ரகம் கிலோ ரூ. 1.50 ஆக விநியோகம் செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

இவை தவிர, கட்டுப்பாட்டு விலையில் தரமான துணிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. மிகச் சிறிய கிராம மக்களுக்கும் துணிமணிகள் எளிதில் கிடைத்திடுவதற்கான விநியோக முறை பரவலாக்கப்பட்டுள்ளது. மாவட்டம் முழுவதிலுமுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் சில்லறை விற்பனை நிலையங்களாக நியமிக்கப்பட்டுள்ளன.

கிராமப் புறங்களில் 584 சில்லறை விற்பனை நிலையங்களும், நகர்ப்புற பகுதிகளில் 43 சில்லறை விற்பனை நிலையங்களும் செயல்படுகின்றன. 30-4-76 வரை ஏறத்தாழ ரூ. 64.12 இலட்சம் மதிப்புள்ள துணிகள் பொது மக்களுக்கு விநியோகிக்கப்பட்டுள்ளன. கட்டுப்பாட்டு விலையில் துணிகளை விநியோகம் செய்வதற்கென தமிழ் நாடு அரசு இம்மாவட்டத்திலுள்ள 4 நிலையங்களுக்கு ரூ. 2,04,400 வரை நிதியும் ஒதுக்கியுள்ளது.

இவ்வாறு பெருமைப்படத்தக்க வகையில் கோவைமாவட்ட மக்களுக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பல்வேறு பயன்மிகு பணிகளைச் செய்து வருகின்றன.

— ஆயிரராமன்


காதி கிராப்ட்
ஏராளமான சத்து
என்னிடம் உண்டு
தாராளமாய்
என்னைப் பயன்
படுத்துவீர் – "பனை"
இனிமைக்குப் பனஞ்சீனி,
பனை வெல்லம், பனங்கற்
கண்டு, சாக்லெட்கள்,
ஜாம், பழரசங்கள்.
குளிர்ச்சிக்குப் பதநீர்,
பாம்ஓ குளிர்பானங்கள்
எழிலுக்குப் பனை ஓலைப்
பொருட்கள்.
பதநீர்
JAM
துப்புரவிற்குப் பனம்
தும்பு பிரஷ்கள். தரமான
மலிவான, இவை
வாங்கிடத் தமிழக
மெங்கும் 180 காதி
கிராப்ட்.
காதி கிராப்ட்
தமிழ்நாடு கதர்,
கிராமத் தொழில்வாரியம்,
'குறளகம்',
எஸ்ப்ளனேடு,
சென்னை-600 001
KK/380 TAM

# குறைந்த விலையில் சத்துணவு



மகளிர் அரங்கம்

காலைச் சிற்றுண்டி என்று 10 இட்லிகள் அல்லது 6 தோசைகளை நம்மில் பலர் சாப்பிட்டு வருகிறோம். அது மனத்திற்கு மகிழ்ச்சியைத் தருமே தவிர, உடலுக்கு நலத்தையோ வளத்தையோ தரும் என்று சொல்ல முடியாது. சத்துள்ள உணவை நாம் உண்ண வேண்டும் என்பதை எக்காலத்திலும் மறக்கக் கூடாது. அது மட்டுமல்ல, சத்துள்ள உணவு குறைந்த செலவிலும் உருவாக்கப்பட வேண்டும் என்பது நினைவிருக்கட்டும். அத்தகைய உணவு வகைகள் சிலவற்றைப் பார்ப்போம்.

**கேழ்வரகுக் கஞ்சி அல்லது ராகிக் கஞ்சி**

**தேவையான பொருள்கள் :**

கேழ்வரகு மாவு — 85 கிராம்
உப்பு — போதுமான அளவு

**செய்முறை :**

கேழ்வரகு மாவைத் தண்ணீரில் கரைத்துக்கொள்ள வேண்டும். வாணலியில் அதனை ஊற்றிக் கொதிக்க வைக்கவும். கொதிக்கும் போது விடாமல் கிளறிக் கொண்டே இருக்க வேண்டும். தக்க சூடு வந்தவுடன் அடுப்பை விட்டு இறக்கி வைக்க வேண்டும். அதன் பின்னர் தேவையான அளவுக்கு உப்பைச் சேர்க்க வேண்டும். இப்போது சுவையும் ஊட்டமும் நிறைந்த கேழ்வரகுக் கஞ்சி தயார்!

ஏறக்குறைய 6 கிராம் புரதமும் 300 கலோரி சத்தும் கொண்ட உணவு கிடைத்து விடுகிறது. இதன் தயாரிப்புச் செலவு 7 காசுகள்தாம். காலைச் சிற்றுண்டி குறைந்த விலையில் உருவாகி விடுகிறது. 6 மாதக் குழந்தைகளுக்கு, இந்தக் கஞ்சி மிகவும் பயன் தரும் உணவாகிறது.

கோதுமையைப் பூரி போடுவதற்கும் சப்பாத்தி தயாரிப்பதற்கும்தான் பலர் பயன்படுத்துகிறார்கள். அதைக் கொண்டு சோறும் தயாரிக்கலாம் என்பதும் அது உடலுக்கு 300 கலோரி சத்துணவைத் தருகிறது என்பதும் பலருக்குத் தெரிவதில்லை. அதன் தயாரிப்பு முறையைப் பார்ப்போம்.

**கோதுமைச் சோறு**

**தேவையான பொருள்கள் :**

உடைத்த கோதுமை—85 கிராம்.
தண்ணீர், உப்பு — போதுமான அளவு

**செய்முறை :**

தண்ணீரில் உப்பிட்டுக் கொதிக்க வைக்க வேண்டும். உடைத்த கோதுமையை உலையில் இட்டுக் கிளறிக் கொண்டே இருக்க வேண்டும். அடுப்பில் உள்ள நெருப்பின் வெம்மையினால், தண்ணீர் சுண்டத் தொடங்கும். முழுதும் சுண்டியவுடன் நெருப்பை அகற்றிவிட வேண்டும்; சில வினாடிகளில் உலையைக் கீழே இறக்கி வைக்க வேண்டும். சுடச்சுட, சுவையான கோதுமைச் சோறு தயார். 8 காசுகள் மதிப்பில், 10 கிராம் புரதச் சத்தும் 300 கலோரிகளும் கொண்டது இது.

கம்பு என்னும் தானியத்தை நகரவாசிகளில் பலர் அறிந்திருக்க மாட்டார்கள்; சிற்றூர்களில் வாழ்வோர் அதனை, மிகவும் சுவைத்து உண்கிறார்கள். அதனால் ஊட்டச் சத்து நிறைந்தவர்களாகத் திகழ்கிறார்கள். மாலை நேரத்தில் உண்பதற்கேற்ற கம்பு மாவு உணவு ஒன்றினைப் பார்ப்போம்.

**கம்பு மாவுச் சிற்றுண்டி**

**தேவையான பொருள்கள் :**

வறுத்த கம்பு மாவு—25 கிராம்
வறுத்த பாசிப் பருப்பு—25 கிராம்
கடலைப் பிண்ணாக்கு மாவு—15 கிராம்
வெல்லம் அல்லது
பழுப்புச் சர்க்கரை—35 கிராம்
தண்ணீர் — போதுமான அளவு

**செய்முறை :**

வெல்லத்தில் போதுமான தண்ணீர் விட்டுப் பாகாக்கிக் கொள்ள வேண்டும். பாசிப் பருப்பு மாவு, கம்பு மாவு, கடலைப் பிண்ணாக்கு மாவு மூன்றையும் சேர்த்துக் கலக்க வேண்டும். (கலக்கும்போது, அவை கட்டியாகாதபடி பார்த்துக் கொள்ள வேண்டியது முக்கியம்) ஆறிய பின்னர் பரிமாற வேண்டும். சாப்பிடுவதற்கு பாயசம் போலச் சுவையாக இருக்கும்.

இதனை வேறொரு முறையிலும் தயாரிக்கலாம். முன் குறிப்பிட்ட வறுத்த மாவுகளைப் பழுப்புச் சர்க்கரையுடன் கலந்து வைத்துக் கொண்டு மாவாகவே உண்ணலாம். சுவையாக இருக்கும்.

சிறிது தண்ணீரில் அல்லது பாலில் கலந்து பானம் போலவும் சாப்பிடலாம்.

10 காசுகள் விலையில் 15 கிராம் புரதச் சத்தும் 300 கலோரிகளும் கொண்ட கம்பு மாவுச் சிற்றுண்டி கிடைத்து விடுகிறது.

குறிப்பு : ஒருவருக்குத் தயாரிப்பதற்குத் தேவைப்படும் அளவுகளே இங்கு கொடுக்கப்பட்டுள்ளன.

—எஸ். எஸ்.

அரிசன, ஆதிவாசிகள் நலத்துறை

# கல்வி உதவித் தொகை மற்றும் இதர சலுகைகள்

## வழங்குதல் பற்றிய அறிவிப்பு

பள்ளிப் படிப்பும் அதற்கு மேலும் கல்வி பயிலும் அரிசன—ஆதிவாசி மாணவ—மாணவியர்க்கு அரிசன ஆதிவாசிகள் நல இயக்குநராலும், மாவட்ட அரிசன நல அலுவலர்களாலும் (சென்னை மாவட்ட அரிசன நல அலுவலர் உட்பட) வழக்கம் போல் 1976—'77-ஆம் ஆண்டிலும் கல்வி உதவித் தொகை வழங்கப்படும். மாநிலக் கல்வி உதவி பெறுவதற்கு ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூ. 3,000 என்றும், மத்திய அரசு உதவித் தொகை பெறுவதற்கு ரூ. 9,000 வரை உச்ச வரம்பு என்றும் ஆணையிடப்பட்டுள்ளது. ஒரு குடும்பத்தில் கல்லூரிப் படிப்புக்கு உதவித் தொகை (Post-Matric Scholarships) பெறுகின்றவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தது இந்த வருமான வரம்பு. இந்து அரிசனங்களுக்கும், புத்த மதத்தை, சீக்கிய மதத்தைத் தழுவிய அரிசனங்களுக்கும், ஆதிவாசிகளுக்கும் (எம்மதத்தினராயினும் சரி) மத்திய அரசு உதவிச் சலுகை அளிக்கப்படும். எஸ்.எஸ்.எல்.சி. படிப்பிற்கு மேலான படிப்பு பெறுபவர்களுக்கு மட்டும் மத்திய அரசு உதவிச் சலுகை உண்டு.

(2) புதிய மனுக்கள் கல்லூரிகளில் சேர்ந்த பின் 15 நாட்களுக்குள்ளும், புதுப்பிக்கப்பட வேண்டியவற்றை கல்லூரியில் கோடை விடுமுறை முடிந்து மீண்டும் சேர்ந்த பின்னர் உடனடியாகவும், அனுப்பப்பட வேண்டும். எனினும், உதவித் தொகை விண்ணப்பப் பாரங்களை மாணவ—மாணவியர் அனுப்புவதற்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள கடைசித் தேதி கீழே தரப்பட்டுள்ளது :

**புதியது**

| | |
|---|---|
| புகுமுக வகுப்பு மற்றும் பட்டப் படிப்பு — ஜூன், 76-ல் திறக்கவிருக்கும் கல்லூரிகளுக்கு | 15-8-76 |
| புகுமுக வகுப்பு மற்றும் பட்டப் படிப்பு — ஜூலை, 76-ல் திறக்கப்படும் கல்லூரிகள் | 31-8-76 |
| மருத்துவம், பொறியியல், கால்நடை, விவசாயம், மற்றும் மேல் பட்டப் படிப்பு ... | 30-9-76 |

**புதுப்பித்தல் :**

| | |
|---|---|
| **பட்டப்படிப்புகள்** ... | 31-7-76 |
| மருத்துவம், பொறியியல், மற்றும் மேல் பட்டப் படிப்புகள் ... | 30-9-76 |

மேலே குறித்துள்ள காலவரம்பைக் கடந்து வரும் மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. கல்வி உதவித் தொகை முதல் தவணை செல்லுச் சீட்டில் (acquittance) கையெழுத்திடுவதில் மாணவ மாணவியர் காலதாழ்த்தினால் இரண்டாம் தவணையாக அவர்களுக்குச் சேர வேண்டிய தொகை வழங்கப்படாமல் போக நேரிடும் என அறிவிக்கப்படுகின்றது.

(3) கல்லூரிகளில் கட்டணம் செலுத்தாமல் சேர்ந்து கொள்வதற்காக மத்திய அரசு, மாநில அரசு உதவித் தொகை பெறுவதற்குத் தகுதி உள்ளவர்களுக்கு உறுதிச் சான்று அட்டைகள் (Entitlement Cards) கொடுக்கப்படும். சென்னை நகரில் உள்ள கல்லூரிகளில் பயில்வோர் அரிசன, ஆதிவாசிகள் நல இயக்குநரிடமிருந்தும், வெளியூர்களில் உள்ள கல்லூரிகளில் பயில்பவர்கள் சம்பந்தப்பட்ட மாவட்ட அரிசன நல அலுவலர்களிடமிருந்தும் இதைப் பெற்றுக் கொள்ள வேண்டும். சென்னையிலும் தமிழ்நாட்டின் இதர மாவட்டங்களிலும்

உதவித் தொகை வழங்கும் அலுவலர்கள் பற்றிய விவரம் கீழே தரப்பட்டுள்ளது :

| சென்னை நகரம் | வழங்கும் அலுவலர்கள் |
|---|---|
| எஸ். எஸ். எல். சிக்கு உட்பட்ட படிப்பிற்கு மாநில உதவிச் சலுகைகள் அனைத்தும். | சென்னை மாவட்ட அரிசன நல அலுவலர் (இவரது அலுவலகம் மாவட்ட ஆட்சியரின் அலுவலகத்தில் உள்ளது. சென்னை — 600001). |
| எஸ். எஸ். எல். சிக்கு மேற்பட்ட படிப்பிற்கான மாநில மத்திய அரசு உதவிச் சலுகைகள் அனைத்தும். | அரிசன ஆதிவாசிகள் நல இயக்குநர், 'எழிலகம்', சேப்பாக்கம், சென்னை-600005. |
| **மாவட்டங்களில் :** | |
| எல்லா வகையான மாநில மத்திய அரசு சலுகைகள் | அந்தந்த மாவட்டங்களில் உள்ள மாவட்ட அரிசன நல அலுவலர்கள். |
| **தமிழ்நாடு முழுவதும் :** | |
| 1. காந்தி நினைவுத் தொகை | |
| 2. சார்டர்ட் அக்கௌண்டண்ட் | |
| 3. சட்ட பட்டதாரிகளுக்கு உதவித் தொகை அளித்தல் | அரிசன ஆதிவாசிகள் நல இயக்குநர், 'எழிலகம்', சேப்பாக்கம், சென்னை-600005. |

சலுகைகள் பெறுவதற்கான படிவங்களை அந்தந்த அரிசன நல அலுவலர்களிடமிருந்தோ அல்லது படிப்பகங்களிலிருந்தோ (Colleges and other institutions) பெற்றுக்கொள்ளலாம். அஞ்சல் மூலம் விண்ணப்பங்கள் பெற விரும்புவோர் 55 பைசா மதிப்புள்ள அஞ்சல் தலை ஒட்டிய தன் முகவரி எழுதப்பட்ட கூடுடன் விண்ணப்பித்தல் வேண்டும்.

**காந்தி நினைவுப் பரிசு (Award) :**

ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் இந்து மத தாழ்த்தப்பட்ட இனத்தவர் இருவருக்கு (ஒரு மாணவன் ! ஒரு மாணவி) 1976-ஆம் ஆண்டு மார்ச்—ஏப்ரல் திங்களில் முழு நேர பகல் கல்லூரிகளின் மூலம் நடைபெற்ற புகுமுகத் தேர்வில் முதல் முறையிலேயே எழுதித் தேர்ச்சி பெற்ற மாணவ மாணவிகளுக்குள் அதிக மதிப்பெண்கள் (விழுக்காடு) பெற்று, நடப்புக் கல்வி ஆண்டில் புகுமுக படிப்பைத் தொடர்ந்து மேல் கல்வி பயிலும் மாணவ மாணவிகளே இப்பரிசுத் தொகையைப் பெறத் தகுதி உடையவராவர்.

இத்தொகை பெற வருமான வரம்போ, வயது வரம்போ கிடையாது. வழங்கப்படும் தொகை முதல் ஆண்டு ரூ. 1,500 ஆகவும், பின்னர் ஆண்டொன்றிற்கு ரூ. 1,000 ஆகவும் இருக்கும். இத்துறையால் வழங்கப்பெறும் மற்ற உதவித் தொகையுடன் இந்தப் பரிசும் வழங்கப்படும். சென்ற ஆண்டுகளில் காந்தி நினைவுத் தொகை பெற்ற மாணவர்கள் இந் நடப்பு ஆண்டிலும் தொடர்ந்து கல்வி பயின்று கொண்டிருந்தால், தங்கள் கல்வி நிறுவனத்தின் மூலம், இவ்வாண்டிற்கும் உதவித் தொகை பெற உரிய விண்ணப்ப மனுவில் 15-8-'76-க்குள் புதுப்பித்தல் வேண்டும்.

கல்லூரியில் சேர்ந்த 15 நாட்களுக்குள் புதிய மனு அனுப்ப வேண்டும். புதிய மனு அனுப்ப வேண்டிய கடைசி நாள் 31-8-'76. இத்தேதிக்குப் பிறகு வரும் மனுக்கள் கவனிக்கப்பட மாட்டா.

**(5) தகுதி அடிப்படையில் பரிசு (Merit-Cum-Means Award) :**

புகுமுக வகுப்பு இறுதித் தேர்வில் பெறும் மதிப்பீட்டு எண்களின் அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் ஆதிவாசிகள் இனத்தைச் சேர்ந்த ஒரு மாணவரும், ஒரு மாணவியும், இதே போல் தாழ்த்தப்பட்ட இனத்திலிருந்து கிருத்துவ மதத்தைத் தழுவிய ஒரு மாணவரும், ஒரு மாணவியும் இப்பரிசுக்கு உரியவராக தேர்ந்தெடுக்கப்படுவர். வழங்கப்படும் தொகை, முதல் ஆண்டு ரூ. 1,500 ஆகவும், பின்னர் ஆண்டொன்றிற்கு ரூ. 1,000 ஆகவும் இருக்கும்.

காந்தி நினைவுப் பரிசுக்குள்ள விதி முறைகளே இப்பரிசுத் திட்டத்திற்கும் பொருந்தும்.

**(6) சார்டர்ட் அக்கௌண்டண்ட் (Chartered-Accountant) :**

ஒவ்வொரு வருடமும் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஐந்து தாழ்த்தப்பட்ட—மலைவாசி இனத்தைச் சேர்ந்த சார்டர்ட் அக்கௌண்டண்ட் படிப்பு (மூன்று வருடம்) படிக்கும் மாணவர்களுக்கு இத்துறையினரால் மாநில உதவித் தொகை விதிமுறைகளின்படி உதவித் தொகை வழங்கப்படும். வருட வருமான உச்ச வரம்பு ரூ. 3,000.

**(7) சட்ட பட்டதாரிகளுக்குப் பண உதவி அளித்தல் :**

தமிழ்நாட்டில் தாழ்த்தப்பட்ட—ஆதிவாசி இனத்தைச் சேர்ந்த சட்டம் பயின்று வழக்குரைஞர் தொழிலை மேற்கொள்ளும் மாணவர்கள் ஐவருக்கு ரூ. 500 மான்யமாகவும், வட்டியில்லாக் கடனுக ரூ. 750-ம் வழங்கப்படும்.

1-6-'75-க்குப் பிறகு வழக்கறிஞர் மன்றத்தில் சேர்ந்துள்ளவர்கள்தான் இவ்வுதவி பெறத் தகுதியுள்ளவர்களாவர்.

வருட வருமானம் சென்ற மார்ச், 76 முடிய ரூ. 3,000-க்குள் இருத்தல் வேண்டும்.

ஏ. பி. முத்துசாமி, ஐ.ஏ.எஸ்.,
அரிசன ஆதிவாசிகள் நல இயக்குநர்.

advt.



# "கற்றுக் கொடுப்பதன் மூலம் கற்றுக் கொள்"

ஒரு நாட்டின் போர்த்திறன், அந்நாட்டின் தொழில் மற்றும் பொருளாதார அமைப்பு, முப்படைகளின் வலு, தளவாடங்களின் தன்மை போன்ற பலவற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஆனால் பெருமளவுக்கு முப்படைகளுக்கு அளிக்கப்படும் பயிற்சி அடிப்படையில்தான் ஒரு நாட்டின் போர்த்திறன் அமைந்திருக்கும்.

**இருவகைப் பயிற்சி :**

தாம்பரத்திலுள்ள விமானப் படைப் பயிற்சி நிலையத்தில் இரு வகையான பயிற்சி அளிக்கப்படுகிறது. இந்நிலையத்தில் தொழில் நுட்பப் பயிற்சியாளர்களுக்குப் படை விமானங்கள் பொறியியல் சம்பந்தமாகத் தொழிற் நுட்பப் பயிற்சியும், விமானிகளுக்கு விமானம் ஓட்டும் பயிற்சியும் அளிக்கப்படுகின்றன. இத்தகைய பயிற்சி பெறும் விமானப் பயிற்சியாளர்கள், விமானப்படையில் புதிதாகச் சேருவோர்க்கு விமானம் ஓட்டுவதில் பயிற்சி அளிக்கிறார்கள்.

**தளப் பயிற்சிப் பள்ளி :**

இந்நிலையத்திலுள்ள தளப் பயிற்சி பள்ளி, புதிதாக விமானப் படையில் தளப் பிரிவில் சேருவோர்க்கு விமானப் பொறியியல் சம்பந்தமாகப் பயிற்சி வகுப்பு நடத்துகிறது.

இந்தப் பயிற்சி வகுப்பு மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. புதிதாகத் தளப் பிரிவில் சேருவோர் எந்தச் சூழ்நிலையையும் சமாளித்து தன்னம்பிக்கை அடையும் வகையில் இந்தப் பயிற்சி வகுப்பு நடத்தப்படுகிறது.

வேலைநோக்கில் இந்தப் பயிற்சி வகுப்பு அமைந்துள்ளது. தொழில் பட்டறைகளில் பயிற்சி அளிக்கும் விஷயத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. புதிதாகச் சேருவோர்க்கான பயிற்சி வகுப்பு தற்போது ஒரு ஆண்டுக் காலத்திற்கு நடைபெறுகிறது. விமான தளங்களில் 4 அல்லது 5 ஆண்டுகள் பணிபுரிந்தபின், தள சிப்பந்திகள், அவரவர் தொழிலில் உயர் பயிற்சி பெறுவதற்காக மீண்டும் இப்பள்ளிக்கு அனுப்பப் படுகின்றனர்.

**விமானம் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி :**

விமானம் ஓட்டுவதில் பயிற்சி அளிக்கும் பள்ளி, ஆசியாவில் ஏற்படுத்தப்பட்ட மிகப் பழைமையான பள்ளியாகும். மிகப் பிரபலமான இப்பள்ளியில் புதிதாக விமானம் ஓட்டக் கற்றுக் கொள்பவர்களுக்கு, நவீன முறைகளில் எப்படிப் பயிற்சி அளிப்பது என்பது பற்றி விமான ஓட்டும் பயிற்சியாளர்களுக்குச் சொல்லிக் கொடுக்கப்படுகிறது.

நகரத்திலிருந்து 35 கி.மீ. தூரத்தில் நல்ல சூழ்நிலையில் அமைந்துள்ள இப்பள்ளியின் குறிக்கோள்: ''கற்றுக் கொடுப்பதன் மூலம் கற்றுக்கொள்'' என்பதுதான்.

கடமையைச் சிறந்த முறையில் ஆற்றி, மிக வலுவாய்ந்த விமானப்படையை உருவாக்க வேண்டும் என்ற குறிக்கோளை அடையும் நோக்கம் கொண்ட, ஒரு சில ஊழியர்களைக் கொண்டதாக இப்பள்ளி விளங்குகிறது.

# இரயில்பெட்டித் தொழிற்சாலையின் மகத்தான சாதனை

## —மாடி இரயில் பெட்டி!



### மத்திய அரசுத் தொழில் திட்டம் - 3

**சென்னை** பெரம்பூரில் உள்ள 'இரயில் பெட்டித் தொழிற்சாலை' (Integral Coach Factory) புதிய வரலாற்றுச் சாதனையொன்றைப் புரிவதில் முனைந்து ஈடுபட்டு வெற்றிக்கனியைக் கொய்துள்ளது.

ஆசியாக் கண்டத்திலேயே வேறு எந்த நாட்டிலும் இதுகாறும் இப்படியொரு முயற்சி மேற்கொள்ளப்பட்டதில்லை என்று இந்தியர்களாகிய நாம் பெருமிதம் கொள்ளத்தக்க வகையில் இரட்டை அடுக்குகள் கொண்ட மாடிஇரயில்பெட்டியை (Double Decker Coach) இந்தத் தொழிற்சாலை உருவாக்கியுள்ளது.

அத்தகைய முதல் பெட்டியின் வெள்ளோட்டம் கடந்த 8-6-76 அன்று நடைபெற்றது. தொழிற்சாலையிலிருந்து ஏறத்தாழ இரண்டு கிலோ மீட்டர் தூரம் வரை ஓடித் திரும்பிய அதில், முதன்முதல் இன்பப் பயணம் புரியும் இனிய வாய்ப்பினைப் பெற்றவர்கள் தமிழ்நாட்டைச் சார்ந்த பத்திரிகையாளர்களே!

'இரயில் பெட்டித் தொழிற்சாலை'யின் பொது நிருவாக மேலாளர் திரு ஜே. மாத்தன் அவர்களும் இந்த வெள்ளோட்டப் பயணத்தில் பங்கு கொண்டு புதிய மாடி இரயில்பெட்டியின் சிறப்புக்களையெல்லாம் விளக்கிக் கொண்டே வந்தார்.

பிரயாணிகளின் நெரிசலைத் தவிர்ப்பதற்கு இந்த இரட்டை அடுக்கு இரயில் பெட்டி, பெருந்துணை புரியும் என்பதில் சந்தேகமே இல்லை.

### மாடி இரயிலின் தனிச் சிறப்புகள்

தற்போதுள்ள இரண்டாம் வகுப்பு (ஒற்றை அடுக்கு) இரயில் பெட்டியில் 90 பேர்தான் பயணம் செய்யலாம்; ஆனால் புதிய இரட்டை அடுக்கு மாடிப் பெட்டியில் 148 பேர் வரை பயணம் புரியலாம்.

இவ்வளவுக்கும் இரண்டு பெட்டிகளின் அமைப்பு அளவுகளில் அதிகமான வேறுபாடுகள் இல்லை.

தற்போதைய சாதாரணப் பெட்டியின் நீளம் 21,337 மில்லி மீட்டர்; அகலம் 3,245 மி.மீ., உயரம் 4025 மி.மீ; புதிய பெட்டியின் நீளம்: 21,337 மி.மீ. அகலம் 3,050 மி.மீ; உயரம், 4,265 மி.மீ.

உயரம் சற்று அதிகமான தாகத் தோன்றினாலும் நம் நாட்டில்' அகல இருப்புப்பாதைகளில் எதிர்ப்படுகின்ற மலைக்குகைகள் பாலங்கள் ஆகியவற்றை இடிக்காமல் கடக்கின்ற வகையிலேயே இது அமைக்கப்பட்டுள்ளது.

இதன் கீழ்த்தளத்தில் 55 பேரும், மேல்தளத்தில் 61 பேரும், பெட்டியின் இரு கோடிப் பகுதிகளிலும் 32 பேரும் ஆக 148 பேர் இதில் பயணம் புரியலாம். கோடிப் பகுதிகளில் தான், மேல்தளத்திற்கும் கீழ்த்தளத்திற்கும் செல்வதற்குப் படிக்கட்டுகள் அமைக்கப்பட்டுள்ளன.

தற்போதைய சாதாரணப் பெட்டிக்கு ரூ. 4.5 இலட்சம் செலவாகிறது; அதைவிட 58 பேர் வரை அதிகமாகப் பயணிகளை ஏற்றிச் செல்லக்கூடிய புதிய மாடி இரயில் பெட்டிக்கு ரூ. 8 இலட்சம் செலவாகிறது.

ஆரம்பக் கட்டச் சோதனைகளையெல்லாம் கடந்துவிட்ட இப்பெட்டி, 1976 ஜூலை மாதத்தில் இரயில்வே வாரியத்திடம் (Railway Board) ஒப்படைக்கப் படும். அவர்கள், இப்பெட்டியை முதலில் டெல்லிக்கும் ஆக்ராவுக்கும் இடையே செல்லும் 'தாஜ்' எக்ஸ்பிரசில்' இணைத்து ஓட்டுவதற்கு ஏற்பாடு செய்வார்கள்.

நெடுந்தூரப் பயணத்தைக் காட்டிலும் 5 அல்லது 6 மணி நேரத்திற்குள் சேரக்கூடிய குறுகிய தூரப் பயணத்திற்கே இது ஏற்றதாகும். ஏனெனில் ஏராளமான சாமான்களை எடுத்துச் செல்வதற்கோ தூங்கிக் கொண்டு செல்வதற்கோ இப்போதைக்கு இதில் வசதிகள் இல்லை.

44 டன்கள் எடையுள்ள இப்பெட்டி மணிக்கு 120 கிலோ மீட்

டர் தூரம் ஓடக்கூடியதாகும். சாதாரணமாகத் தற்போது 12 ஒற்றையடுக்குப் பெட்டிகள் கொண்ட இரயில் வண்டியில் 1,080 பேர்தான் பயணம் செய்ய முடியும். ஆனால் புதிய மாடிப் பெட்டிகள் பதினொன்று பூட்டப் பட்ட வண்டியில் 1.628 பேர் வரை பயணம் புரிய முடியுமாம்.

பரிசோதனை முறையில்தான் இந்த முதல் மாடி இரயில்பெட்டி இப்போது உருவாக்கப்பட்டுள்ளது. இதற்குக் கிடைக்கும் வரவேற்பைப் பொறுத்து இரயில்வே வாரியம் ஒப்புதல் தருமானால், மேலும்பல பெட்டிகள் தயாரிக்கப்படலாம் என்றும் 90 பயணிகளேனும் தூங்கும் வசதியுடன் செல்லக்கூடிய மாடி இரயில் பெட்டிகளை இங்குள்ள தொழிற்சாலையில் உருவாக்க முடியும் என்றும் செய்தியாளர்களின் கேள்விக்கு விடையாகக் கூறினார் ஜெனரல் மானேஜர்.

**கடந்த காலச் சாதனைகள்**

புதிய வரலாற்றுச் சாதனையொன்றைப் புரிய முற்பட்டிருக்கும் பெரம்பூர் இரயில்பெட்டித் தொழிற்சாலை கடந்த காலத்திலும் பல வியக்கத்தக்க சாதனைகளை விளைவித்திருக்கிறது.

இந்திய அரசின் இரயில்வே துறைக்கு உட்பட்ட ஓர் உற்பத்திப் பிரிவாக விளங்கும் இத்தொழிற்சாலை, 1955-இல் முதன் முதல் அமைக்கப் பெற்றதாகும்.

சுவிட்சர்லாந்து நாட்டைச் சார்ந்த சூரிச் (Zurich) நகரில் உள்ள 'சுவிஸ் கார் அண்ட் எலிவேட்டர் மேன்யூஃபேக்சரிங் கார்ப்பரேஷன்' (The Swiss Car and Elevator Manufacturing Corporation) என்னும் நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் இது முதன் முதலில் இயங்கத் தொடங்கியது. 1961-இல் அந்த ஒத்துழைப்பு ஒப்பந்தம் முடிவடைந்த பிறகு, தானாகவே தனித்த முறையில் உற்பத்தியில் இறங்கியது இத்தொழிற்சாலை.

இது இரண்டு பிரிவுகளாக இயங்கி வருவதாகும். ஒரு பிரிவில் இரயில் பெட்டியின் கூரைப் பகுதியுள்ளிட்ட 'கூண்டுகள்' (Shells) தயாராகின்றன; இன்னொரு பிரிவில் உட்கார்ந்து செல்வதற்கேற்ற வசதிகள் அனைத்தும் அமைந்த 'செப்பம் செய்யப்பட்ட பெட்டிகள்' (Furnished Coaches) உருவாகின்றன.

1955-இல் 'ஷெல் டிவிஷன்' (Sheli Division) ரூ. 7.35 கோடிச் செலவில் முதலில் அமைக்கப்பட்டது. அதற்கு ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு 1962-இல் ரூ. 3.69 கோடிச் செலவில் உருவாக்கப்பட்டதே 'பர்னிஷிங் டிவிஷன்' (Furnishing Division). 'ஷெல் டிவிஷ'னில் பதினொன்று பட்டறைக் கொட்டகைகளும் (Sheds), 'பர்னிஷிங் டிவிஷனில்' ஏழு பெரிய பட்டறைக் கொட்டகைகளும் உள்ளன.

இத்தொழிற்சாலையின் மொத்த உற்பத்தித் திறன் ஆண்டுக்கு 750 பெட்டிகள் ஆகும். தற்போதைய நிதி ஒதுக்கீட்டுக்கு ஏற்ப ஆண்டு ஒன்றுக்குத் தயாராகிற கூண்டுகள் (Shells) 535; செப்பம் செய்யப்படுகின்ற பெட்டிகள் 518.

1955 அக்டோபர் மாதம் முதல் 31-5-1976 முடிய கடந்த இருபதரை ஆண்டுகளுக்குள் 11,339 கூண்டுகளையும், 9312 செப்பம் செய்யப்பட்ட பெட்டிகளையும் இத்தொழிற்சாலை தயாரித்துள்ளது.

தொடக்கத்தில் அகல இருப்புப் பாதைகளுக்கு (பிராட்கேஜ்) மட்டுமே இரயில் பெட்டிக்கூண்டுகளைத் தயாரித்து வந்த இத்தொழிற்சாலை, நாளாவட்டத்தில் 62 வகையான புதுப்புதுப்பெட்டிகளை உருவாக்குகின்ற நிலைக்கு உயர்ந்துள்ளது.

'பிராட்கேஜ்' 'மீட்டர் கேஜ்' பாதைகளுக்கு உரிய சாதாரணப் பெட்டிகளை மட்டுமன்றி, நவீன வசதிகள், குளிர்சாதன ஏற்பாடுகள் கொண்ட மின்சார-'டீசல்'-இரயில் பெட்டிகளையும் இத்தொழிற்சாலை உருவாக்குகின்றது. புதுடில்லிக்குப் கல்கத்தாவுக்கும், பம்பாய்க்கும்-புதுடில்லிக்கும் மிக மிக விரைவாகப் பாய்ந்தோடும் 'ராஜதானி எக்ஸ்பிரஸ்' - இரயில் பெட்டிகளும் இங்கே தயாரிக்கப்பட்டவையே!



இரட்டை மாடி இரயில் பெட்டியில் மேல்மாடிக்குச் செல்லும் வழி.

**ஏற்றுமதியில் ஏற்ற நிலை**

உள்நாட்டுத் தேவைகளை நிறைவு செய்வதோடு வெளிநாடுகளிலும் வெற்றிக் கொடியை நாட்ட முற்பட்டுள்ளது இத்தொழிற்சாலை.

முதன் முதல் 1968-ல் பர்மா நாட்டுக்குப் பதினறரை இலட்



இரட்டை மாடி இரயில் பெட்டியின் கீழ்ப் பகுதி.

சம் ரூபாய் மதிப்புள்ள 66 போகிகள் (Bogies) இங்கிருந்து ஏற்றுமதி ஆயின.

அதனைத் தொடர்ந்து, தாய் லாந்து, தைவான், பிலிப்பைன்ஸ் சாம்பியா ஆகிய ஆசிய-ஆப்பிரிக்க நாடுகளுக்கு இதுவரை மொத்தம் 309 போகிகளையும் 266 'கோச்' பெட்டிகளையும் இத்தொழிற் சாலை ஏற்றுமதி செய்துள்ளது. அவற்றின் மதிப்பு ரூபாய் பத்துக் கோடிக்கு மேல் இருக்கும்.

தற்போது கிழக்கு ஆப்ரிக்க இரயில்வே கார்பொரேஷனில் உள்ள டான்சானியா பிராந்தி யத்திற்கு 17 மீட்டர்கேஜ் இரயில் பெட்டிகள் ஏற்றுமதி செய்வதற்குக் கோரிக்கை வந் துள்ளது. அந்தப் பெட்டிகள் அனைத்தும் வருகிற ஜூலை மாத இறுதிக்குள் அனுப்பி வைக்கப் பட்டு விடும்.

கென்யா, நைஜீரியா ஆகிய நாடுகளின் இரயில்வேக்களுக்கு இங்கிருந்து பெட்டிகளை வழங்கு வதற்குரிய 'விலைப்புள்ளிகள்' (Tenders) அனுப்பி வைக்கப் பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட நாடுகள் அவற்றுக்குச் சம்மதம் தெரிவித்தால் நைஜீரியாவுக்கு 160 இரயில் பெட்டிகளும், கென்யாவுக்கு 32 இரயில்பெட்டி களும் ஏற்றுமதி ஆகலாம். வங்காள தேச (Bangla Desh) நாட்டுக்கு 50 பெட்டிகள் அனுப்பு வதற்குரிய விலைப்புள்ளிகளும் தயாரிக்கப்பட்டு வருகின்றன. இந்தோனேசியா, மலேசியா, தாய்லாந்து, ஸ்ரீலங்கா ஆகிய நாடுகளிலிருந்தும் கோரிக்கைகள் வரலாம் என்று எதிர்பார்க்கப் படுகிறது.

**வருங்காலத்தில் வளரும் சாதனை**

எதிர்காலத்தில் மேலும் பல புதிய சாதனைகளை-புதிய வகைப் பெட்டிகளைத் தயாரிக்கின்ற திட் டங்களையும் இந்த இரயில் பெட்டித் தொழிற்சாலை மேற் கொள்ளவிருக்கிறது.

எந்த வகையான வண்டி யிலும் பூட்டத்தக்க தாகவும், விளக்குகள், குளிர்சாதனம் முத லானவற்றுக்குத் தேவையான மின்சக்தியைத் தானே உற்பத்தி செய்து கொள்ளத்தக்கதாகவும் தூங்குவதற்கேற்ற இரண்டு அடுக்குகள் கொண்ட குளிர் சாதன இரயில் பெட்டிகளைப் புதிய முறையில் விரைவில் தயா ரிப்பதையும் இத்தொழிற்சாலை மேற்கொள்ளவிருக்கிறது.

சென்ற ஆண்டு இங்கே உரு வாக்கப் பெற்ற 48 படுக்கைகள் கொண்ட இரண்டு அடுக்குத் தூங்கும் குளிர்சாதனப் பெட்டிக் குப் பிரயாணிகளிடையே மிகுந்த செல்வாக்கு இருப்பது நிரூபிக்கப் பட்டுள்ளது. ஆனால், குளிர் சாதனம், வெளிச்சம் ஆகியவற் றுக்குத் தேவையான மின்சக்திக்கு அந்தப் பெட்டிகளிலேயே ஏற் பாடு இல்லாததால், மின்சக்தி ஏற்பாடுள்ள 'டீ. லக்ஸ்' வண்டி களிலேயே அவை பூட்டப் பட வேண்டிய கட்டாய நிலை இருந் தது.

இப்போது புதிதாகத் தயாரிக் கப்படவிருக்கும் பெட்டிகளில் அந்தக் குறையும் இருக்காது. தானே மின்சக்தியைத் தயாரித் துக்கொள்ளும் வகையில் தகுந்த கருவிகள் அவற்றில் பொருத்தப் படும். இதனால் முன்னர்க் கூறிய வாறு எந்த வகையான வண்டி களிலும் புதிய பெட்டிகளை இணைக்கலாம். அதே போன்று, இன்னொரு புதியவகைக் குளிர் பதன 'காம்போசிட்' இரயில் பெட்டியும் இப்போது உருவாகிய வண்ணம் இருக்கிறது. அதில் முதல் வகுப்புப் படுக்கைகள் பத்தும், இரண்டாம் வகுப்பு நாற் காலி இருக்கைகள் முப்பத்து

இரட்டை மாடி இரயில் பெட்டியின் மேல் மாடி.



நான்கும் இருக்கும். இத்தகைய 'காம்போசிட்' இரயில் பெட்டிகள் சிலவற்றில் நாற்காலி இருக்கைகளுக்குப் பதிலாக இரண்டு அடுக்குப் படுக்கை வசதிகள் செய்யப்பட்டவையும் இருக்கின்றன. நடப்பு ஆண்டின் முடிவிற்குள்ளாக இம்மாதிரியான 'காம்போசிட்' இரயில் பெட்டிகள் பயணத்திற்கு விடப்படும் என்று கூறப்படுகிறது.

'காஸ்' (Gas) மூலமே உணவுகளைத் தயாரித்துக் கொள்ளக்கூடிய சமையல் வசதி கொண்ட 'பாண்ட்ரி கார்கள்' (Pantry Cars) பெட்டிகளும் இங்கே இப்போது உருவாக்கப்படுகின்றன. நிலக்கரிக்குப் பதிலாக 'காஸ்' மூலம் சமையல் செய்வதால் இந்தப் பெட்டிகள் துப்புரவாகவும் தூய்மையாகவும் விளங்க வழியுண்டாகும். பிரயாணிகளுக்கு இன்னும் சிறப்பான முறையில் சேவை செய்யவும் முடியும். இவ்வாறு 'காஸ்' அடுப்புச் சமையல் அறைகொண்ட இரயில் பெட்டிகள் நடப்பு ஆண்டு முடிவதற்குள் புழக்கத்திற்கு வந்து விடுமாம்.

நகர்ப்புறங்களில் பிரயாணிகளின் நெரிசலைத் தவிர்ப்பதில் தற்போது மின்சார இரயில் வண்டிகள் (Electric Trains) ஆற்றிவரும் பணி அளவிடற்கரியதாகும். ஆனால் அவற்றைவிட அதிகமான எண்ணிக்கையில் பயணிகளை ஏற்றிச் செல்லக்கூடிய 'டீசலில்' ஓடவல்ல வண்டிகளும் இப்போது இத்தொழிற்சாலையில் உருவாகி வருகின்றன. இந்தப் புதியவகைப் பெட்டியில் 70 இருக்கைகளுக்கு மட்டுமின்றி, 120 பேர் நின்று கொண்டு செல்லவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இத்தகைய பெட்டி ஒவ்வொன்றின் அடக்க விலை ரூபாய் நாலரை இலட்சம் ஆகும். முதலில் டில்லி நகரைச் சுற்றிலும் உள்ள 'பரிக்கிராம இரயில்வே வளையப் பணிக்கு' (Parikrama Ring Railway Service) பயன்படுத்துவதற்காக இப்புதிய வகைப் பெட்டிகள் 29 இப்போது தயாரிப்பில் உள்ளன. இன்னும் சில மாதங்களில் இவை பயணத்திற்கு விடப்படும்.

இரயில் பெட்டிகளை உற்பத்தி செய்வதுடன் நில்லாமல் 'டிராம் கார்' தயாரிப்பிலும் இத்தொழிற்சாலை ஈடுபடவிருப்பதாக இதன் ஜெனரல் மானேஜர் தெரிவிக்கிறார்.

ஒவ்வொன்றும் ரூபாய் ஏழு இலட்சம் விலையில் இரட்டை டிராம் கார் 100 உற்பத்திசெய்து வழங்க முடியும் என்று கல்கத்தா-டிராம்வேஸ் கம்பெனிக்குக் கடிதம் எழுதியிருப்பதாக அவர் அறிவிக்கிறார்.

**பெருமிதம் தரும் வளர்ச்சி**

பார் புகழும் பண்டித ஜவகர்லால் நேரு அவர்களால், 'தேசத் தந்தை' மகாத்மா காந்தியடிகளின் பிறந்த நாளான 1955 அக்டோபர் இரண்டாம் நாள் தொடங்கி வைக்கப் பெற்ற இந்தப் பெரம்பூர் இரயில் பெட்டித் தொழிற்சாலை நாளுக்கு நாள் புதிய புதிய சாதனைகளைப் புரிந்த வண்ணம் ஓங்கி உயர்ந்து கொண்டே செல்கிறது.

இதில் உருவாகின்ற வகைவகையான இரயில் பெட்டிகள் பயணிகளுக்கு வசதிகள் பலவற்றை வாரி வாரி வழங்கி, உள்நாட்டில் செல்வாக்குப் பெறுவதோடு நில்லாமல், வெளிநாட்டிலும் வெற்றிக் கொடியை நாட்டி வருகின்றன.

மத்திய அரசு நிறுவனங்களில் ஒன்றான இந்த இரயில் பெட்டித் தொழிற்சாலையின் வளர்ச்சி இந்தியர்கள் பெருமிதம் அடையக் கூடிய ஒன்றே என்பதில் சந்தேகமே இல்லை.

**—அ. வேதாசலம்**

# விடைகள்:

1. (அ) ஜெனரல் கரியப்பா
   (ஆ) திரு. சி. ராஜகோபாலாச்சாரியார் அவர்கள்
   (இ) திருமதி சரோஜினி நாயுடு அவர்கள்
   (ஈ) 1825-ல் (கராச்சியிலிருந்து சிந்து மாநிலத்திற்கு மட்டும் வெளியிடப்பெற்றது)
2. ஐ.நா. வர்த்தகவளர்ச்சி மாநாடு
3. (அ) பஞ்சாப்
   (ஆ) காஷ்மீர்
   (இ) மேற்கு வங்காளம்
   (ஈ) பம்பாய்
4. 1857-ஆம் ஆண்டு
5. 288. இது 1688-ல் துவக்கப்பட்டது.
6. 'பேபரைஸ்' (Papyrus) என்னும் கோரைப்புல்லை எகிப்தியர் முதன் முதலில் எழுதப் பயன்படுத்தினர். அதனால் 'பேபரைஸ்' என்னும் பெயரே 'பேப்பர்' என வழங்கலாயிற்று.
7. இந்திய மக்கள் தொகை இன்று (1976, மே கணக்குப்படி) 60 கோடியே 50 இலட்சம்
8. மாயூரம் முனிசீப் வேதநாயகம் பிள்ளை அவர்களால்
9. இந்திய தேசியப்பாடல் முதலில் 1911-ஆம் ஆண்டு, கல்கத்தாவில் நடந்த காங்கிரஸ் கூட்டத்தில் பாடப்பட்டது.
10. (அ) அசோசியேடெட் பிரஸ் அண்டு யுனைடெட் பிரஸ் இன்டர்நேஷனல் (Associated Press and United Press International)
    (ஆ) 'டாஸ்' (Tass)

தொகுப்பு: பி. வி. கிரி.



# கோ-ஆப்டெக்ஸ் மக்கள் விரும்பும் வகைகள்! நியாயமான விலைகள்!



கோ-ஆப்டெக்ஸ் சேலைகள்,

## அழகு மிளிரும் ஆரணங்குகள்!

ஆரணி, கும்பகோணம், காஞ்சிபுரம் அசல் பட்டுச் சேலைகள், உறையூர், கோயமுத்தூர், சேலம், மதுரை பருத்தி கைத்தறிச் சேலைகள், அச்சிட்ட சுங்கடி சேலைகள் மற்றும் சின்னாளப்பட்டி சேலைகள்.



கோ-ஆப்டெக்ஸ்

## படுக்கை விரிப்புகள், மலர்ப் படுக்கைகள்!

நேர்த்தியான நெசவு கைத்தறிப் படுக்கை விரிப்புகள் மற்றும் தலையணை உறைகள். உங்களுக்கு சொகுசு அளிப்பவை!



கோ-ஆப்டெக்ஸ்

## லுங்கிகள், வசதியானவை நீடித்துழைப்பவை!

உங்கள் விருப்பத்துக்குகந்த சாதா, கோடிட்ட அல்லது கட்டமிட்ட பல வகைகளில்.

கோ-ஆப்டெக்ஸ்

## துவாலைகள், தூய்மையான துவாலைகள்!

சாதா, டர்கிஷ் வகைகள், மென்மையான மற்றும் ஈரத்தை உறிஞ்சும் வகைகள். உங்களது சுகாதாரத்துக்கு இன்றியமையாதவை!



மற்றும் கைத்தறிப் பருத்தி வகைகள், வேட்டிகள், உடுப்புகளுக்கான துணிகள், அலங்காரத் துணிவகைகள்—குடும்பத்தினர் அனைவருக்குமே உகந்த முழுதும் புதிய வகைகள்.

கோ-ஆப்டெக்ஸ்

கைத்தறியே வண்ணத்துப்பூச்சி

பதிவு எண். M. 86



# வாழ்வு மலர
# வளம் பெருக
# 20 அம்சத்திட்டம்

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தமிழ்நாடு அரசு செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600002.

# புதிய முயற்சிகள்-
# புகழ்மிக்க சாதனைகள்



தமிழ்நாடு ஆளுநர்

**திரு. மோகன்லால் சுகாதியா**

# புதிய முயற்சிகள் — புகழ் மிக்க சாதனைகள்!

தமிழ்நாடு ஆளுநர்

**திரு. மோகன்லால் சுகாதியா**

வெளியீடு :

இயக்குநர்,

செய்தி-மக்கள் தொடர்புத்துறை,

தமிழ்நாடு அரசு

# பதிப்புரை

தமிழ்நாடு ஆளுநர் திரு. மோகன் லால் சுகாதியா அவர்கள் 1976 ஜூலைத் திங்கள் முதல்நாள் இருபது அம்சத் திட்ட சாதனை ஆண்டு விழாவை முன்னிட்டு வானொலியில் ஆற்றிய உரையை '**புதிய முயற்சிகள் புகழ்மிக்க சாதனைகள்**' என்னும் பெயரில் வெளியிடுகின்றோம். இந் நூல் 'தமிழரசு' 1.7.1976 இதழுடன் இலவச இணைப்பாக வழங்கப் பெறு கிறது.

**இயக்குநர்**

**செய்தி-மக்கள் தொடர்புத்துறை**

**தமிழ்நாடு அரசு**

சென்னை-600 009 1—7—1976

இந்த நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்காக இன்றைக்கு ஓராண்டுக்கு முன்னர் நமது பாரதப் பிரதமர் அவர்கள் புதிய திட்டமொன்றை அறிவித்தார்கள். இத்திட்டம் இருபது அம்சப் பொருளாதாரத் திட்டம் என்று நாடு முழுவதும் நன்கறிந்ததாகும். உண்மையான பொருளாதார விடுதலைக்கு வித்திட்ட திட்டம், வறுமையினையும் சுரண்டலையும் ஒழிக்கும் திட்டம், உற்பத்தி உயர்வதற்கு உறுதுணையான உன்னதத் திட்டம், பணவீக்கத்தைத் திறமையுடன் தடுத்து நிறுத்தும் பாங்கான திட்டம் என்றெல்லாம் இத்திட்டத்தை மக்கள் ஏற்றிப் போற்றுகிறார்கள். இத்திட்டத்திலுள்ள இருபது அம்சங்களுமே புதியவை அல்ல. என்றாலும், இந்த இருபது அம்சங்களையும் அதிக ஆர்வத்துடனும் உறுதியுடனும் நாம் நிறைவேற்ற வேண்டும் என நமது பாரதப் பிரதமர் அவர்களே வலியுறுத்தியுள்ளார்கள்.

தமிழ் நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி நடைபெற்று வரும் கடந்த ஐந்து மாதங்களாக, இந்த இருபது அம்சத் திட்டத்தை நிறைவேற்றுவதில் அரசு சீரிய கவனம் செலுத்தி வருகிறது. இருபது அம்சத் திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு வேண்டிய நிதி வசதியைப் பெறும் வகையில், வரவு — செலவுத் திட்டத்தை மாற்றியமைப்பதே முதற் பணியாக இருந்தது. இதன் பொருட்டு, சில சில துறைகளில் செலவைச் சிக்கனப்படுத்த வேண்டியிருந்தது ; நிதி வசதிகளைத் திரட்ட வேண்டி வந்தது ; வரி விதிப்பைத் தாங்க முடிந்தவர்களின் மேல் சற்றுக் கூடுதலான சுமையையும் ஏற்ற வேண்டியிருந்தது. 1976—77-ஆம் ஆண்டுத் திட்டத்தில் 177

கோடி ரூபாய்க்குத்தான் முதலில் வகை செய்யப்பட்டிருந்தது. இப்பொழுது இத்தொகை 202 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. எந்தெந்தத் திட்டங்களை முதலில் எடுத்துக் கொண்டால், பொருளாதார வளர்ச்சியில் புது வேகம் ஏற்படுமோ அந்தந்த அவசியத் திட்டங்களுக்கு முதன்மை கொடுக்கும் வகையில் திட்டங்கள் சீரமைக்கப்பட்டுள்ளன.

## உறுதியான கட்டுப்பாடு உருவாகியது!

எல்லோருடைய விருப்பத்துக்கும் இணங்க, முதலாவதாக, அரசாங்க நிருவாக இயந்திரத்தை முடுக்கி முன்னேற்றும் பணி மேற்கொள்ளப்பட்டது. அலுவலர்கள் குறித்த நேரத்துக்கு அலுவலகத்துக்கு வர வேண்டும், தத்தம் பணிகளை விரைந்து முடிக்க வேண்டும், சமுதாயத்திலுள்ள ஏழை எளியவர்களுக்கு வேண்டிய நலன்களை விரைந்து செய்ய வேண்டும் என்றெல்லாம் வலியுறுத்தப் பட்டது. அரசு அலுவலர்களிடையே கடமையுணர்வு மேலோங்கியது. உறுதியான கட்டுப்பாடு உருவாக்கப் பெற்றது. நாட்டின் பல பகுதிகளிலும் விலைவாசியைக்குறைப்பதற்கான நடவடிக்கைகள் முனைப்பாக்கப்பட்டன. மக்கள் விரும்பி வரவேற்கும் வகையில் ''ஒரு ரூபாய் ஜனதா சாப்பாடு'' வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. உணவு தானியப் போக்குவரத்தின் மீது விதிக்கப்பட்டிருந்த தடைகள் மேலும் இறுக்கமாக்கப்பட்டதாலும், விலைவாசி ஏறாமல் கண்காணித்ததாலும், அரிசி முதலிய உணவு தானியங்கள், ஏனைய இன்றியமையாத பண்டங்கள் ஆகியவைகளின் மொத்த விற்பனை விலையும் சில்லறை விற்பனை விலையும் 30 சதவீதம் முதல் 40 சதவீதம் வரை இறங்கிவிட்டன.

கடந்த வேளாண்மை ஆண்டிலே நமது நெல் உற்பத்தி வெகுவாக உயர்ந்தது என்றாலும், கொள்முதல் அளவு மிகுந்திருந்தது

என்றாலும், மழை ஆங்காங்கே பொய்த்த தால், இம்மாநிலத்தில் கணிசமான பகுதிகள் பாதிக்கப்பட்டன.

## வறட்சி நிவாரணப் பணிகள் தொடர்கின்றன

வறட்சி நிவாரணப் பணிகள் பெரிய அளவில் நிறைவேற்றப்பட்டுள்ளன. இவற்றுக்கு மத்திய அரசிடமிருந்து கணிசமான அளவில் நிதி உதவி கிடைத்துள்ளது. வறட்சிப் பகுதிகளில் உள்ள கிராம மக்களுக்குக் குடிநீர் வழங்கும் பொருட்டு, கையால் அடிக்கும் பம்புகளுடன் பொருத்தப்பட்ட குழாய்க் கிணறுகள் ஆங்காங்கே அமைக்கப்பட்டிருப்பது இத் திட்டத்தின் முக்கியமான அம்சமாகும். சில இடங்களில் விசைப் பம்புகளும் நிறுவப்பட்டுள்ளன. இத்தகைய 2,400 கிணறுகள் ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான கால அளவைக்குள் அமைக்கப்பட்டுள்ளன. மேற்கொண்டும் 3,900 கிணறுகள் அமைக்கும் பணி இப்பொழுது தொடங்கியுள்ளது. இப் பணியும் நிறைவேறிய பிறகு குழாய்க் கிணறுகளின் மொத்த எண்ணிக்கை 6,300 ஆகப் பெருகும். குடிநீர்ப் பற்றுக்குறை உள்ள பகுதிகளில், குடிநீர் வழங்குவதற்காக நகராட்சிகளுக்கு உதவி அளிக்கப்பட்டுள்ளது. தென் மேற்குப் பருவ மழை, உரிய காலத்தில் பெய்யத் தொடங்காததால், திருநெல்வேலி மாவட்டத்தின் சில நகராட்சிகளில் ஏற்பட்டுள்ள குடிநீர்த் தட்டுப்பாட்டினைத் திறம்படச் சமாளிப்



பதற்காக, குடிநீர் வழங்கு திட்டங்களுக்கு ஒப்பு தல் கொடுக்கப் பெற்று, அவைகள் 14.25 இலட்சம் ரூபாய் செலவில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

வேலைவாய்ப்பு அளிப்பதையே நோக்க மாகக் கொண்டுள்ளதையும், வறட்சிக் காலத் தில் பயன்படக் கூடியவையும், பூமிக்கடியில் நீர் இருப்பைப் பெருக்குபவையுமான பணிகள் பல இத்தகைய பகுதிகளில் நிறைவேற்றப்படு வதற்காக ஆவன செய்யப்படுகின்றன. நெருக் கடியான வறட்சியில் நிறைவேற்றப்படும் இப் பணிகள், என்றும் நிலைத்து நிற்பனவாகவும் அமையும். சிறு பாசனத் திட்டங்கள், மழை நீரைத் தேக்கும் குட்டைகள், மண்வளப் பாதுகாப்புப் பணிகள், காடு வளர்ப்புப் பணி கள் ஆகியவையும் இப்பணிகளில் அடங்கும். இத்தகைய பணிகளை நிறைவேற்ற இயலாத போது, சாலைகளில் சரளைக் கற்களைப் பரப்பி இணைப்புச் சாலைகளை அமைப்பதற்கான ஒப்பு தலும் அளிக்கப்பட்டுள்ளது. வறட்சியால் பாதிக்கப்பட்ட ட்குதிகளில், வறட்சியால் நேர்ந்த துயரங்களைத் துடைக்கும் பணிகளில் செலவு எவ்வளவு நேர்ந்தாலும் அது ஒரு பொருட்டாகக் கருதப்பட மாட்டாது என்ப தும் தெளிவாக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரத்தில் நான் இராமநாதபுரம் மாவட்டத்தில் சுற்றுப்பயணம் செய்தபோது வறட்சி நிலைமைகளை நேரில் பார்த்ததால், இப்போது நிறைவேறி வரும் பணிகளில் கூடுத லாக 25,000 வேளாண்மைத் தொழிலாளர் களுக்கு வேலை வாய்ப்புக் கிட்டும் வகையில் 30 இலட்சம் ரூபாய் அளவிற்குக் கூடுதல் நிதி வசதி வழங்கப்பட்டுள்ளது. பாசன வரவு கால்வாய்களையும் சிறு பாசனத் திட்டங்களை யும் சீரமைத்தல் போன்ற நிலையான பலன ளிக்கும் திட்டங்களுக்கு இத்தொகை செல விடப்படும். இதைப் போலவே, திருநெல் வேலி, மதுரை மாவட்டங்களில் புதிய சிறு

பாசனத் திட்டங்களிலும் மண்வளப் பாது காப்பு, காடு வளர்ப்புத் திட்டங்களிலும் மேலும் 25,000 வேளாண்மைத் தொழிலாளர் களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் 31 இலட்சம் ரூபாய் அளவிற்குக் கூடுதல் நிதி வசதிக்காக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

## உயர்வகைப் பயிர்விளைச்சல் பெருகும்!

வேளாண்மை உற்பத்தியைப் பொறுத்த வரையில், உயர் வகைப் பயிர் விளைச்சலை விரிவுபடுத்தத் திட்டங்கள் தீட்டப் பட்டுள்ளன. இது குறித்து உயர்ந்த ரக உரம் முதலிய இடுபொருள்கள் வழங்கவும், பாசன நீரை ஏற்றவாறு பயன்படுத்தும் நடைமுறை களை அறிமுகப்படுத்தவும் ஏற்பாடுகள் செய் யப்பட்டுள்ளன. இந்த ஆண்டில் இம் மாநிலத் தில் 65 இலட்சம் டன் நெல்லும், 21 இலட்சம் டன் சிறு தானியங்களும் பயறு வகைகளும் உற்பத்தியாகும் என்று எதிர்பார்க்கப்படு கிறது.

தொழில் துறையைப் பொறுத்த வரை யில், மின் சக்தி உற்பத்தி பெருகியுள்ளது; எண்ணூரில் ஐந்தாவது மின் சக்தி உற்பத்தி நிலையம் செயல்படத் தொடங்கியுள்ளது. நெய்வேலியில் மின் உற்பத்தி உறுதியாகியுள் ளது. கேரள மாநிலத்தில் இடிக்கித் திட்டத் திலிருந்து மின் சக்தி சீராகக் கிடைக்கும் வாய்ப்பும் உருவாகி உள்ளது. இவை காரண மாகத் தொழில் துறையில் உற்பத்தி பெருகு வது உறுதி. தொழில் துறையில் தொழிலா ளர்களிடையே அமைதி நிலவி வருகிறது.





பிப்ரவரி முதல் நாளுக்குப் பிறகு, நிலைமை களில் வியக்கத்தக்க மாறுதல் விளைந்துள்ளது. வேலை நிறுத்தம், கதவடைப்பு முதலியவை களால் உற்பத்திக் குறைவோ, தொழில் தக ராறுகளோ உருவாகவில்லை. விவசாயத் தொழிலாளர்களுக்கும் குறைந்த அளவு ஊதிய வீதங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. அவற் றைக் கண்டிப்பாகச் செயல்படுத்தவும் திட்ட மிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு நில உச்சவரம்புச் சட் டத்தினை நமது தேசீயக் கொள்கைக்கேற்ப மாற்றியமைக்கவும், குத்தகை உரிமை முறை குறித்து முற்போக்குச் சட்டங்களை இயற்றவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இம் மாநிலத்தில் 1976 பிப்ரவரி முதல் 6,000 ஏக்கர் உபரி நிலங்களும், 33,000 வீட்டு மனைப் பட்டாக்களும் கிராமப் பகுதிகளில் வழங்கப் பட்டுள்ளன. இத்துறையில் இப்பணி மேற் கொண்டும் விரைவுபடுத்தப்பட்டு வருகிறது.

வேளாண்மைக்கு உதவும் உரம் முதலிய இடுபொருள்கள், முதலீடுகள் முதலி யனவற்றை உரிய காலத்தில் உழவர்களுக்குக் கிடைக்கச் செய்வது என்பது, வேளாண்மை உற்பத்தியில் முக்கியமானதொரு அம்சமாகும். இதற்குக் கடன் வசதி என்பது இன்றியமையா ததாகும். தமிழ்நாட்டில் கூட்டுறவு இயக்கம் செவ்விய முறையில் செயல்பட்டு வருவது இதற்கான நல்ல அறிகுறியாகும். அண்மைக் காலம் வரை, தமிழ்நாடு கூட்டுறவு இயக்கத் தின் நற்பெயருக்கு எவ்விதக் களங்கமும் நேர

வில்லை. என்றாலும், குறைகண்ட இடங்களில் அவற்றைக் களைய நடவடிக்கைகள் பல மேற்கொண்டுள்ளோம். முடங்கிக் கிடக்கும் சங்கங்களையும், போலிச் சங்கங்களையும் கலைத்து விட்டோம். நம்பிக்கைத் துரோகம், பணம் கையாடல் முதலான குற்றங்களுக்காகக் குற்றவியல் (கிரிமினல்) வழக்குகளும் விசாரணையில் உள்ளன. இதன் பேரில் விரைவிலேயே வழக்குகள் தொடர இருக்கின்றன. இப்படிப் பட்ட கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு இருப்பதை அனைவரும் ஆர்வத்தோடு வரவேற்று உள்ளனர். இதனால் கூட்டுறவு இயக்கம் புதிய பொலிவும் வலிவும் பெற்று இயங்கும் என்று உறுதியாக நம்புகிறோம்.

தமிழ்நாட்டில் அடுத்தடுத்து ஏற்பட்டு உள்ள வறட்சி நிலைமைகளை ரிசர்வ் வங்கியும், இந்திய அரசும் கருத்திற் கொண்டு கடன் வழங்குவதற்கான நிபந்தனையைத் தளர்த்த ஒப்புக் கொண்டுள்ளன. கடந்த ஆண்டில் வழங்கப்பட்ட கடன் அளவைத் தொடர்ந்து அளிக்கவும், மேலும் கடன் வழங்கு வசதி



களைப் பெருக்கவும் ஒப்புக் கொண்டுள்ளன. வசூலாகாமல் நிலுவையாக உள்ள கடன் தொகை எவ்வளவு இருந்தாலும் அதைச் செலுத்த வேண்டுமென்று வற்புறுத்தாமலேயே உழவர்களுக்குக் கடன் வழங்கவும் ரிசர்வ் வங்கி அனுமதி தந்துள்ளது. இச் சலுகை பொருளாதார வகையில் மிகவும் பின்தங்கிய சிறு உழவர்களுக்கு அளிக்கப்படும் பெருஞ் சலுகையாகும்.

## கொத்தடிமைகளுக்கு விடுதலை!



கொத்தடிமை முறை என்பது தமிழ் நாட்டில் நிலவவில்லை என்று கடந்த சில மாதங்கள் வரை மக்கள் நம்புமாறு செய்யப் பட்டனர். இப்போது தமிழ்நாட்டில் 2,155 பேர் கொத்தடிமைகளாக இருப்பது கண்டு பிடிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளனர். கொத் தடிமைகள் மேலும் இருந்தால் அவர்களைக் கண்டுபிடித்து விடுவிக்க மும்முரமான நட

வடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகளின் மறுவாழ்வுக்கான திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. அவர்களுக்கு உடனடியாக வேலையும், நீண்ட கால வேலை வாய்ப்பும் அளிக்கப்பட்டு, கட்டுண்டு கிடந்த இழி நிலையிலிருந்து அவர்கள் உண்மையிலேயே விடுதலை பெற எல்லா நடவடிக்கைகளும் தொடர்ந்து எடுக்கப்படும்.



கிராமப் பகுதிகளில் உள்ள சிறு உழவர்கள், மிகக் குறைந்த அளவில் நிலம் வைத்துள்ள உழவர்கள், நிலமற்ற தொழிலாளர்கள், கைத்திறப் பணியாளர்கள் ஆகியோருக்குக் கடன் நிவாரணம் அளிக்கும் வகையில் குடியரசுத் தலைவரின் சட்டம் ஒன்றையும் நாம் அதிகார முறையில் அறிவிக்க இருக்கிறோம். அதே சமயத்தில், தேவையுள்ளவர்

களுக்கு, சில வரையறைகளுக்கு உட்பட்டு, பயன் முறைக்கடன்களும், நகை அடைமானக் கடன்களும் வழங்கக் கூட்டுறவு வங்கிகள் மூலம் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மித மிஞ்சிய வட்டி வாங்கும் லேவாதேவிக் காரர் கள் மூலம் ஏற்படும் கொடுமைக்கு முடிவு கட்ட வேண்டியிருப்பதால், அரசுடைமையாக் கப்பட்ட வங்கிகளும் இம்முயற்சியில் வேண்டிய பங்கெடுத்துக் கொள்ளும் என்று நம்புகிறோம்.

மாணவர் சமுதாயத்துக்கு உதவும் வகையில், தொழில் நுட்பக் கல்விக் கூடங்கள், கல்லூரிகள், பள்ளிகள் எல்லாவற்றிலும் புத் தக வங்கிகள் நிறுவப்பட்டுள்ளன. இந்திய அரசு குறைந்த விலையில் காகிதம் வழங்குவதன் காரணமாக, நோட்டுப் புத்தகங்களும் பாட நூல்களும் மலிவு விலையில் கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மாணவர் விடுதி களில் உணவுக் கட்டணமாக ஒரு மாணவர் செலுத்தும் தொகை மாதம் ஒன்றுக்கு இருபத் தைந்து ரூபாய் வரையில் குறைந்துள்ளது. பேருந்துக் கட்டணங்களை அண்மையில் உயர்த் தியபோது, மாணவர் சலுகைக் கட்டணப் பயணச் சீட்டுகளின் விலை உயர்த்தப்படக் கூடாது என்றும் முடிவு செய்யப்பட்டது.





## நீதிமன்றங்களில் தமிழ்

அண்மையில் மாற்றியமைக்கப்பட்ட ஆட்சி மொழி ஆணைக் குழுவின் ஒத்துழைப்புடன் முக்கிய குற்றவியல் சட்டங்கள் அடுத்த நான்கு மாதங்களில் மொழி பெயர்க்கப்பட்டு விடும் என்பதையும், 1976-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14-ஆம் தேதியிலிருந்து, குற்றவியல்-சார்நிலை நீதிமன்றங்களில் தமிழ் மொழி பயன்படுத்தப்படும் என்பதையும் நான் மகிழ்ச்சியோடு அறிவிக்க விரும்புகிறேன். பிற நீதிமன்றங்களிலும், படிப்படியாகத் தமிழ் மொழியை நாம் பயன்படுத்த இயலும் என்றும் நம்புகிறேன்.

இருபது அம்சப் பொருளாதாரத் திட்டத்தில் ஒவ்வொரு அம்சத்திலும் நாம் அடைந்துள்ள முன்னேற்றத்தை இச்சிற்றுரையில் முழுவதுமாக எடுத்துக் கூற இயலாது. ஆனால், பிற மாநிலங்களோடு ஒப்பிட்டுப்

பார்க்கும் போது, காலங்கடந்து தமிழ்நாடு இத்திட்டத்தில் அடியெடுத்து வைத்தாலும், அது எந்த அளவுக்கு விரைந்து முன்னேறி வருகிறது என்பதை நான் சுருக்கமாகச் சுட்டியிருப்பதாக நம்புகிறேன். அரசு தன்னுடைய முயற்சிகளில் அயர்வடையாது; ஆர்வத்தோடு கடமைகளை நிறைவேற்றுபவர்கள் அதே ஆர்வத்துடன் குன்ருது தொடர்ந்து செயற்பட வேண்டும். இம்மாபெரும் திட்டத்தின் வெற்றிக்காகக் கட்டுப்பாட்டு உணர்ச்சியுடனும் தன்னம்பிக்கையுடனும் ஆர்வத்தோடும் உழைக்க வேண்டுமென்று இளைஞர்களைக் குறிப்பாகக் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அரசு ஊழியர்களுக்கு நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். கடந்த காலத்தில் நிகழ்ந்தவைகள், நிகழ்கால முன்னேற்றத்திற்குத் தடையாக நிற்பதை அனுமதிக்கக் கூடாது. தேச நிர்மாணத்திற்கான இத்திருப்பணிக்குத் தங்களை முழுவதுமாக அவர்கள் அர்ப்பணித்துக் கொண்டு, நன்றியுணர்வோடு நற்பணியாற்ற வேண்டும். தோல்விகளையோ, தவறுதல்களையோ இனிமேல் பொறுத்துக் கொள்ள முடியாது. அரசின் எந்தத் துறையிலும்



ஊழலோ, லஞ்சமோ, வேறு முறைகேடோ எதுவும் தலையெடுப்பதற்கு இடமே இருக்கக் கூடாது. மேலதிகாரிகள் தமது துறைகளில் திறமை, நேர்மை, நன்னம்பிக்கை முதலிய நற்பண்புகளை ஊக்கி உயர்த்த வேண்டும்.

இருபது அம்சத் திட்டம் என்பது நாம் மேற்கொண்ட புதிய முயற்சிகளுக்கெல்லாம் தொடக்கமேயாகும். இந்நிலையில், இது தொடர்பாக நமது பாரதப் பிரதமர் கூறியுள்ளதையே நினைவூட்ட விரும்புகிறேன்.

''மந்திரத்தால் ஏற்படுவது போன்ற மாற்றங்களையோ, கற்பனையான திடீர்த் திருப்பங்களையோ தயவுசெய்து எதிர்பார்க்காதீர்கள். வறுமையை அகற்றுவதற்கு ஒரே மந்திரம் தான் உள்ளது. அது தெளிவான சிந்தனை, திடமான மனம், கண்டிப்பு நிறைந்த கட்டுப்பாடு என்கிற இம்மூன்றின் அடிப்படையில் உருவாகின்ற கடுமையான உழைப்பேயாகும்''

நாம் அனைவரும் ஒரே அணியாகத் திரண்டு நின்று வலிமை படைத்தஇந்தியாவை —வளம் கொழிக்கும் தமிழ்நாட்டை உருவாக்கும் பெரும்பணியில் ஈடுபட உறுதி எடுத்துக் கொள்வோமாக!

வணக்கம்.

ஜெய் ஹிந்த்!

*[ தமிழ்நாடு ஆளுநர் திரு. மோகன்லால் சுகாதியா அவர்கள் 1—7—1976 - ல் சென்னை வானொலியில் ஆற்றிய உரையின் தமிழாக்கம். ]*

# தமிழரசு

## 1-7-76 இதழுடன்

## இலவச இணைப்பு

தமிழரசு அச்சகம், சென்னை-600 002.

# வெற்றிப் பாதையில்

குடியரசுத் தலைவர் ஆட்சி தமிழகத்தில் அமல் செய்யப்பட்டதைத் தொடர்ந்து கட்டுப்பாடு கட்டிக் காக்கப்பட்டு வருகிறது. 20-அம்சத் திட்டத்தின் நற்பயனாக, பல துறைகளிலும் தமிழகம் விரைந்து முன்னேறி வருகிறது.

இதோ எமது சாதனைப் பட்டியல்:

- அரிசியின் விலை 40% குறைந்துள்ளது. இதர அத்தியாவசியப் பண்டங்களின் விலைகளும் கணிசமாகக் குறைந்துள்ளன.
- 32,700 பேருக்கும் அதிகமாக, வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.
- இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கொத்தடிமை முறையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.
- விவசாயத் தொழிலாளருக்கான குறைந்தபட்ச ஊதியம் உயர்த்தப்பட்டுள்ளது.
- 1976-ம் ஆண்டில் ஐந்து பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்பட உள்ளன.
- மின்சக்தி உற்பத்தி பெருமளவில் அதிகரிக்கப்பட்டுள்ளது. மாநிலத்துக்குத் தேவையான மின்சக்தி முழுவதும் தடையின்றிக் கிடைக்கின்றது.
- நூல் வினியோக அதிகரிப்பின் மூலம் நெசவுத் தொழிலுக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது.
- வரி ஏய்ப்பைத் தடுப்பதன் மூலம் வணிக வரி வருவாயில் மேலும் ரூ. 50 கோடி வசூலிக்க முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.
- கள்ளக் கடத்தல்காரர்களின் சொத்துக்களைப் பறிமுதல் செய்ய தனிச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.
- பள்ளிக்கூடப் பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்களின் விலைகள் மிகவும் குறைக்கப்பட்டுள்ளன.
- மாணவர் விடுதிகளுக்கு உணவுப் பொருட்கள் மலிவு விலையில் வழங்கப்பட்டுள்ளன.
- தொழில் பயிற்சித் திட்டத்தின் கீழ் நூற்றுக் கணக்கான பயிற்சியாளர்கள் தேர்ந்து எடுக்கப்பட்டுள்ளனர்.